பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 225 ஆனி 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை 12 ஜூலை 2019 வள்ளுவர் ஆண்டு 2050

Now in JAFFNA
Dual MBA in
Marketing | Administration | HR
BLC CAMPUS
0777 174 443
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 493 6666
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk

## இந்த அரசைக் கவிழ்த்துவிட்டு அடுத்து நாம் என்ன செய்வது?

### சிந்திக்க வேண்டும் என்கிறார் சம்பந்தன்

கொழும்பு, ஜூலை 12
'இந்த அரசுக்கு நாங்கள் ஆதரவு வழங்குவதை எமது மக்கள் விரும்பவில்லை. அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு கோரி திருகோணமலையில் எனது வீட்டின் முன்னாள் இன்று மக்கள் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். ஆனால், இந்த அரசைக் கவிழ்த்துவிட்டு நாம் என்ன செய்யப் போகின்றோம் என்று சிந்திக்க வேண்டும்.'
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார். 19



# தப்பியது அரசு!

## கைகொடுத்தது கூட்டமைப்பு மண்கவ்வியது பிரேரணை

கொழும்பு, ஜூலை 12
அரசுக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்றுத் தோற்கடிக்கப்பட்டது. பிரேரணைக்கு ஆதரவாக 92 வாக்குகளும், எதிராக 119 வாக்குகளும் கிடைத்தன.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரேரணையை எதிர்த்து அரசுக்கு ஆதரவாக வாக்களித்தனர். இதனால் குறித்த பிரேரணை 27 மேலதிக வாக்குகளினால் தோல்வியடைந்தது. 19

## சம்பந்தனின் வீட்டுக்கு முன் நேற்றுச் சிலர் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூலை 12
ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் சிலர் திருகோணமலையில் உள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் வீட்டின் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.
மட்டக்களப்பு மற்றும் திருகோணமலையைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்றங்கள் சிலவற்றின் 19

## கன்னியாவில் மீண்டும் அமைகிறது விகாரை!

திருகோணமலை, ஜூலை 12
திருகோணமலை கன்னியா வென்னீரூற்றுப் பகுதியில் மீண்டும் புத்தவிகாரை அமைக்கும் பணியில் தொல்பொருள் திணைக்களம் ஈடுபட்டுள்ளது என்று தென்கயிலை ஆதீன குரு முதல்வர் குற்றஞ்சாட்டியுள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் 19

## கல்முனை வடக்கை உடன் தரமுயர்த்துக

### கூட்டமைப்பின் நிபந்தனை இது

யாழ்ப்பாணம், ஜூலை 12
அரசு மீதான நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எதிர்த்து அரசுக்கு தனது ஆதரவை வெளிப்படுத்த வேண்டுமாயின் கல்முனை வடக்கைத் தரமுயர்த்தித் தரவேண்டும் என்று தலைமை அமைச்சர் ரணிலுக்கு நேற்றுக் கடும் நிபந்தனை விதித்தது தமிழ்த் தேசியக் 04

## கல்முனை வடக்கை பிரிக்க வேண்டாமாம்

யாழ்ப்பாணம், ஜூலை 12
கல்முனை வடக்கு பிரதேச சபையைத் தனியான சபையாக பிரிக்கும் செயலுக்கோ அல்லது தனித்த செயற்பாட்டிற்கோ அனுமதிக்க வேண்டாம் எனக் கோரிக்கை விடுத்து கல்முனையில் இருந்து 04

## தொடருந்து விபத்தால் இளைஞன் உயிரிழப்பு

வவுனியா, ஜூலை 12
வவுனியா புதூர் புளியங்குளம் பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற தொடருந்து விபத்தில் சிக்கிய இளைஞன் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார்.
நேற்று முன்தினம் மாலை 3.30 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற கடுகதி தொடருந்துடன் புதூர் பகுதியைச் சேர்ந்த இலகநாதன் நர்மதன் (வயது - 19) என்ற நபர் 19

## அரச தலைவர் தேர்தலைத் தீர்மானிக்கும் கலந்துரையாடல் எதிர்வரும் 22ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஜூலை 12
இலங்கையின் அரச தலைவர் தேர்தலை நடத்துவதற்குரிய திகதி எது என்பதனை உறுதியாகத் தீர்மானிக்கும் கலந்துரையாடல் எதிர்வரும் 22ஆம் திகதி ஆணைக்குழுவில் இடம்பெறவுள்ளது என்று அதன் உறுப்பினர் இரத்தினஜீவன் எச் ஹூல் தெரிவித்தார்.
இலங்கையின் அரச தலைவர் தேர்தல் எதிர்வரும் டிசம்பர் மாதம் 7ஆம் திகதிக்கு முன்னர் நடத்த வேண்டியது சட்ட ஏற்பாடாகவுள்ள 19

## தொண்டமான் தலைமையில் புதிய தேசிய கூட்டணி உதயம்

### ஜனநாயகப் போராளிகள் கட்சியும் கைகோர்ப்பு; இது மகிந்த ஆதரவுக் கூட்டணி என்கிறார் விக்கி

கொழும்பு, ஜூலை 12
மலையகம், வடக்கு மற்றும் மேல் மாகாணம் அடங்கலாக புதிய தேசிய கூட்டணி ஒன்று கொட்டகலையில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் 19

## நடையைக் கட்டிய நடப்புச் சம்பியன்!

லண்டன், ஜூலை 12
உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் நடப்புச் சம்பியன் ஆஸ்திரேலியாவை மிகமிக இலகுவாக வெளியேற்றியது இங்கிலாந்து அணி. இந்த வெற்றியின் மூலம் சுமார் 27 ஆண்டுகளின் பின்னர் இங்கிலாந்து அணி இறுதிக்குச் சென்றுள்ளது. நாளைமறுதினம் இடம்பெறும் இறுதியாட்டத்தில் இங்கிலாந்து – நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன. இந்த இரு அணிகளும் இதுவரை கிண்ணத்தைக் கைப்பற்றவில்லை. (ம)

## அமைச்சுப் பதவியேற்க முஸ்லிம் அமைச்சர்கள் நேற்று கூட்டாக முடிவு

கொழும்பு, ஜூலை 12
பதவி விலகிய முஸ்லிம் அமைச்சர்கள் தமது அமைச்சுப் பொறுப்புக்களை மீண்டும் ஏற்பது என்று முடிவெடுத்துள்ளனர்.
ஏற்கனவே பதவி வகித்த அமைச்சுப் பொறுப்புக்களையே அவர்கள் மீண்டும் ஏற்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## கூட்டமைப்புக்கு இலஞ்சம்; இதனால் எம்க்குத் தோல்வி

### இப்படிக் கூறுகின்றார் அநுரகுமார

கொழும்பு, ஜூலை 12
'தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இறுதி நேரத்தில் அரசு வழங்கிய இலஞ்சத்தால் எம்மால் அரசுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை 19



அனைவருக்கும் ஏற்ற DFCC வங்கி

வங்கியென்றால் அது அனைவருக்கும் ஏற்ற வங்கியாக இருக்கவேண்டும். சேமிப்புக் கணக்கு, நடைமுறைக் கணக்கு, நிலையான வைப்பு, கிரடிட் காட், லீசிங், வீட்டுக் கடன், தனிப்பட்ட கடன், வேர்ச்சுவல் வொலட், வியாபார நிதிச் சேவைகள் உட்பட அனைத்து வங்கிச் சேவைகளையும் வழங்கும் வங்கிதான் DFCC வங்கி.

24 மணிநேர அழைப்பு நிலையம்: 0112 350000
www.dfcc.lk
DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# ஜாதகத்தில் 'மாந்தி' நின்ற பலன்கள்



ஜாதகத்தில் 'மா' அல்லது "குளி" என குறிப்பிடப்படும் மாந்தி எனும் காரகம் (கிரகம் அல்ல ) எந்த மாதிரியான பலன்களை அந்த ஜாதகருக்கு தர வல்லது என்று பார்ப்போம். மாந்தி என்பதுதான் சரியான பதமாகும்.
குளிகன் அல்லது குளிகை என்பது வேறு , மாந்தி என்பது வேறு என்பதனை நினைவில் கொள்ளுங்கள்.
மாந்தி தான் இருக்குமிடம் அதற்கு நேர் ஏழாமிடம் தான் இருக்குமி டத்திற்கு முன்னே உள்ள இடத்தையும் (2ஆம் வீடு ) தான் இருக்குமிடத்திற்கு பின்னே உள்ள இடத்தையும் (12ஆம் வீடு) பார்க்கும் வலிமையை பெற்றவராகும். தான் இருக்குமிடம் , பார்க்கும் இடம் இவைகளுக்கு தனது நிலையைப் பொறுத்து , பாவகத்தின் தன்மையை முழுமையாக மாற்றி அமைக்கும் பலம் படைத்தவர்.
உதாரணமாக : அழகு தரும் லக்கினமாக இருந்து இவர் முழு பலத்துடன் இருந்துவிட்டால் அவலட்சணமான உருவத்தை தந்துவிடுவார்.
பன்னிரெண்டு பாவங்களில் இவர் இருந்தால் எம்மாதிரியான பலன்களைத் தருவார் என பொதுவான பலன்கள் இங்கே தரப்படுகின்றது. இது பொதுப் பலனே தவிர முழுபலன் அல்ல. காரணம் ஜாதகத்தில் உள்ளபலம்பொருந்திய சுபக் கிரஹ பார்வை , மாந்தியின் தாக்கத்தினை குறைக்கலாம். இப்போது பன்னிரண்டு பாவங்களிலும் மாந்தி இருந்தால் என்ன பலன் என்று பார்ப்போம்.

1ஆம் இடத்தில(லக்கினத்தில்) மாந்தி இருந்தால் குண்டான உடலமைப்பு. உடல் உபாதைகளும், மறைமுக நோய்களும், அடக்கம் மற்றும் வெட்கம் இல்லாதவராகவும், மனக்கவலை அதிகம் கொண்டவராகவும், குறும்புத்தனம் கொண்டவராகவும், சுறுசுறுப்பானவராகவும் இருப்பார்கள். சுபகிரக சேர்க்கை மற்றும் பார்வை இருந்தால் பொன், பொருள் சேர்க்கை உண்டாகும்.

2ஆம் இடத்தில் மாந்தி அமைந்திருந்தால் குடும்ப வாழ்க்கை நிம்மதி இல்லாதவராகவும், பேச்சில் தடுமாற்றமும், கீழ்த்தரமான புத்தி கொண்டவராகவும், வீண் பொருள் விரயம் செய்பவராகவும், கண்களில் நோய், தீய பழக்கம் கொண்டவராகவும் இருப்பர்.
3ஆம் இடத்தில் மாந்தி அமைந்திருந்தால் நல்ல உடலமைப்பு, தைரியம், துணிவு, பலரை வழிநடத்தும் திறன், புதிய முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றிகளை குவிக்கும் சூழ்நிலை ஆகியவை உண்டாகும்.

4ஆம் இடத்தில் மாந்தி அமைந்திருந்தால் நிம்மதியற்ற நிலை, உடல் நிலை பாதிப்பு, வீட்டு மனை சேர்க்கை உண்டாகத் தடை, தாயாருடன் சுமூக நிலை இல்லாமை ஆகியவை ஏற்ப்படும்.

5ஆம் இடத்தில் மாந்தி அமைந்திருந்தால் மனநிலை பாதிப்பு, புத்திர தோஷம் பாதிப்பு, குறைந்த வயதில் கண்டம், செல்வம் செல்வாக்கை இழக்கும் நிலை, கடவுள் நம்பிக்கை இல்லாத்வராகவும், சுய இன்பப்பழக்கம் அல்லது முறையற்ற உறவு கொண்டவராகவும் இருப்பார்கள்.

6ஆம் இடத்தில் மாந்தி அமைந்திருந்தால் நீண்ட ஆயுள், பிறருக்கு உதவி செய்யும் மனோபாவம், ஆரோக்கியமான வாழ்வு, எதிர்கள் இல்லாத நிலை அல்லது எதிரிகளிடம் எப்போதும் வெற்றி, வாழ்வில் படிப்படியான உயர்வு பெறுவார்கள்.

7ஆம் இடத்தில் மாந்தி அமைந்திருந்தால் மெலிந்த உடல், இல்லற வாழ்வில் நிம்மதியற்ற நிலை, குறைவான நட்பு, மனைவியின் சொத்தை அழிக்கும் நிலை, நம்பியவர்களால் ஏமாற்றப்படுதல் ஆகியன ஏற்படும்.

8ஆம் இடத்தில் மாந்தி அமைந்திருந்தால் அதிக பசி கொண்டவராகவும், மறைமுக நோய் கொண்டவராகவும், அதிக கவலை கொண்டவராகவும், எதிலும் தோல்வியே ஏற்படும் நிலையும், வீண் விரயம் செய்பவராகவும் இருப்பர்.

9ஆம் இடத்தில் மாந்தி அமைந்திருந்தால் மெலிந்த உடலமைப்பு கொண்டவராகவும், தந்தைக்கு தோஷம் உடையவராகவும், தவறான பாதைக்கு செல்பவராகவும், அதனால் தவறான பழக்கவழக்கங்களும்,முறையற்ற பாலுணர்வு உடையவராகவும், எப்பொழுதும்சோதனை உடையவராகவும், பணக்கஷ்டம் உடையவராகவும் இருப்பர்.

10ஆம் இடத்தில் மாந்தி அமைந்திருந்தால் சுயநலம் மிக்கவராகவும், மற்றவர் களைப் பற்றி கவலை இல்லாதவர்களாகவும், நன்றாக உழைக்கக் கூடிய வராகவும், வாழ்வில் படிப்படியாக முன்னேற்றம் ஏற்ப்படும்.

11ஆம் இடத்தில் மாந்தி அமைந்திருந்தால் செல்வம், செல்வாக்குடன், நல்ல மனைவி, மிகுந்த புகழ், நெருங்கியவர்களுக்கு உதவி புரியும் தன்மை, தெய்வ நம்பிக்கை கொண்டவராகவும், குறுகிய கால்களை கொண்டவராகவும் இருப்பர்.

12ஆம் இடத்தில் மாந்தி அமைந்திருந்தால் வீண் விரயம் செய்பவராகவும், இழிவான செயல்களை செய்பவராகவும், உடலில் குறையுடன், குறைவான சந்தோசம் கொண்டவராகவும், குடும்ப வாழ்வில் சோகம், சோதனை கொண்டவராகவும், சோம்பல் **கொண்டவராகவும் இருப்பர்.**



# வீட்டின் பூஜை அறை எப்படி இருக்க வேண்டும்?

- வீட்டில் உள்ள அறைகளில் பூஜை அறை ஒரு முக்கியமான அங்கமாகும்.
- அந்தவகையில் பூஜை அறையில் தவிர்க்கவேண்டிய சில விஷயங்கள் என்ன என்ன என்பதை இங்கு பார்ப்போம்.
- பூஜை அறையிலோ, வீட்டிலோ தெய்வப் படங்களை கிழக்கு நோக்கி வைக்க வேண்டும். வணங்குபவர்
- தெற்குப் பகுதியில் வடக்குத் திசையைப் பார்த்தவாறு அமர்ந்து வணங்கலாம்.
- தெற்கு நோக்கி தெய்வப் படங்களை வைக்கக் கூடாது. கிழக்குப் பக்கம் முடியாவிட்டால் தெற்குப் பக்கத்தைத் தவிர பிற திசைகளைப் பார்த்து படங்களை வைக்கவும்.
- நிவேதனம் செய்த தேங்காயை சமையலில் சேர்த்து அந்த உணவை மறுபடியும் சாமிக்கு நிவேதனம் செய்யக்கூடாது.
- அன்னம் முதலியவற்றை எவர்சில்வர் பாத்திரங்களில் நேரடியாக வைத்து தெய்வங்களுக்கு நிவேதனம் செய்யக்கூடாது. பாத்திரத்தில் இலை வைத்து அதில் உணவை வைத்து நிவேதனம் செய்யலாம்.
- திங்கட்கிழமையன்று பஞ்சால் செய்யப்பட்ட விளக்கு திரியை கையால் தொடக்கூடாது. தனது
- வீட்டில் கோலம் போடாமலும் விளக்கேற்றாமலும் ஆலயங்களுக்கு செல்லக்கூடாது.
- எரியும் விளக்கில் எண்ணெய் அல்லது நெய்யை கையால் தொடுவதும் அதன் பிறகு அதைத் தன் தலையில் தடவிக் கொள்வதும் கூடாது.
- சாமி படங்களில் உலர்ந்த பூக்களை விட்டு வைக்கக் கூடாது.
- விஷ்ணுவை வணங்கி வீடு திரும்பும்போது லட்சுமி தேவியும் நம்முடன் நம் வீட்டுக்கு வருகிறாள் என்பது ஐதீகம். ஆகவே விஷ்ணு கோவிலிலிருந்து வீடு திரும்புமுன் அங்கே உட்காரக் கூடாது.நல்லது.

# ஜூலை மாத ராசிபலன்கள் - 2019



செவ்வாய் பகவானை ராசி நாதனாகக் கொண்ட விருச்சிகராசி நேயர்களே.. இந்த மாதம் உங்களுக்கு அற்புதமான மாதமாக அமைந்துள்ளது.
உங்கள் ராசி நாதன் செவ்வாய் பகவான் பாக்ய ஸ்தானத்தில் இருக்கிறார். மாத பிற்பகுதியில் சூரியபகவானும் உங்க பாக்கிய ஸ்தானத்திற்கு வரப்போகிறார். செவ்வாய் ஒன்பதாம் வீட்டில் நீசமாக இருப்பதால் உங்களுக்கு தடைகளாக இருந்தாலும் நன்மையாகவே முடியும். உடல் நலப்பிரச்சினைகள் சரியாகத் தொடங்கும். உடல்நலம் சார்ந்த பிரச்சினைகள் சரியாகும். வியாபார ரீதியாக இருந்த தடைகள் நீங்கும். இரண்டாம் வீட்டில் சனி கேது இருப்பதால் குடும்பத்தில் வாக்குவாதங்களை




தவிர்த்து விடுங்கள். சின்ன பிரச்சினைகள் கூட அப்புறம் பூதாகரமாக மாறி விடும். பெண்களைப் பொறுத்தவரை உடல் நலத்தில் அக்கறை எடுத்துக்கொள்ளுங்கள். நிறைய பணம் கிடைக்கும் வீடு மனை வாங்கும் யோகம் வரும். விசா தொடர்பான பிரச்சினைகள் தீரப்போகிறது. குழந்தைகள் வளர்ப்பில் கவனம் செலுத்துங்கள். ஜென்மகுரு தனிமையில் போராளியாய் குணத்தை கொடுக்கும். உங்கள் ராசி நாதன் மீது குரு பார்வை இருப்பதால் பிரச்சினைகள் சுமூகமாக முடியும்.
எட்டாம் இடத்தில் சூரியன், சுக்கிரன் ராகு சேர்க்கை சின்னச் சின்ன மன உளைச்சலை தருவார்.
17ஆம் திகதி சூரியன் நகர்ந்து 9ஆம் வீட்டிற்கு நகர்வதால் பிரச்சினைக்கு முடிவு கிடைக்கும். மாத இறுதியில் சுக்கிரனும் உங்கள் பாக்ய ஸ்தானத்துக்கு நகர்வதால் கஷ்டங்கள் விடுபடக்கூடிய காலம் வந்து விட்டது. பிரச்சினைகளில் இருந்து முடிவு கிடைக்கும். உங்களுக்கு வரும் சோதனைகளை சந்திக்கும் பலம் கிடைக்கும். வியாழக்கிழமைகளில் குரு ராகவேந்திரரை வணங்க நன்மைகள் நடைபெறும்.

# #இந்தியா / நியூசிலாந்து

உலகக் கிண்ண விளையாட்டு



தோனி... எந்த விதமான காலகட்டத்திலும் மறக்க முடியாத ஒரு தலைசிறந்த கேப்டன்...




உனக்கு இந்த கிரிக்கெட்டே வேணாம் போயிரு! சத்தியம் பண்ணு!

**#தினேஷ் கார்த்திக்!**



twitter

Sathish@actorsathish



மிகச்சிறந்த இந்திய அணி... மிகச்சிறந்த போராட்டம்..... ஆனந்தக் கண்ணீராக வர வேண்டியது.. அதிர்ச்சிக் கண்ணீராக வருகிறது..

ஷிவானி சிவக்குமார்



என்ன சொன்னாலும், எவ்ளோ கிண்டல் செய்தாலும்.!? இந்திய கிரிக்கெட்டின் ஒரே மன்னன் #டோனிதான்

Gobinath Chandran



ஜெயிக்கிறமோ தோற்கிறோமோ அது வேற விஷயம். நிச்சயம் போராடணும். #ஜடேஜா


Captain America™



செத்தாலும் எதிரிக்கு ரெண்டு அடிய விட்டு மரணபயத்தை அவன் கண்ணுல பாத்துட்டுதான் நாம சாகனும்..

#ஜடேஜா





# ஒக. 15 இல் ஜெயம்ரவியின் 'கோமாளி' வெளியாகிறது

'அடங்கமறு' படத்தை தொடர்ந்து ஜெயம் ரவி நடிப்பில் உருவாகி வரும் படம் 'கோமாளி'. இந்த படத்தில் ஜெயம் ரவி, ராஜா, ஆதிவாசி, பிரிட்டிஷ் காலத்து அடிமை, 1990களில் வாழ்ந்த இளைஞர் உள்பட 9 வேடங்களில் நடித்திருக்கிறார். இதில், ஜெயம் ரவியுடன் முதல் முறையாக காஜல் அகர்வால் ஜோடி சேர்ந்திருக்கிறார்.

படத்தின் இன்னொரு கதாநாயகியாக சம்யுக்தா ஹெக்டே நடித்திருக்கிறார். கே.எஸ்.ரவிகுமார், யோகி பாபு இருவரும் முக்கிய வேடங்களில் நடிக்கிறார்கள்.

இந்த நிலையில், இந்தப் படத்தின் வெளியீட்டுத் திகதியை படக்குழு அறிவித்துள்ளது. அதன்படி வருகிற ஒகஸ்ட் 15ஆம் திகதி இந்தியாவின் சுதந்திர தினத்தன்று இந்தப் படம் திரைக்கு வருகிறது.




**இந்திய அணி இப்படியாச்சே!**








பல கோடி இதயங்கள் நொருங்கிய தருணம்

## கல்முனை வடக்கை பிரிக்க...

சுமார் 80 பேர் நேற்றையதினம் தலைமை அமைச்சர் அலுவலகம் ஆகியவற்றுக்கு முன்னால் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலைத் தடுக்கத் தவறிய அரசினை வீழ்த்த வேண்டும் என ஜே.வி.பி சமர்ப்பித்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்துக்கு எதிராக வாக்களிப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முக்கிய விடயமாக 35 ஆயிரம் தமிழ் மக்களின் இருப்பான கல்முனை விடயத்தையே கையில் எடுக்கவுள்ளது என்று தகவல் பரவியதை அடுத்தே கல்முனையில் இருந்து சிலர் புறப்பட்டுச் சென்று இவ்வாறு கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-105)

## கல்முனை...

கூட்டமைப்பு.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கடும் அழுத்தத்தை அடுத்து, நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தால் கல்முனை வடக்கு உடன் தரமுயர்த்தப்படும் என்று தலைமை அமைச்சர் எழுத்தில் வாக்குறுதி வழங்கியதை அடுத்தே தீர்மானத்த்தை எதிர்த்து கூட்டமைப்பு வாக்களித்தது. இந்த வாக்குறுதியைப் பெறுவதற்காக நேற்று மாலை 6.10 மணிவரை கூட்டமைப்பு கிடுக்குப் பிடியில் இருந்தது என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-105)

# புத்திசாலிச் சிறுவன்

ஒரு நாட்டில் ஒரு சிறுவன் இருந்தான் அதே ஊரில் ஐந்து என்ற பெயருடைய சூனியக்காரியும் இருந்தாள். அவளுக்கு அப்படி ஒரு பெயர் இருப்பது யாருக்கும் தெரியாது. தன்மாளிகைக்குள் வந்து எவர் தன் பெயரைக் கூறுகிறார்களோ அவர் இறந்து விடுவார் என்ற சாபத்தையும் வைத்திருந்தாள். தன் மாளிகைக்குள் வருகின்றவர்களை எப்படியாவது கொல்ல வைக்க வேண்டும். அதற்கு என்ன செய்யலாம் என சிந்தித்தாள். அழகும் கலை வேலைப்பாடுகளும் நிறைந்த நாற்காலிகள் ஐந்து செய்வித்தாள். தான் இருக்கும் அறையில் அவற்றை வைத்தாள். யார் அவளைப் பார்க்க வந்தாலும் இங்கே எத்தனை நாற்காலிகள் உள்ளன? எண்ணிச் சொல்லுங்கள்" என்பாள். அப்போது அவர்கள் ஒன்று. இரண்டு . மூன்று, நான்கு, ஐந்து என்று எண்ணுவார்கள். ஐந்து என்று சொன்னதும் அவர்கள் சூனியக்காரியின் சாபப்படி இறந்து விடுவர். அப்போது இறந்தவர் உடலை அவள் தின்று விடுவாள். இப்படியே தொடர்ந்து இது நடந்து வந்தது.

சூனியக்காரியைச் சந்திக்கும் வாய்ப்பு அந்தச் சிறுவனுக்குக் கிடைத்தது. முன்னதாகவே அவன் அவள் மீது ஐயம் கொண்டிருந்தான். அவனை வரவேற்ற அவள் "இங்கே எத்தனை கதிரைகள் உள்ளன? எண்ணிச் சொல்"என்றாள். குழந்தை கூட இதனைச் சொல்லுமே. எதற்கு இவள் எண்ணச் சொல்கிறாள். இதில் ஏதோ சூழ்ச்சியுள்ளது என அவன் நினைத்தான். ஒன்று. இரண்டு. மூன்று. நான்கு என்று எண்ணினான். அதன் பின் அவன் ஐந்தாவது கதிரையில் அமர்ந்து கொண்டு "இதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்" என்றாள். "இப்படி எண்ணக் கூடாது. இன்னொரு முறை எண்ணிச் சொல்" என்றாள். சூனியக்காரி மீண்டும் அவன் ஒன்று. இரண்டு. மூன்று. நான்கு என எண்ணி விட்டு முன்போலவே ஐந்தாவது கதிரையில் அமர்ந்து "இதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்" என்றான். திரும்பத் திரும்ப அவன் இதையே செய்வதைக் கண்டு எரிச்சல் அடைந்தாள் சூனியக்காரி. மீண்டும் அவள் சற்று உரத்த குரலில் "நீ எண்ணுவது கொஞ்சமும் சரியில்லை" என்றாள். நான் எப்படி எண்ண வேண்டும் என்று நீங்கள் சொல்லித் தாருங்கள்" என்றான். சிறுவன் அப்போது சூனியக்காரி ஒன்று, இரண்டு. மூன்று. நான்கு. ஐந்து எனச் சொல்லவேண்டும்" என்றான். ஐந்து என்று கூறியதும் அவள் இறந்து விழுந்தாள். நான் கவனமாக இருந்ததால் உயிர்பிழைத்தேன். சூனியக்காரியும் செத்து ஒழிந்தாள் என்ற மகிழ்ச்சியில் அங்கிருந்து சென்றான் அந்தப் புத்திசாலிச் சிறுவன்.



**பெண் உதவியாளர் தேவை**

ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் **பல் மூக்கு கண்ணாடியகத்துக்கு ஸ்தாபனத்திற்கு** பெண் உதவியாளர் தேவை. **யாழ். மாநகர சபை எல்லைக்குள் உட்பட்டவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.**

கல்வித் தகைமை: (சாதாரணதரம்)

**077 311 8354, 021 222 7893**

**16ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

பிறப்பு 28 . 03 . 1929



இறப்பு 28 . 06 . 2003

அமரர்

**பொன்னையா தங்கராசா**

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து
வழிகாட்டிய எங்கள் அப்பாவே!
உங்கள் நினைவுகளில்
மிதக்கின்றோம் அப்பா!

மகன் – குருபரன்

**மரண அறிவித்தல்**



**சத்தியதேவி சிவபாலன்**

சந்தை வீதி. உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும். வசிப்பிடமாகவும் கொண்ட சத்தியதேவி சிவபாலன் 07.07.2019 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம்-கமலாம்பிகை தம்பதியரின் மகளும். காலஞ்சென்றவர்களான வைரமுத்து-யோகம்மா தம்பதியரின் மருமகளும். காலஞ்சென்ற சிவபாலனின் அன்பு மனைவியும். ஜெகன் (கனடா). ஜெயந்தன் (கனடா). ஜசிந்தா (பிரான்ஸ்). ஜானுஜா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும். சுசிதா. பிறேம்குமார். கவியரசன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும். நதுஜன். தர்மியா. ஆயுசன். கவன். நிதுசன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.07.2019 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று. பூதவுடல் வல்வை இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சந்தை வீதி, உடுப்பிட்டி, குடும்பத்தினர்

**0016475357482, 077 964 0142**

# மீனவர் வாடியொன்று முல்லையில் எரிப்பு!

முல்லைத்தீவு. ஜூலை 12

முல்லைத்தீவு அளம்பில் வடக்கு உப்புமாவெளிப் பகுதியில். இனந்தெரியோதாரால் மீனவர் வாடியொன்று நேற்று இரவு எரிக்கப்பட்டுள்ளது. பிறிதொருவருடைய அனுமதிப் பத்திரத்தில் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டுவந்த வெளிமாவட்ட மீனவர் ஒருவருடைய வாடியே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது: குறித்த வாடிக்குரிய வெளிமாவட்ட மீனவர் அனுமதிப்பத்திரமில்லாது. வேறு ஒருவருடைய அனுமதிப் பத்திரத்தில் தொழிலை மேற்கொண்டதுடன். உப்புமாவெளி மீனவர் சங்கத்துடனும் கடந்த காலங்களில் முரண்பட்டார் என்று அந்தப் பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர். இத்தகையதொரு பின்னணியிலேயே குறித்த வாடி எரிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் இரு மீனவர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (ம-26)

**மரண அறிவித்தல்**

பிறப்பு 19 . 03 . 1935



இறப்பு 11 . 07 . 2019

**திருமதி யோசப்பின் வேதநாயகம் (குலம் அக்கா)**

யாழ்ப்பாணம் குருநகரை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி யோசப்பின் வேதநாயகம் (குலம் அக்கா) நேற்று 11.07.2019, காலமானார். அன்னார் அந்தோனிமுத்து வேதநாயகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிமியோன் - அன்னம்மா தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்ற மாட்டினின் (OIR பாடசாலையின் உதவி அதிபர்) சகோதரியும் மங்கையர்க்கரசி - அன்ரன் (கல்யாணி), அழகேஸ்வரி - சிவநாதன் (மனோ) ,அங்கயற்கண்ணி - வரதராஜப் பெருமாள் (கௌரி)- போல் பிரகலாதன், ஆண்சரத்மதி ,சமரக்கொடி (மதி) , நளினகாந்தி றோஸ் (நளினி) , பூங்கோதை அல்போன்ஸ் (திரு) ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற அன்ரன், சிவநாதன் , வரதராஜப்பெருமாள் , சமரக்கொடி, றோஸ் ,அல்போன்ஸ், திருமதி ஜோசனா பிரகலாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

அ. வரதராஜப் பெருமாள் 0094768679292
றோய் டன்ரன் 0094779970815
போல் பிரகலாதன் 00447944474839

36A. கடற்கரை வீதி . குருநகர்,யாழ்ப்பாணம்.

## வேள்விப் பொங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 12

வடமராட்சி புலோலி குரும்பை கட்டி ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த வேள்விப் பொங்கலானது இன்று வெள்ளிக்கிழமை இரவு 9 மணியலவில் வளந்து கட்டல் பூசையுடன் ஆரம்பமாகின்றது. நாளை சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் சிறப்பு வேள்விப் பூசைகளும் மடை வைப்பும் நடைபெறவுள்ளன. (ம)

# வேலைவாய்ப்பு

இந்து. பௌத்த கலாச்சார பேரவையினால் நடாத்தப்படும் இரண்டாம் மொழிகற்கை நெறிக்கு வளவாளர் தேவை.

- கிளிநொச்சி • முல்லைத்தீவு • வவுனியா • மன்னார்.

**வளவாளர்களிற்கான தகைமைகள்**

* க.பொ.த. உயர்தரத்திற்கு மேல் கல்வி கற்றிருத்தல்
* அரசாங்க மொழியியல் கற்கை நிலையங்களில் கற்றுத்தேறிய அடிப்படை சிங்கள மொழியை தமிழ் மொழியில் கற்பிப்பதற்கு முன் அனுபவம் உள்ள வளவாளர்கள் தேவை.
* இளைப்பாறிய ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

கீழ் காணும் தொலைபேசி இலக்கமூடாக மேலதிக தகவல்களைப் பெறலாம்.

**விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:**

Secretary,
Head Office, Hindu Buddhist Cultural Association
Sadaham Sevana
International Buddhist information and Reserch Institute
No: 172, Gothami Road,
Rajagiriya, Srilanka
Contact No: 011 714 0505/ 076 181 4183/076 060 0490
Email: hbcal1956arilanka@gmail.com

**சம்பளம்**

→ நேரில் தீர்மானிக்கப்படும்
→ விண்ணப்ப முடிவுத்திகதி: **31 யூலை 2019** ஆம் திகதிக்கு முன்னர்.

# திருமண சேவை

59 வருட சேவையில் 3 ஆம் தலைமுறை கண்ட உலகப் புகழ் பூத்த சர்வதேச புலவர் திருமண சேவையுடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் விருப்பத்தின்படி திருமணத்தை நிறைவேற்றலாம்.

**உள்நாடா? வெளிநாடா? PR உள்ளதா?**
**ஸ்பொன்சரில் வெளிநாடு போக வேண்டுமா?**

**"மதுரகானம்"**
**238, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
(CS 26525) (14.17)

**021 222 7147/077 573 7301/076 887 8370**

கிளை அலுவலகம்:
சுவிற்சர்லாந்து **Viber - 0041786040401**

- இந்து. பௌத்த கலாசார பேரவையினால் யாழ் நகரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள உயர்தர சிங்கள மொழி வகுப்புக்கள் 600 மணித்தியாலங்கள் கற்பித்தல் ஆரம்பிக்கப்படவுள்ளன.
- க.பொ.த உயர்தரம் அல்லது அதற்கு மேல் தகுதியுள்ள இளைஞர். யுவதிகள் கலந்துகொள்ளலாம்.
- ஏற்கனவே இந்து. பௌத்த கலாசார பேரவையினால் நடத்தப்பட்ட இலவச சிங்கள மொழி கற்கை வகுப்புக்களில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- இதில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கு தமிழ் மொழி மூலம் சிங்கள மொழியை கற்பிப்பதற்கான ஆசிரியர் பயிற்சியும் வழங்கப்படும்.

இதில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் யாழ்ப்பாணம் காமராஜர் பல்கலைக்கழக கட்டடத்தொகுதியில் வாரத்தின் 7 நாள்களிலும் நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம்.
கீழ்க் காணும் தொலைபேசி இலக்கங்களூடாக மேலதிக தகவல்களைப் பெறலாம்.

தொலைபேசி இல :
**0117140505, 0774756947, 0761814183**

முகவரி:
**காமராஜர் பல்கலைக்கழக கட்டடத்தொகுதி,**
ஆரியகுளம் சந்தி. யாழ்ப்பாணம்..

சிவமயம்

**திருக்கோணேஸ்வரம் சிவபூமி யாத்திரிகர் மடம்**
**சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை**

## திறப்புவிழா அழைப்பு

காலம் - 14.07.2019 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணி
இடம் - திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபை பணிமனை வளாகம் பிரட்றிக் கோட்டை வீதி. திருகோணமலை.

தலைமை - செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்
(தலைவர் - சிவபூமி அறக்கட்டளை)

**நிகழ்ச்சி நிரல்**

- மங்கள விளக்கேற்றலும் இறை வணக்கமும்.
- கட்டடம் திறந்து வைத்தல் :

**செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன்**
(தலைவர் - சிவபூமி அறக்கட்டளை)
**பரம்சோதிப்பிள்ளை பரமேஸ்வரன்**
(செயலாளர் - திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபை)

- பெயர்ப் பலகை திரைநீக்கம் :

**நாகராசா இராசநாயகம்**
(தலைவர் - நகராட்சி மன்றம். திருகோணமலை)

ஆசியுரை
**சிவஸ்ரீ முத்துக்குமாரசுவாமி குருக்கள் சண்முகரத்தினக் குருக்கள்**
(பிரதமகுரு. திருக்கோணேஸ்வரம்)
**தவத்திரு சுந்தரதாச அடிகளார்**
(முதல்வர். திருமுருகன்பூண்டி திருமுருகநாதசுவாமி திருமடம் - தமிழ்நாடு)

வரவேற்புரை
**கனகசபை சேந்தன்**
(உப தலைவர். திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபை)

வாழ்த்துரை
**வைத்திய கலாநிதி வ.மனோமோகன்** (சிட்னி - ஆஸ்திரேலியா)

திருமுறை சிறப்பு அரங்கு
**திருமுறைக்கலாநிதி திருத்தணி என்.சுவாமிநாதன்** (மூத்த ஓதுவார் தமிழ்நாடு)

சிறப்புரைகள்
**நாகராசா இராசநாயகம்** (தலைவர். நகராட்சி மன்றம் - திருகோணமலை)
**மகேசன் தயாகரன் - வங்கி முகாமையாளர்**
(நிர்வாக சபை உறுப்பினர் - சிவபூமி அறக்கட்டளை)

நன்றியுரை
**நாகப்பன் பரசுராமன்**
(உப செயலாளர். திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபை)

**மதிய விருந்துபசாரம் இடம்பெறும்.**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபை, பிரட்றிக் கோட்டை வீதி, திருகோணமலை.


சிவபூமி அறக்கட்டளை - இலங்கை தலைமை அலுவலகம், கோண்டாவில். தொ.இல: 021 222 7938

# பணியாளர்கள் தேவை (VACANCY)

1. Civil Engineer - (Minimum 1 year experience)
2. தொழில்நுட்ப அலுவலர் - T.O
   - NVQ Level 4 or Equivalent with minimum 2 year experience

**Contact No:075 918 3940**
(திங்கள் - சனி வரை **8.30AM - 5.00PM** மணி வரை மட்டும் தொடர்பு கொள்ளவும்)
E-mail:starcontractors12@hotmail.com

# 90வது ஆண்டு பிறந்த தினம்




## பாஸ்டர் ஹறி கந்தையா
## Pastor Harry Kandiah

கானான் ஐக்கிய சபையின் போதகரும் சபை நிர்வாகியுமாகிய பாஸ்டர் ஹறி கந்தையா தனது 90வது ஆண்டுக்குள் இன்று (12.07.2019) பிரவேசிக்கிறார். தேவ அருளால் கடந்த 30 ஆண்டுகளாக தேவபணி செய்த தேவ ஊழியனின் வாழ்க்கைக்கு நன்றி செலுத்தும்படி எமது கானான் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ள துதி ஆராதனையில் கலந்துகொள்ளும்படி அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

| | |
|---|---|
| 12.07.2019 வெள்ளிக்கிழமை | மாலை 5.00 மணி |
| 13.07.2019 சனிக்கிழமை | காலை 7.00 மணி |
| 14.07.2019 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி |

தொடர்பு:
021 223 0338
077 220 8435

**தலைமை போதகர்**
**கானான் ஐக்கிய சபை**
**இருபாலை, கோப்பாய்.**

YAMAHA
Revs Your Heart

52,000/= வரை **விலைக் கழிவுக் கொண்டாட்டம்**

**ரூபா. 39,500 ஐச் செலுத்தி எடுத்துச் செல்லுங்கள்**




பழைய மோட்டார் சைக்கிள்களை கொடுத்து புதிய மோட்டார் சைக்கிள் ஒன்றை பெற்றுக்கொள்ளுங்கள்

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

**இன்றும் நாளையும் மாத்திரமே**
**மருதனார் மடம் சந்தி, சுன்னாகம்**

**Digital Electronics**
62/16, Stanley Road, Jaffna.

YAMAHA DIGITAL - JAFFNA
0776 623 824

# பெயர் மாற்றம்

நாரந்தனை தெற்கு. ஊர்காவற்றுறையில் வசிக்கும் **இன்பம்** ஆகிய நான் எனது பெயரை இன்றுமுதல் **இன்பரோகினி** என பெயர் மாற்றம் செய்ய உள்ளதை இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருவதுடன். இன்றிலிருந்து சகல ஆவணங்களிலும் **இன்பரோகினி** என கையொப்பம் இடுவேன் என்பதை அறியத்தருகின்றேன்.

**இன்பரோகினி**

# ஆங்கிலக் கல்வி

**இளைப்பாறிய ஆங்கில ஆசிரியரால் வீடு வந்து கற்பிக்கப்படும்.**
**தரம்: 05 முதல் தரம் 12 வரையும்**
**பேச்சு ஆங்கிலம் - சர்வதேச பாடசாலை** மாணவர்களுக்கு
அனைத்து தரப்பினருக்கும் வீடு வந்து கற்றுத்தரப்படும்.

(cs 26581) (13.17)

**077 334 2392**

# மாணவர்களுக்கான இலவச விசா சேவை

**நேர்முகத் தேர்வு மற்றும் பதிவுகளுக்கு**



இம்மாதம் 14ஆம் திகதி
காலை 9 மணி தொடக்கம்
மாலை 6 மணிவரை

**Jetwing Jaffna**வில்

(முன் பதிவுகள் மேற்கொள்பவர்களுக்கு மட்டுமே ஆலோசனை வழங்கப்படும்)

2019 செப்டெம்பர் மாதம் வெளிநாட்டில் தடம் பதித்து உங்கள் வாழ்க்கையை ஆரம்பியுங்கள்



**லண்டன், கனடா, அவுஸ்திரேலியா, போலந்து, ஜேர்மன், லெட்வியா, ரொமேனியா, நியூசிலாந்து**

முன்பதிவுகளுக்கு:
அழையுங்கள் : **077361 5261, 077 175 0505**

**Winspire International Education**

**உதயன்**
விளம்பர தொடர்புகளுக்கு
**advt@uthayan.com**

# MAJESTIC CINEPLEX













**மேலதிக விபரங்கள் தொடர்பாக அழையுங்கள்**
**011 5 999 999**

CEYLON THEATRES
www.ceylontheatres.lk

see more news in
newuthayan.com

## அறிவித்தல்

**புதிய தொலைபேசி இலக்கங்களை தெரியப்படுத்தல்**

மிகவும் புரிந்துணர்வற்ற முறையில் 14 வருட, 4வருட, மாதாந்த கொடுப்பனவு கைத்தொலைபேசி சிம்கள் (077 406 0588, 077 918 4099) இரண்டும் இரண்டு தடவைகள் (10.06.2018, 08.02.2019) பாவனையற்ற தாக்கப்பட்டு, நண்பர்கள், உறவினர்கள், V.I.P போன்றோருக்கு இதனால் ஏற்பட்ட நெருக்கடிக்கு எனது ஆழ்ந்த மனவருத்தத்தை தெரிவிப்பதற்கும், இதன் பரோபகாரமாக மிகவும் புரிந்துணர்வுடன் இலங்கையின் மிகச் சிறந்த வலயமைப்பால் வழங்கப்பட்ட **070 507 2727, 071 869 2727** (Per Paid) என்ற இலக்கங்களை எனது நெருக்கடிக்குள்ளாக்கப்பட்ட வாடிக்கையாளருக்கு வழங்கி , Mobitel இலங்கையின் மிகச் சிறந்த வலையமைப்பாக கருதப்படுவதால் இதுபோன்ற நெருக்கடி ஏற்படாது என்ற உறுதிப்பாட்டையும் தெரியப்படுத்துகின்றேன்.

நான் எனது மருத்துவ கல்வியை இந்தியா (மகாரஷ்ர) இல் கற்று 20 (1984 - 2004) வருடங்களாக எனது சொந்த பாமசி நடாத்தி அதே நேரத்தில் ஆங்கில கற்பித்தலை செய்து வந்து N.P.A.or H.D.U(Humanitariyan demining Unit) இல் ஆங்கில மொழி பெயர்ப்பாளராக இருந்து 200 பக்கம் கொண்ட கண்ணி வெடியகற்றல் முறைமை தமிழ் புத்தகத்தை உலகளாவிய ரீதியில் பிரயோகிக்க ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தேன். இதே காலப் பகுதியில் 1/2 மைல் தொலைவில் அதே கிளிநொச்சியில் இருந்த T.R.Tec இல் பகுதிநேர ஆங்கில விரிவுரையாளராகவும் இருந்து கிளிநொச்சி இடம் பெயர்வு வரை (2005 - 2007) கடமையாற்றினேன்.

இந்நிலையில் இவ் புரிந்துணர்வற்ற செயற்பாட்டால் பல ஆயிரக்கணக்கான நண்பர்கள், உறவினர்கள், மாணவர்களின் என்சம்பந்தமான நல்லெண்ணம் பாதிக்கப்படாதிருக்க, "தமிழகம்" சாரையடி புலோலி இல் வசிக்கும் **சிவசம்பு பாக்கியராஜன்** ஆகிய நான் மிகவும் தயவாக எனது புதிய தொலைபேசி இலக்கங்களுடன் **(070 507 2727/ 071 869 2727)** தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**சி.பாக்கியராஜன்.**

## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்
## 2019 ஆம் ஆண்டிற்கான மீள் கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் இறைச்சிக்கடைகளை 2019ஆம் ஆண்டு ஆவணி மாதம் 1ஆம் திகதி தொடக்கம் மார்கழி 31ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான மீள் கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி :- 24.07.2019 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.00

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 25.07.2019 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9.00

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 25.07.2019 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.00

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :- கலந்துரையாடல் மண்டபம்,
தலைமை அலுவலகம்,
நல்லூர் பிரதேசசபை.

**2019 ஆம் ஆண்டுக்கு இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை மீள் கேள்வி அட்டவணை**

| இல | இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| | நல்லூர் உப அலுவலகம் | | | |
| 1. | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 01 | 500.00 | 5,000.00 | 42,050.00 |
| 2. | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 02. | 500.00 | 5,000.00 | 67,700.00 |
| | கொக்குவில் உப அலுவலகம் | | | |
| 1. | கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 194,625.00 |
| 2. | கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக் கடை இல 01 | 500.00 | 5,000.00 | 59,250.00 |
| 3. | கோண்டாவில் ஸ்ரேசனடி கோழியிறைச்சிக் கடை இல 02 | 500.00 | 5,000.00 | 24,000.00 |

கேள்வி தொடர்பான மேலதிக் விபரங்களை நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

**திரு தா.தியாகமூர்த்தி**
**தவிசாளர்**
**நல்லூர் பிரதேச சபை,**
**கொக்குவில்**
**12.07.2019**

**யாழ். மாவட்ட கூட்டுறவாளர்கள் நடத்தும்**
**மாபெரும் மோட்டார் சைக்கிள் பவனி**
**காலம் - 13.07.2019 சனிக்கிழமை**

யாழ். மாவட்ட கூட்டுறவாளர்கள் நடத்தும் மாபெரும் மோட்டார் சைக்கிள் பவனி **பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, கொடிகாமம், உரும்பிராய், தெல்லிப்பழை,** காரைநகர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள கூட்டுறவு **நிறுவனங்களின் முன்றலில் காலை 7.00** மணிக்கு **ஆரம்பமாகும். இப்பவனி அவ்வவ் வீதி வழியே காலை 9.00மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தை வந்தடையும்.** தொடர்ந்து **கூட்டுறவுச்சபை தலைவர் தி.சுந்தரலிங்கம் அவர்கள் தலைமையில் விசேட கலந்துரையாடல் இடம்பெறும். இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக** வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் அவர்கள் கலந்துகொள்வார்.

அனைவரும் வருக!


கூட்டுறவில் இணைக!!

"கண்ணியமான சேவைக்கு கூட்டுறவுகள்."

யாழ். மாவட்ட கூட்டுறவாளர்கள்

## மரண அறிவித்தல்கள்

## தில்லையம்பலம் கந்தையா ஆறுமுகம்



நல்லூரைப் பிறப்பிடமாகவும் நவாலி வடக்கு நாச்சிமார்கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் கந்தையா ஆறுமுகம் கடந்த (10.07.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னத்தங்கம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான முத்தையா - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றமீனாட்சி மற்றும் குமாரசாமி ஆகியோரின் அன்புச்சகோதரனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், கார்த்தியாஜினி (மிருக வைத்தியர் - கனடா), காலஞ்சென்ற சர்வேஸ்வரன் மற்றும் கிருபளாஜினி (பின்லாந்து, பத்மாஜினி (ஆசிரியை - மன்னார்), விஜிதாஸ்வரன் (பொறியியலாளர் - லண்டன்), வாகீஸ்வரன் (பொறியியலாளர் - லண்டன்), மீனலோஜினி (விவசாய போதனாசிரியர்), பகீரதன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - இந்து கலாச்சார அமைச்சு) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாஸ்கரன்,ஜெகன், கரன், பகீரதன், தட்சாஜினி, வினோஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆதவன், பிரவீன், ஆரூரன், அஞ்சலி, தருண், அக்சஜன், ஆர்த்தி, ஆரூசி.அமிஜா, ஆரனன், அனகா, கீர்த்திக், அர்வின் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (14.07.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆரியம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துசெல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நவாலி வடக்கு,**
**மானிப்பாய்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

**077 756 5779, 077 786 0076**

## திருமதி மகேஸ்வரி தம்பித்துரை



**மலர்வு 20.07.1942**
**உதிர்வு 05.07.2019**

பருத்தித்துறை ஊரியவத்தையைப் பிறப்பிடமாகவும் இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம், கனடா மொன்றியல் ஆகிய வற்றை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி தம்பித்துரை 05.07.2019 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயங்கர் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், தம்பித்துரை அவர்களின் அன்பு மனைவியும், உமாசுதன், உமாஜோதி, உமாபதி, உமாசுதர்சினி ஆகியோரின் அன்பு தாயாரும், அகிலா, காண்டீபன், யோகராசா, புவனதாஸ் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற பொன்னுத்துரை, குமாரசாமி, இராசரத்தினம், கமலாவதி, குலவீரசிங்கம் சிவனேசு, லகுராஜா, ரகுலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், புவனேஸ்வரி, (மணி), கமலாதேவி (தேவி), செல்வம், ராசேந்திரம், சிவமலர், தனேஸ்வரி, நேசமலர், ரகுலேந்திரன் ஆகியோரின் மைத்துனியும் தம்பிராசா, சின்னத்தம்பி, நடேசு, தங்கச்சியம்மா, ரோசம்மா, செல்லத்துரை, ரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.07.2019 ஞாயிற்றுக்கிழமை காலை கனடா மொன்றியல் மண்டபத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்**
**குடும்பத்தினர்.**

(ca.23307) (13.17)

# தெய்வீக வாழ்வு வாழ்ந்த தங்கம்மா அப்பாக்குட்டி!



'தவமும் தவமுடையார்க்கு ஆகும்' என்னும் வாசகத்துக்கு இலக்கணமாகவும் இறைவன் தன் பொருட்டுச் சில மானிடர்களைப் பூமிக்கு அனுப்பி இவ்வையகம் பயனுற வாழச் செய்கிறான் என்பதை உணர்த்தி நிற்கவும் கூடியதான தெய்வீக வாழ்வு சிவத் தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியினுடையதாகும். அன்னையார் அமரத்துவமடைந்த பதினோராண்டுகள் பறந்தோடிப் போய்விட்டன. அவரது குருபூசைத்தினம் ஆனி விசாகத்தில் இன்று 12ஆம் திகதி கடைப்பிடிக்கப்படுகிறது.

**அன்னையின் ஆசிரியப் பணி**

தன் வாழ் நாள்களையெல்லாம் தவப் பொழுதுகளாக்கி ஆன்மிக, சமூக, கல்விப் பணிகளில் தன்னை அர்ப்பணித்தே தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் திருவடி நிழலையே பற்றுக் கோடாகக்கொண்டு அருட்பணி ஆற்றியவர் அவர். 1925ஆம் ஆண்டு முதல் 2008ஆம் ஆண்டு வரையிலான சுமார் 83 ஆண்டுகள் வாழ்வியற் காலத்தில் அன்னை தங்கம்மா செய்த அரும்பணிகளும் ஏராளம். சாதித்தவைகளும் தாராளம். சைவத் தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்களிலிருந்து சற்றேனும் விலகாத குடும்பத்தில் பிறந்து உரிய முறையில் கல்வி கைவரப்பெற்று இராமநாதன் பெண்கள் ஆசிரிய பயிற்சிபெற்று மட்டக்களப்பில் கிறிஸ்தவப் பாடசாலையிலும் கொழும்பில் இஸ்லாமியப் பாடசாலையிலும் ஆசிரியப் பணியாற்றி முதன்மை பாரம்பரியங்களை நன்கு புரிந்து கொண்டு சைவத் தமிழ்ப் பண்பாட்டு அடித்தளத்தில் நின்று எம் மதத்தவரையும் இன்முகத்துடன் ஏற்று அரவணைக்க முடியுமென்பதை நிலைநிறுத்தியவர் அன்னையார்.

**ஆன்மிகப் பணி**

1959ஆம் ஆண்டு இனக்கலவரச் சூழலினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டு சொந்தவூர் திரும்பி அளவெட்டி சதானந்த வித்தியாசாலையில் கற்பித்துக் கொண்டிருந்தார். அந்தக் காலப்பகுதியில் தொடர்ச்சியாகப் பெற்றோரை இழந்தார். பின்னர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கற்பிக்கும் போது உரிய காலத்துக்கு முன்னரே ஓய்வு பெற்றுக் கொண்டு ஆன்மிக நாட்டம் அதிகரிக்க இறைபணியில் ஈடுபடலானார். என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற அப்பர் சுவாமிகள் திருவாக்கை நெஞ்சிலிருந்து இது தான் தேவி துர்க்கை எனக்கு அரைத்துத் தந்த பெருவாழ்வு எனக் கருதி துர்க்கை அம்மனுக்குத் தொண்டு செய்துவரலானார்.

ஆசிரியப் பணியில் இருக்கையிலேயே 1961ஆம் ஆண்டு திருப்பணிச் சபையின் ஓர் உறுப்பினரானார். 1966ஆம் ஆண்டில் ஆலய அறங்காவலர் சபையில் இணைந்து ஆலய நிர்வாகப் பணிகளில் தன்னலமற்ற தொண்டுகளைச் செய்து வரலானார். மேலும் தனாதிகாரி பொறுப்பை ஏற்றுத் திறம்படக் காரியமாற்றினார். அனைவரது வேண்டுதல்களுக்கும் இணங்கி 1977- 2008 வரையுள்ள 31 ஆண்டுகளில் அனைவரையும் அரவணைத்து ஆலய நிர்வாகத்தை சீராக இயக்கியதுடன் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயமானது சமூகத்தின் மைய நிலைக்களனாக விளங்கச் செய்தார். காலங்காலமாக ஈழத்துச் சைவர்களிடையே ஆன்மிப் பணிகளால் தம்மை அடையாளப்படுத்தி நின்ற பெண்களில் உன்னதமானவராகவும் முன்னோடியாகவும் அன்னையார் கருதப்பட்டார்.

ஓர் இந்து ஆலயத்தின் பரிபாலனத் தலைமைப் பணியைத் துணிவுடன் ஏற்றுக் கொண்டு படிப்படியாகக் கோயிலை வளர்த்தெடுத்து ஆன்மிக- சமூக வளர்ச்சியை மேலோங்கச் செய்து உலகெங்கும் வாழும் ஈழத்துச் சைவ மக்களிடையே 'துர்க்கையம்மன் ஆலயம்' என்றவுடன் இறையுணர்வுடன் கூடிய பெருநம்பிக்கை ஏற்படக்கூடியதாக ஆலயத்தை விளங்கச்செய்தார். சித்திரத் தேர் அமைத்தமை (1978) இராஜகோபுரம் அமைத்தமை (1981) சைவப் பெண்பிள்ளைகளுக்கான மகளிர் இல்லம் அமைத்தமை (1988) திருமணமண்டபம்-திருமுறைமண்டபம் உருவானமை. நூலகம் அமைத்தமை (2002), மருத்துவமனை முதலான பல்வேறு திருப்பணிகளும் சமூகப் பணிகளும் அன்னையர் தலைமையில் நிறைவுபெற்றன. நல்லூரில் துர்க்கா தேவி மணிமண்டபமும் (1998) அமைத்து சிறப்பித்தார். 'துர்க்கையம்மன் ஆலயம்' என்றவுடன் இறையுணர்வுடன் கூடிய பெருநம்பிக்கை ஏற்படக்கூடியதாக ஆலயத்தை விளங்கச் செய்தார். அன்னையாரின் பிறந்தநாளின்போது பல சமூக நலத்திட்டங்கள் ஆண்டுதோறும் செயற்படுத்தப்பட்டன. சோழ மன்னர் காலத்தில் கோயில்கள் சமூகத்தின் மையமாகத் திகழ்ந்ததுபோல், இலங்கையில் எடுத்துக்காட்டாகத் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம் சமூகத்தை நோக்கித் திறந்துவிடப்பட்டது. ஆறுகாலப் பூசைகளும் ஒழுங்குமுறை தவறாத நித்திய நைமித்திய, மகோற்சவக் கிரியைகளும் அன்னதானமும் நலக்கொடை முதலானவைகளும், நிர்வாகச் சிறப்பும் உலகமெங்கும் வாழும் அம்பிகை அடியார்களை ஈர்த்துக்கொண்டன.

அன்னையாரைச் சந்திப்பதற்காகப் பல ஆண்டுகளுக்கு முன்னர் தலைவர் ஈழத்துச் சிவானந்தன் தெல்லிப்பழை ஆலயஞ் சென்று "துர்க்கா அக்கா இருக்கிறாரா" எனக் கேட்டாராம். சிறு குழந்தைகள் முதல் முதியோர்வரை அக்காவா? என வியந்து கேட்டுவிட்டு 'அம்மா இருக்கிறார்' என்றார்களாம். அன்று முதல் தனக்கும் அம்மாவாகினார் என சிவானந்தம் "ஆலயமணி" சஞ்சிகையில் எழுதியிருக்கின்றார். இதிலிருந்து தங்கம்மாத் தாயார் மீது மக்கள் கொண்ட பேரன்பை மட்டிட முடிகிறது. ஆசிரியையாக, பண்டிதராக, சைவப்புலவராக, சிறந்த ஆன்மிக தமிழ்ச்சொற் பொழிவாளராக பல்வேறு ஆன்மிக நூல்களின் ஆசிரியராகப் பதிப்பாளராக சமூகசேவகியாக தமிழியல் வல்லுனராக சிறந்த நிர்வாகியாக சைவத்தமிழ்ச் சமூகத்தின் பாதுகாவலராக ஆலய அறங்காவலர் சபைத் தலைவியாக என்றவாறு பல்வேறு பரிமாணங்களைப் வெளிப்படுத்தி நின்றவர் அன்னையார். மிக இளம்வயதிலேயே சொற்பொழிவாற்றத் தொடங்கி, அவரது காலடிகள்படாத இலங்கை மண் இல்லையென்ற அளவுக்குப் பணிசெய்தவர். இந்தியத் தமிழகம், சிங்கப்பூர், மலேசியா, இங்கிலாந்து முதலான நாடுகளுக்கும் சென்று உரையாற்றியவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் சிறப்புரை ஆற்றியிருக்கிறார். ஈழத்திலும் தமிழகத்திலும் சைவசித்தந்த மாநாடுகளில் கலந்து சிறப்பித்திருக்கிறார். தமிழகத்தில் திருவாசக விழாவில் திருவாசகத்தை உளமும் உள்ளமும் உருகப் பாடியமை .(1974), திருவிடைமருதூர் திருமுறை விழாவுக்கும் தலைமை வகித்தமை (1973) சென்னை சைவசித்தாந்தப் பெருவிழாவில் தலைமை ஏற்றமை (1981) ஆரணியில் மங்கையர் விழாவுக்குத் தலைமை வகித்தமை (1980) முதலான அன்னையாரின் புகழுக்குக் கட்டியம் கூறும் தமிழக விருதுகள். இலங்கைத் தமிழ்ப் பெண்கள் எவருக்கும் கிட்டாத பெரும் பேறு இதுவென்றார்.

அன்னையார் அடைந்திட்ட அதிசயமான கௌரவங்களுள் ஒன்றாக 1998ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 'கலாநிதி' பட்டமளித்து அன்னையைக் கௌரவித்ததன் மூலம் தன்னைப் பெருமைப்படுத்திக் கொண்டது.

ஆன்மிகச் செல்வர் ஆறுதிருமுருகன் அன்னையாரின் கனவுகளைப் படிபடிப்பாக நனவாக்கி வருபவர். அம்மையாருக்குப் பின் தேவஸ்தானத் தலைமைப் பொறுப்பை ஏற்று அறங்காவலர் சபையினர் ஒத்துழைப்போடும் உலக இந்துக்களின் பேருதவிகளோடும் துர்க்காதேவி ஆலய அபிவிருத்திகள் சமூக சலப் பணிகள், ஆன்மிகப் புணிகள் அனைத்தையும் செயற்படுத்தி வருகிறார். தென் திசை, வடதிசை கோபுரங்களுடன் மேற்றிசைக் கோபுரப் பணிகளும் தொடருகின்றன. 'அருள்ஒளி' சஞ்சிகை மாதந்தோறும் வெளிவருகிறது. அம்மையார் தொடக்கி வைத்த அறப்பணிகளும் தவறாமல் நடைபெறுகின்றன. அம்மையார் வாழும்போதே அவரது சிந்தனைகளுக்குச் செயல்வடிவம் தந்தவர் தற்போதைய தலைவர். எனவே அன்னை தங்கம்மாவின் வாழ்வியல் நோக்கங்கள், சிந்தனைகள், செயற்பாடுகள் அனைத்து உலகந் தழுவிய ஒட்பமுடையதாக இருப்பினும் ஈழத்துச் சைவத் தமிழர்களின் வாழ்வு வளம்பெற வேண்டுமென்பதில் அவர் அதிக கரிசனை கொண்டிருந்தார். அவரது கடினமான பணிகள் யாவும் அதை எமக்கு உணர்த்தி நின்றன. இடப்பெயர்விலும் குண்டு வீச்சுக்களிலும் அவர் தளரா மனத்துடன் இறைசேவையுடன் மனித சேவையையும் தனது கடமையாகக் கொண்டிருந்தார். ஆதலால் அன்னையின் வழி நின்று அவரது விருப்பங்களை நிறைவேற்றுவதே எமது தலையாய கடமையாகும். அம்மாவின் நினைவுகளில் அவரது நினைவுகளே எம்மை ஊக்குவிக்கும் புனித சக்தியாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

**கலாநிதி செ. திருநாவுக்கரசு**

# நிறம் மாறும் பாறை

பரந்த பாலைவனத்தின் தகிக்கும் மணற்பரப்பில் காணப்படும் மிகப் பெரிய பாறை 'உலுரு'. பார்ப்பதற்கு பிரம்மாண்டமான சிவப்புக் கூடாரம் போல இருக்கும்.

வடக்கு ஆஸ்திரேலியாவின் பகுதியில் 'ஆலிஸ் ஸ்பிரிங்ஸ்' என்ற ஊரில் இருந்து 500 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. ஒரே பாறையால் ஆன இந்தக் குன்று உலகிலேயே மிகப் பெரியது. சிவப்பு வண்ணத்தில் மட்டுமில்லாமல் அவ்வப்போது நிறம் மாறிக் காட்சி தருவது இதன் வியப்பான அம்சம்.

இந்தப் பாறைக் குன்றின் இயற்கை நிறம் கருங்கல் பாறைகளுக்கே உள்ள நீலம் கலந்த சாம்பல் நிறம் தான்.

ஆனால், வெயில் படும்போது அது சிவப்பு நிறத்தில் மாறிவிடுகிறது. நண்பகலில் பழுப்பு நிறமாகவும், மாலைப் பொழுதில் நீலம் கலந்த சிவப்புப் பாறையாகவும் தோற்றமளிக்கும். பாறையில் உள்ள தனிமங்கள் சூரிய வெப்பத்தை உள்வாங்கிக்கொள்ளும் போது ஏற்படும் மாற்றத்தாலேயே இப்படி வெவ்வேறு நிறங்களில் தோற்றமளிக்கின்றன.

இந்த அதிசயப் பாறையை நில அளவியலாளர் 'வில்லியம் கோஸ்' என்பவர் முதன் முதலில் 1873இல் வெளி உலகுக்கு அறிமுகப்படுத்தினார். தெற்கு ஆஸ்திரேலியாவின் அப்போதைய தலைமைச் செயலரான 'சர் ஹென்றி ஏயர்ஸ்' என்பவர் பெயரை அந்த கற்பாறைக்குச் சூட்டினார். இதன் காரணமாக 'ஏயர்ஸ் பாறை' என்ற பெயரிலும் இது அழைக்கப்படுகிறது.



சுற்றுலாப் பயணிகளால் பெரிதும் விரும்பப்படும் இந்தப் பகுதியில் 'உலுரு கட்டா ஜூட்டா தேசியப் பூங்காவும் அமைக்கப்பட்டுள்ளது. இயற்கையின் அதிசயமாக விளங்கும் இந்தப் பாறை 'யுனெஸ்கோ' அமைப்பால் உலகப் பாரம்பரியக் களமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# கூட்டமைப்பின் முடிவு தரக்கூடிய பயன்!

தன் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தோற்கடித்து எஞ்சிய ஆட்சிக் காலத்தைத் ஒருவாறு தக்க வைத்துக் கொண்டுள்ளது ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி.தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே இந்தக் கண்டத்தில் இருந்தும் ஆட்சியைக் காப்பாற்றியுள்ளது.

இந்த ஆட்சியைப் பற்றிக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் உள்ளிட்ட தலைவர்கள் பேசினாலும் கடைசியில் ஆட்சியைப் பாதுகாக்கும் வகையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வாக்களித்துள்ளனர். புதிய அரசமைப்பை ஏற்படுத்துவதற்கான முதுகெலும்பற்றவர் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை கூட்டமைப்பின் பேச்சாளர் ஏப்ரகாம் சுமந்திரன் பொது மேடைகளில் திட்டினாலும் அந்த ஆட்சிக்கு ஆதரவாகவே அவர் உட்பட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிக்க வேண்டியவர்களாக இருந்தார்கள்.

இப்போது இந்த ஆட்சியைக் காப்பாற்றிவிட்டதற்காகப் புதிய அரசமைப்பை ஏற்படுத்துவதற்கோ, நிலைமாறு கால நீதியை நிலைநாட்டுவதற்கோ, போர்க்குற்ற விசாரணைகளை நடத்துவதற்கோ, அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கோ, அரசபடையினர் வசம் உள்ள காணிகளை விடுவிப்பதற்கோ, வடக்கு – கிழக்கில் பௌத்த சிங்கள மயமாக்கலை நிறுத்துவதற்கோ, அரச வேலைவாய்ப்புக்களில் தமிழர்களின் வாய்ப்புக்கள் சிங்கள அரசியல்வாதிகளால் தட்டிப் பறிக்கப்படுவதை நிறுத்துவதற்கோ, தொல்பொருள் திணைக்களத்தால் தமிழர்களின் வரலாறு திரிக்கப்படுவதை நிறுத்துவதற்கோ, வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களங்களால் தமிழர்களின் பாரம்பரிய வாழிடங்கள் காடுகள் என்கிற பெயரால் அபகரிக்கப்படுவதை நிறுத்துவதற்கோ, ஐக்கிய நாடுகள் சபைக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கோ, வடக்கு – கிழக்கில் தமிழ் இனப் பரம்பலைச் சிதைக்கும் வகையிலான சிங்களக் குடியேற்றங்களை நிறுத்துவதற்கோ ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி நடவடிக்கைகள் எடுக்கப்போவதில்லை என்பது திண்ணம்.

இவற்றில் பலவற்றைத் தேர்தல் கால வாக்குறுதிகளாக ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களுக்கு வழங்கியிருந்தபோதும் அவற்றில் இதுவரை நிகழ்ந்தவைகள் தவிர வேறு எந்தவித முன்னேற்றமும் ஏற்படப்போவதில்லை. பதிலாக, ஆட்சியைக் காப்பாற்றுவது என்கிற தமிழ்க் கூட்டமைப்பின் இந்த முடிவின் மூலம் தமிழர்களுக்குக் கிடைக்கக்கூடிய அதிகபட்ச நன்மைகள் இன்னும் சில உள்ளூர் வீதிகளும் சில பல கட்டடங்களும்தான் என்பதில் மாற்றுக் கருத்து ஏதுமில்லை. கிராம எழுச்சி என்கிற பெயரில் அவை கிட்டலாம்.


தமக்கு முன்னால் வேறு தெரிவுகள் இல்லை என்கிற நிலையில் ரணில் ஆட்சியை ஆதரிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம் என்கிற நிலைப்பாட்டைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழக்கம்போலக் கூறும். அதாவது ரணிலின் ஆட்சியைவிட மோசமான பாதிப்புக்களைத் தமிழ் மக்களுக்குத் தரக்கூடிய மகிந்த ராஜபக்சவின் ஆட்சி மீண்டும் வந்துவிட்டால் என்ன செய்வது என்கிற அச்சம் காரணமாகவே இந்த நிலைப்பாட்டைத் தாம் எடுக்கவேண்டியிருக்கிறது என்று கூட்டமைப்புக் கூறும்.

ஆனால், இந்த முடிவால் மகிந்த ஆட்சிக்கு வருவதை எவ்வளவு காலத்துக்கும் கூட்டமைப்பால் பின்போட முடியும் என்பதுதான் இப்போதுள்ள கேள்வி. ரணிலின் ஆட்சி மீது தீவிரமடைந்துவரும் எதிர்ப்பலை, அடுத்தாண்டு நடக்க இருக்கும் பொதுத் தேர்தலில் ரணிலின் வெற்றியை உறுதிப்படுத்துவது சந்தேகம் என்கிற நிலையில் கூட்டமைப்பின் இன்றைய ராஜதந்திரத்தின் மூலம் தமிழர்களுக்கு மிஞ்சப் போவது வீதிகளும் சில பல கட்டடங்களும்தானா என்கிற கேள்வியை உதறிப்போட முடியவில்லை.

தமிழர்களின் எதிர்கால அரசியலைத் தீர்மானிப்பதில் இந்தக் கேள்விக்கான பதில் முக்கிய இடத்தை வகிக்கும். கூட்டமைப்பு இன்று எடுத்துவரும் முடிவுகள் தீர்க்கதரிசனமானவைதானா என்பதைக் காலம் விரைவில் எடுத்துரைக்கும்.

# அக்கினிப் பரீட்சையாக மாறியுள்ள தீர்மானம்





சேரலாதன்

மக்கள் விடுதலை முன்னணியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பாகப் பலராலும் பேசப்பட்டு வருகின்றது.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுமானால் அரசு கவிழ்வதைத் தவிர வேறு வழியே இல்லை. இது மகிந்த தரப்புக்குச் சாதகமானதொரு சூழ்நிலையை ஏற்படுத்திவிடும். மகிந்த மீண்டும் அதிகாரத்துக்கு வந்துவிட்டால் சிறுபான்மையினத்தவர்கள் மீண்டும் பழைய இருண்ட யுகத்துக்குள் பிரவேசிப்பதை தவிர வேறு வழியே இல்லை.

தற்போது தமிழ் மக்கள் அனுபவித்து வரும் சகல துன்பங்களும் மகிந்த ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்டவை என்பதை நாம் மறந்துவிட முடியாது. இவற்றுக்குத் தீர்வு காண முடியாத நிலையில் தற்போதைய அரசு இருப்பதும் தெளிவாகத் தெரிகின்றது. ஆனால் தற்போதைய ஆட்சியின் கீழ் தமிழர்கள் ஓரளவாவது நிம்மதியாக வாழ்கிறார்கள் என்பதை நாம் நிராகரித்து விட முடியாது.

### கூட்டமைப்பு எதிர்க்கும்

ரணில் தலைமையிலான அரசு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றி வைக்கப்படுமென்ற நம்பிக்கையில் கூட்டமைப்பின் தலைவர் உள்ளார். பழுத்த அரசியல்வாதியான அவர் எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற ரீதியில் செயற்படமாட்டாரென்பது அனைவருக்கும் நன்கு தெரிந்த விடயமாகும். ஏற்கனவே மகிந்தவைப் பகைத்துக் கொண்டுள்ள நிலையில் ரணிலையும் பகைத்துக் கொண்டால் என்ன நடக்கும் என்பதை சம்பந்தன் நன்கு புரிந்துகொண்டிருக்கிறார். இதன் காரணமாகவே அரசுடன் பகையை வளர்ப்பதைத் தவிர்த்துவருகின்றார். இதைப் புரியாத சிலர் அரசுடனான உறவை கூட்டமைப்பு முறித்துக்கொள்ள வேண்டுமெனக் கூக்குரலிட்டு வருகின்றனர். அதேவேளை மக்கள் விடுதலை முன்னணியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை மைத்திரி மற்றும் மகிந்த தரப்பு ஆதரிக்குமென நம்பகமாகத் தெரிய வருகின்றது. எப்படியாவது அரசைக் கவிழ்த்து விட்டால் தாம் ஆட்சி புரிய முடியுமென்ற நப்பாசையே இதற்கான காரணமாகும். ஆனால் அது நிறைவேறுமா? என்பது சந்தேகமாகவே உள்ளது. ஏனென்றால் கூட்டமைப்பு இந்தத் தீர்மானத்தை எதிர்க்கும் என்பதோடு சில முஸ்லிம் தரப்பினரும் அவ்வாறே நடந்து கொள்வரென்பது தெளிவாகி விட்டது.

> “தமிழர்களைப் பொறுத்தவரையில் தெற்கிலுள்ள அரசியல்வாதிளை நம்புவதால் பயனொன்றும் ஏற்படப் போவதில்லை. ஏனென்றால் அவர்களில் சிலர் நேரடியாகவே தீங்கு செய்வார்கள். வேறு சிலர் நம்ப வைத்துக் கழுத்தறுப்பார்கள்.

### தேர்தல்களைக் குறிவைத்த அரசியல் நகர்வுகள்

நாட்டின் அரசியல்வாதிகளில் பெரும்பாலானவர்கள் தேர்தல்களைக் குறி வைத்தே தமது அரசியல் நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். இது சகல இளைஞர்களையும் சேர்ந்த அரசியல்வாதிகளுக்குப் பொருந்தும். முஸ்லிம் அமைச்சர்கள் பதவி விலகிய விவகாரத்திலும் தேர்தல்களே முன்னிலை பெறுகின்றன. முஸ்லிம் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கும் உள்ளாகி வரும் நிலையில் தாம் அரசின் பதவிகளில் தொடர்ந்தும் ஒட்டிக்கொண்டிருந்தால் தேர்தல்களில் மக்கள் தம்மை நிராகரித்து விடுவார்கள் என்பதற்காகவே அவர்கள் தமது அமைச்சுப் பதவிகளைத் துறந்தனர். ஆனால் இவர்களின் இந்த முடிவில் மாற்றம் ஏற்படாது என்பதற்கு எவ்வித உத்தரவாதத்தையும் அளிக்க முடியாது.

### சிறுபான்மையினரின்பலம்

இதேவேளை தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கு சிறுபான்மையினரின் வாக்குகளும் தேவையென மகிந்த ராஜபக்ச கூறியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த அரச தலைவர் தேர்தலில் சிறுபான்மையினரின் வாக்குகளால் தாம் தோற்கடிக்கப்பட்டதை அவர் இன்னமும் மறக்கவில்லை என்பது இதன் மூலமாகத் தெளிவாகியுள்ளது. இந்த் நாடு சிங்களவர்களுக்கு உரியதெனச் சிலர் கூறினாலும் சிறுபான்மையின மக்களின் ஆதரவின்றி நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் எதிர்பார்கக முடியாது. இந்த நாடு இங்கு வாழ்கின்ற அனைவருக்கும் சொந்தமானது. இன ரீதியாக அவர்கள் பிரிந்திருந்தாலும் ஒரே இலங்கையர் என்ற வகையில் பிணைக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் அனைவருமே இலங்கைத் தாயின் புதல்வர்களே என்பதை அனைவரும் மனதில் கொள்ள வேண்டும். சிங்களவர்கள் தவிர்ந்த ஏனைய இனத்த வர்கள் அனைவரும் இந்த நாட்டின் அபிவிருத்திக்காகப் பாடுபட்டிருக்கிறார்கள். வியர்வை சிந்தி உழைத்திருக்கிறார்கள். இவர்களைக் கொச்சைப்படுத்தும் வகையில் வார்த்தைப் பிரயோகங் களை மேற்கொள்வது துரோகத்தனமாகும்.

இந்த நாட்டைப் பொறுத்தவரையில் மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற அரசுகள் சிறுபான்மை மக்களை ஏமாற்றுவழிலேயே குறியாகக்கொண்டு செயற்படுகின்றன. இந்த அரசுகளுக்கு பெரும்பான்மையின மக்களின் நலன்களே பிரதானமாகத் தெரிகின்றன. சிறுபான்மையினருக்கு ஏதையாவது வழங்கி விட்டால் பெரும்பான்மையினர் அதை எதிர்த்து விடுவார்களே என்ற அச்சமும் ஆட்சியாளர்களின் மனங்களில் குடிகொண்டுள்ளது. இந்த அச்சம் •நீங்கும் வரையில் சிறுபான்மையினர் ஆட்சியாளர்களிடமிருந்து எதையும் எதிர்பார்க்க முடியாது.

மேலும் காவியுடைய தரித்தவர்கள் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவதும் அரசின் செயற்பாடுகளில் தலையிடுவதும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றன. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமைக்கு இதுவுமொரு காரணமாகும். ஆகவே தமிழர்களைப் பொறுத்தவரையில் தெற்கிலுள்ள அரசியல்வாதிளை நம்புவதால் பயனொன்றும் ஏற்படப் போவதில்லை. ஏனென்றால் அவர்களில் சிலர் நேரடியாகவே தீங்கு செய்வார்கள். வேறு சிலர் நம்ப வைத்துக் கழுத்தறுப்பார்கள்.

ஆகவே அரசுக்கு எதிரான நம்பிக்கைத் தீர்மானம் தொடர்பாக சகலதையும் ஆராய்ந்து ஒரு தீர்க்கமான முடிவை மேற்கொள்வதே சிறுபான்மையின அரசியல் தலைவர்களின் முக்கிய பொறுப்பாகும்.

உதயன்
# செய்திகள்
24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM
வெள்ளிக்கிழமை 12 ஜூலை 2019


# ஸ்மாட் கம்பங்களில் '5ஜி' என்பது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள புரளி

## மாநகர முதல்வர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் எமது அனுமதியுடன் அமைக்கப்பட்டுவரும் ஸ்மாட் கம்பங்களில் 5ஜி பரிவர்த்தனைகள் உண்டு என்று பரப்பப்பட்டது கட்டவிழ்த்து விடப்பட்ட புறளி. இவ்வாறு யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் இ.ஆனோட் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அமைக்கப்பட்டுள்ள ஸ்மாட் கம்பங்கள் ஊடாக 5ஜி தொழில்நுட்பம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவித்து, இதற்கு எதிராக மக்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இது தொடர்பில் மாநகர சபை முதல்வர் விளக்கமளித்துள்ளார். இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஸ்மாட் கம்பம் திட்டத்திலே பாதுகாப்பு கருதி கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்படுவதுடன், வெளிச்சத்துக்காக மின் விளக்குகளை பொருத்துதல், எதிர்காலத்திலே வரவிருக்கின்ற 'கிறீன் சிற்றி திட்டம்' உலகமயமாக்கலில் உள்ளடக்கப்பட்டுள்ளமையால் 'எலக்றோனிக் கார்' வருகின்ற பட்சத்தில் கார்களுக்கு மின்னேற்றக்கூடிய வசதி மற்றும் மழைகாலங்களிலே முன்னேற்பாடாக மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய இடிதாங்கிகள் உள்பட அந்த கம்பங்களை அமைப்பதென்றும், ஏதேனும் தொழிநுட்ப சாதனங்களை மேலதிகமாக அதிலே பொருத்துவதாக இருந்தால் அதற்கு மேலதிகமான ஒரு உடன்படிக்கை எங்களுடைய ஒப்பந்தத்தில் பேசப்படும் என்ற விடயங்கள் உள்ளடங்கலாக கடந்த ஒரு வருடமாக இந்த விடயம் எங்களுடைய சபையிலே பல தடவைகள் பேசப்பட்டன.

அதிலே பொருத்தப்படுகின்ற அன்டனா தற்பொழுது என்ன அலைவரிசையை நாங்கள் பெற்றுக் கொண்டிருக்கின்றோமோ அந்த தொலைத் தொடர்பு சேவையை? மக்களுக்கு அசௌகரியங்களாக இருக்கின்ற இடங்களை அடையாளப்படுத்தி அந்த இடத்திலே இந்த பரிவர்த்தனையை அமைப்புக்களை போடுவதன் மூலமாக அந்த மக்களுக்கு ஒரு சிறிய சேவையை வழங்க முடியும் என்ற உயர்ந்த நோக்கம் தான் அந்த ஸ்மாட் கம்பத்திலே இருக்கின்றது.

இப்பொழுது 5ஜி கொண்ட பரிவர்த்தனையை மாநகரத்திலே கொண்டுவந்து மாநகர முதல்வர் பொருத்துவதற்கு திட்டமிட்டிருக்கின்றார், இதனால் 5 மாதக் குழந்தையும் கருவிலே கரைந்து விடும் என்ற செய்திகள் மட்டுமன்றி மிக மோசமான உள நோயாளர்களைப் போன்று சில கற்பனைகளை அவர்கள் இணையத்தளங்களிலும், சமூக வலைத்தளங்களிலும் பரவிவிட்டிருக்கின்றார்கள்.

இது கட்டவிழ்த்து விடப்பட்ட ஒரு புரளி. தற்பொழுது 4ஜ என்ற தொழில் நுட்பத்தை நாங்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.

எங்களுடைய பண்பாட்டு விழுமியங்கள், கலாசாரங்கள் எந்த நேரத்திலும் பாதிப்படையாத வகையில், மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய, எதிர்கால சந்ததிக்கு ஒரு ஆரோக்கியமான ஒரு நகரத்தை நவீன வசதிகளோடு உரிய சுத்தமான பசுமை மாநகரத்தை உருவாக்க வேண்டும் என்ற இலக்கை நான் முன்வைத்து இந்த பொறுப்பை ஏற்றிருக்கின்றேன்.

நாங்கள் ஒரு இலக்கை தீர்மானித்து விட்டோம். அந்த இலக்கை அடைவதற்கு சில சீரான, நேர்மையான பாதையிலே முன்னெடுக்கின்றோம். வழியிலே இருந்து கல்லெறிந்து கொண்டு இருப்பவர்களுக்கு எல்லாம் என்னால் பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது, என்னுடைய இடத்தை நான் சேரும் வரை.

அந்த அடிப்படையில் தவறான, நெறிபிறழ்வான பக்க விளைவுகளையோ ஆபத்துக்களையோ ஏற்படுத்துகின்ற எந்த ஒரு செயல்பாட்டையும் ஒரு முதல்வராக நான் முன்னெடுக்க மாட்டேன். சூரிய ஒளியிலே ஏற்படுகின்ற ஆபத்தை விட, ஒரு உயரமான கோபுரத்திலுள்ள அலைவரிசையால் ஏற்படுத்தப்படுகின்ற பக்கவிளைவுகள் ஆபத்துக்களை விட 1000 இல் ஒரு மடங்கு ஆபத்து குறைந்த நவீன ஸ்மாட் கம்பங்களைதான் நாங்கள் நிறுவிக்கொண்டிருக்கின்றோம். அதிலே தற்போதுள்ள 4ஜி இனை பொருத்துவதற்கு அவர்கள் பரிவர்த்தனை நிலையம் ஊடாக அனுமதியை பெற்று வந்த பிறகு அவர்களுடைய அனுமதி கிடைக்கப்பெற்றால் மட்டுமே அதிலே நாங்கள் பொருத்துவதற்கு அனுமதிப்போம். அதுவரையில் ஏனைய சேவைகள் அந்தக் கம்பங்கள் ஊடாக மக்களுக்கு கிடைக்கும்.

எனவே தவறான, பொய்யான பரப்புரைகளை நம்பி உங்களையும், மக்களையும் குழப்பத்துக்கு உட்படுத்தி பிரச்சினைகளை ஏற்படுத்தாமல் தயவு செய்து ஒரு நேர்மையான முறையில் முன்னெடுக்கப்படுகின்ற மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய கருமங்களை ஆற்றுவதற்கு வழிவிடவேண்டும் என்று தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன் என்றுள்ளது.

(ஒ.5,21,105)





# சம்பள உயர்வினை வலியுறுத்தி ஆசிரியர் சங்கங்கள் போராட்டம்

வவுனியா, ஜூலை 12

வவுனியா தெற்கு வலய ஆசிரியர் சங்கங்கள் ஒன்றிணைந்து சம்பள உயர்வை வலியுறுத்தி கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் மேற்கொண்டன.

வவுனியா பழைய பேருந்து நிலையத்திலிருந்து மணிக்கூட்டு கோபுர வீதி வழியாக சென்று வவுனியா தெற்கு வலய கல்வி பணிமனைக்கு முன்பாகச் சென்று கோசங்களை எழுப்பியவாறு மேற்படி போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

போராட்டத்தில் கலந்து கொண்ட ஆசிரியர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

'இருபத்தியிரண்டு வருடங்களாக ஆசிரியர்களுக்கான சம்பள உயர்வு இது வரை வழங்கப்படவில்லை. எதுவித மாற்றங்களும் செய்யப்படவில்லை, ஆசிரியர்களுக்கு மன அழுத்தங்களை தரக்கூடிய வேலைகளை செய்கிறார்களே தவிர, ஆசிரியர்கள் சுதந்திரமாக கற்பிப்பதற்குரிய வழி வகைகள் எதுவும் செய்துதரவில்லை. வரவு - செலவு திட்டத்தில் கல்விக்கு ஆறு வீதத்தால் அதிகரிக்க அரசு மறுத்துவருகின்றது. இன்று நாங்கள் வவுனியா தெற்கு வலயத்தில் ஆரம்பித்திருக்கின்றோம். இப் பிரச்சினையை இத்துடன் நிறுத்தாது தொடர்ச்சியாக மாகாண மட்டம் மற்றும் தேசிய மட்டம் என்று எமது உரிமைகளை வென்றெடுக்கும்வரை கொண்டு செல்வோம் என்று தெரிவித்தனர். (ம-ஜ)

# ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

வடமராட்சி, தெற்கு மேற்கு கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலர் தயாரூபன் தலைமையில் இடம்பெறும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் இணைத் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஜ-21)

## இந்தியத் தகவலால்

# கராச்சியிலிருந்து போதைப்பொருளுடன் வந்த கப்பலை இலங்கை மடக்கியதாம்

கொழும்பு, ஜூலை 12

கராச்சியிலிருந்து போதைப் பொருள்களை ஏற்றிய இரண்டு படகுகள் இலங்கைக்கு வந்துகொண்டிருப்பதாக இந்தியா விடுத்த எச்சரிக்கையை தொடர்ந்து இலங்கைக் கடற்படையினர் இரண்டு படகுகளையும் கைப்பற்றியுள்ளனர் என்று இந்திய செய்திச் சேவையொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தியாவின் போதைப்பொருள் கட்டுப்பாட்டு பணியகம் கராச்சியிலிருந்து இலங்கை நோக்கி சென்று கொண்டிருந்த படகுகள் குறித்து இலங்கை அதிகாரிகளை எச்சரித்ததை தொடர்ந்தே அந்தப் படகுகள் கைப்பற்றப்பட்டன என்று இந்திய செய்திச்சேவை தெரிவித்துள்ளது.

இந்தப் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஐ.எஸ். அமைப்பு ஈடுபட்டுள்ளது. அவர்களுக்கு இதன் மூலமே வருமானம் கிடைக்கின்றது என்று இந்திய புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கிடைக்கும் பணத்தை பயன்படுத்தி இலங்கையில் தீவிரவாத கொள்கைகளை முன்னெடுப்பதற்கு அவசியமான நிதியை பெற்றுக்கொள்கின்றனர் எனவும் இந்திய புலனாய்வு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (ஒ.5)

# ஈஸ்ரர் குண்டுத் தாக்குதலில் காயமடைந்தவர் நேற்றுச் சாவு

மட்டக்களப்பு, ஜூலை 12

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் காயமடைந்த பெண்ணொருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு கூழாவடியைச் சேர்ந்த கருணாகரன் உமாசங்கரி (வயது-22) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு மருத்துவமனையிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக ராகம மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு சிகிச்சைப் பெற்றுவந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரின் உயிரிழப்பையடுத்து, மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 32ஆக அதிகரித்துள்ளது. (ஒ.5)

# பொதுமக்கள் மீது ராணுவத்தினர் தாக்குதல் ட்ரயல் அட் பார் அமர்வுக்கு கோரிக்கை

கொழும்பு, ஜூலை 12

ரதுபஸ்வெலவில் குடிநீர் கோரிப் போராட்டம் நடத்திய பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாக நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பாக விசாரிக்க, மூன்று நீதியரசர்களைக் கொண்ட ட்ரயல் அட் பார் அமர்வை நியமிக்குமாறு உயர் நீதிமன்ற தலைமை நீதியரசரிடம், சட்டமாஅதிபர் கோரியுள்ளார்.

இராணுவத்தைச் சேர்ந்த பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்த்தன (தற்போது மேஜர் ஜெனரல்), ஸ்ராவ் சார்ஜன்ட் அருண சிறிசேன, கோப்ரல்கள் திலகரத்ன, லலித் கபிரே ஆகியோருக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்ய சட்டமா அதிபர் பணித்துள்ளார்.

2013ஆம் ஆண்டு ஓகஸ்ட் 1ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்தில் 3 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன், 33 பேர் படுகாயம் அடைந்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு தலைமை தாங்கிய பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்த்தன பின்னர் துருக்கிக்கான இலங்கைத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.

பின்னர் மேஜர் ஜெனரலாகவும் தரமுயர்த்தப்பட்டு, பாதுகாப்பு அமைச்சில் பணியில் அமர்த்தப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

# யாழ். மாவட்டச் செயலகத்தில் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு

## பொதுமக்கள் தகவல் வழங்கலாம்

*யாழ்ப்பாணம்,ஜூலை 12*

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

போதையற்ற தேசத்தை உருவாக்கும் சிந்தனைக்கு வலுச்சேர்க்கும் வகையில் வடக்கு மாகாண ஆளுநரின் ஆலோசனைக்கு அமைவாக இந்தப் போதைத் தடுப்புப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப் பிரிவின் ஊடாக பொதுமக்கள் வழங்கும் தகவல்களுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

கஞ்சா, ஹெரோய்ன் போன்ற போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனை தொடர்பான தகவல்களையும், பொது இடங்களில் மது அருந்துதல், சிகரட் புகைத்தல் போன்ற தகவல்களையும், கள்ளச்சாராயம் மற்றும் கசிப்பு உற்பத்தி செய்யப்படும் இடங்கள் போன்ற விவரங்களையும் பொதுமக்கள் எமக்கு தெரியப்படுத்த முடியும்.

இவ்வாறான சமூகச் சீர்கேடான விடயங்களைத் தெரியப்படுத்த 021 222 7583 என்ற தொலைபேசி இலக்கத்துக்கும், 021222 3712 என்ற தொலைநகல் இலக்கத்துக்கும் மற்றும் drugfreejaffna@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அறியத்தரவும்.

கடிதம் மூலம் தெரிவிக்க விரும்புபவர்கள் "போதைப்பொருள் தடுப்புப் பிரிவு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பணம்" என்ற முகவரிக்குத் தெரியப்படுத்தவும்.

மேலும் தகவல்கள் வழங்குபவர்கள் தொடர்பான விடயங்கள் இரகசியமாகப் பேணப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அரிசி விலையை கூட்டி விற்ற கடைக்காரருக்குத் தண்டம்

தென்மராட்சி, ஜூலை 12

நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதல் விலைக்கு அரிசியை விற்பனை செய்த பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை முகாமையாளருக்கும், திகதி காலாவதியான விம் சவர்க்காரத்தை விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகருக்கும் தண்டம் விதிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையினர் கொடிகாமம் பகுதியில் அண்மையில் பரிசோதனை நடத்தினர்.

இதன்போது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையொன்றில் நிர்ணய விலையை விட கூடுதல் விலைக்கு சம்பா அரிசியை விற்பனை செய்த முகாமையாளருக்கு எதிராகவும், திகதி காலாவதியான விம் சவர்க்காரத்தை விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகருக்கு எதிராகவும்' சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்

இந்த வழக்குகள் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது கிளை முகாமையாளருக்கு 6 ஆயிரம் ரூபாவும், வர்த்தகருக்கு 3 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)





## காக்கையன் குளம் தூர் வாரித் துப்புரவு

கொடிகாமம்,ஜூலை 12

கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் உள்ள காக்கையன் குளம் சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் செ.மயூரனின் ஏற்பாட்டில் துப்புரவு செய்யப்பட்டு தூர் வாரப்பட்டது. கொடிகாமத்தைச் சேர்ந்த ஐயாத்துரை விஜயலட்சுமியின் ஞாபகார்த்தமாக அவரது மகன் ஐயாத்துரை ராகவனின் நிதி ஒதுக்கீட்டில் இந்தக் குளம் நேற்றுமுன்தினம் துப்புரவு செய்யப்பட்டது.

இதில் சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் பிரதேச சபை உறுப்பினர்கள் சி.சிவநேசன் வை. ஜெகதாஸ் மிருசுவில் சித்த போதனா மருத்துவ அதிகாரி க.றஜிதா ஆகியோர் கலந்து கொண்டனர்.

சாவகச்சேரி பிரதேச சபை ஊழியர்கள் சமூகமட்ட அமைப்புக்கள் நலன் விரும்பிகள் இந்த சிரமதானத்தில் ஈடுபட்டனர் குடிதண்ணீர் பற்றாக்குறை மற்றும் நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் நோக்குடனும் எதிர்காலச் சந்ததியினரைக் கருத்தில்கொண்டு நன்னீர் வளத்தை பாதுகாக்கும் நோக்கில் இந்த குளம் துப்புரவு செய்யப்பட்டது. (ஐ-9)

## திறன் வகுப்பறை திறப்பு

காரைநகர்,ஜூலை 12

காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறையின் திறப்பு நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு இடம்பெற உள்ளது.

வித்தியாலய அதிபர் க. பேரின்பகுமார் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இளங்கோ, சிறப்பு விருந்தினராக காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ.குமரேசமூர்த்தி, மதிப்புறு விருந்தினர்களாக க.ஜெயராஜ், திருமதி ப.அருமைத்துரை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பழைய மாணவர்களின் நிதி அனுசரனையுடனும், ரட்ணம் பவுன்டேசனின் அனுசரனையுடனும் இந்த நிகழ்வு இடம்பெறுகின்றது. (ஐ-250)

## கூட்டுறவு தினத்தை முன்னிட்டு யாழில் உந்துருளிப் பவனி

யாழ்ப்பாணம், ஜூலை 12


97ஆவது பன்னாட்டு கூட்டுறவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் உந்துருளிப் பவனி இடம் பெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த கூட்டுறவாளர்கள் இணைந்து உந்துருளிப் பவனியை நாளை சனிக்கிழமை மேற்கொள்ளவுள்ளனர்.

பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, கொடிகாமம், உரும்பிராய், தெல்லிப்பழை, காரைநகர் ஆகிய இடங்களில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களின் முன்றலில் காலை 7 மணிக்கு உந்துருளிப் பவனி ஆரம்பிக்கப்பட்டு காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நிறைவுறும்.

உந்துருளிப் பவனியைத் தொடர்ந்து வீரசிங்கம் மண்டபத்தில் சிறப்புக் கூட்டமும் இடம்பெறவுள்ளது என்று யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை தெரிவித்தது. (ஒ.5,21)

## தேர்த்திருவிழா



யாழ்ப்பாணம் வடமராட்சி புலோலி பருத்தித்துறை பசுபதீஸ்வரர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. சிவபெருமான் தேரில் வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள் புரிந்தார். (ஐ)

## நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம்,ஜூலை 12.

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை நோயாளர் நலன் புரிச் சங்க நிர்வாகத் தெரிவு மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது.

மருத்துவமனை நலன் புரிச் சங்கமானது ஆண்டுக்கு 40 லட்சம் ரூபா வருமானம் தரும் ஓர் அமைப்பாகவும் முக்கிய சேவை மையமாகவும் விளங்குகிறது.

பிரதேச செயலக கணக்காளர் மற்றும் சமூக சேவை அலுவலகர் முன்னிலையில் இடம்பெற்ற நிர்வாகத் தெரிவில் தலைவராக முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேள், செயலராக ஓய்வு பெற்ற கிராம அலுவலகர் ஞா.செல்வரட்ணம் ஆகியோர் போட்டியின்றி தேர்வானபோதும் பொருளாளர் பதவிக்காக முன்னாள் தலைவர் ஜீவநாயகம் மற்றும் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவர் இராமச்சந்திரனுக்கும் இடையே போட்டி காணப்பட்டது.

இதனால் வாக்கெடுப்பு இடம்பெற்று ஜீவநாயகம் 55 வாக்குகளையும், இராமச்சந்திரன் 117 வாக்குகளையும் பெற்றனர். இதன்படி பொருளாளராக இராமச்சந்திரன் தெரிவு செய்யப்பட்டார். (ஐ-105)

## கூட்டுறவை அழியவிடாது காப்பதில் ப.தெ.அ.கூ சங்கங்கள் முன்னிலையில்

யாழ்ப்பாணம்,ஜூலை 12

கூட்டுறவை அழியவிடாது காப்பதில் பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்கள்முதன்மைபெறுகின்றன .

இவ்வாறு புகழாரம் சூட்டினார் கிராமிய பொருளாதார ஆய்வாளர் அகிலன் கதிர்காமர்.

யாழ்ப்பாணம் வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் கொத்தணியால் பன்னாட்டு கூட்டுறவு தின நிகழ்வு அண்மையில் கொண்டாடப்பட்டது .

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"எத்தனையோ அங்கத்தவர்களின் உழைப்பின் மூலம் உருவாக்கப்பட்ட கூட்டுறவு அமைப்பை அழியவிடாது கட்டிக்காக்க எல்லோரும் முன்வர வேண்டும்.

அந்த வகையில் இந்தக் கூட்டுறவு நிறுவனங்கள் நமது சேவைகள் மூலம் தமது அங்கத்தவர்களுக்கும் தம்மை நம்பி வாழ்கின்ற நுகர்வோருக்கும் சேவைகளையும் வழங்குவதில் முன்மாதிரியாகச் செயற்படுகிறார்கள்.

இன்றுகூட இந்த பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்கள், பணியாளர்கள் மதிப்பளிக்கப்படுகின்றனர்.

இவற்றைப் பார்க்கின்றபோது தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையிலும் கூட்டுறவை அழியவிடாது பாதுகாப்பதில் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்கள் முதன்மை பெறுகின்றன." என்று புகழாரம் சூட்டினார். (ஐ-63)

## மின்தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்ப்பாண மாவட்டத்தில் மாதகல், காஞ்சிபுரம், குசுமாந்துறை, காட்டுப்புலம், யம்புகோளப்பட்டினம், யம்புகோளப்பட்டினம் வாடி வீடு ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் ஆனந்தபுரம், பாரதிபுரம், கிருஸ்ணபுரம், மலயாழபுரம், இரணைமடு சந்தி, கிளிநொச்சி மருத்துவமனை, இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், இராணுவ ஆதார மருத்துவமனை, இரத்தினபுரத்திலிருந்து இரணைமடு வரை, திருவையாறிலிருந்து இரணைமடு வரை, ஜெயந்திநகர், செல்வாநகர், கனகபுரம், அம்பாள்குளம், உருத்திரபுரம்,

கோணாவில், ஸ்கந்தபுரம், அம்பலப்பெருமாள், முருகண்டி ஒரு பகுதி, அக்கராயன்குளத்திலிருந்து வன்னேரிக்குளம் ஜெயபுரத்திலிருந்து வலைப்பாடு வரை, பல்லவராயங் கட்டிலிருந்து வெள்ளாங்குளம் வரை,வட்டக்கச்சிபண்ணை, இரணைமடு வானூர்திப் படை, உருத்திரபுரம் பல நோக்குகூட்டுறவுச் சங்கம், 651 ஆவது படைப்பிரிவு முகாம், நாச்சிக்குடா கடற்படை முகாம், இயாஸ் மொகமட் ஐஸ் தொழிற்சாலை, மாங்குளம், வன்னிவிளாங்குளம், அம்பாள்புரம், செல்வபரம், ஒட்டறுத்தகுளம், முன்றுமுறிப்பு, பாண்டியன்குளம், பொன்னகர், பூவரசங்குளம், விநாயகபுரம், அனிசின்குளம், மல்லாவி, யோகபுரம், தேராங்கண்டல், தென்னியங்குளம், துணுக்காய், கல்விளான், ஆலங்குளம் இராணுவ முகாம், பிள்ளையார் அரிசி ஆலை, மத்திய வங்கி கிளிநொச்சி, ஜேர்மன்தொழிநுட்ப கல்லூரி, தகவல் தொழிநுட்ப பீடம், அறிவியல்நகர், பொறியியல் பீடம், விடியல், விவசாய பீடம், வானவில், முறிகண்டி, கொக்காவில், கொக்காவில் தொலைதொடர்பு நிலைய இராணுவமுகாம், கொக்காவில் ரூபவாகினி கூட்டுதாபனம், புத்து வெட்டுவான், ஐயன்குளம், பனிகன்குளம், மாங்குளம் கொலணி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டதற்கு மேலதிகமாக வவுனியா உப மின்நிலையத்தில் மேற்கொள்ள வேண்டிய அவசர திருத்த வேலை காரணமாக நாளை சனிக்கிழமை காலை 7 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வவுனியா மாவட்டத்தில் சில பகுதிகளில் மின் விநியோகம் தடைப்படும்.

வவுனியா நகரம், இறம்பைக்குளம், மூன்றுமுறிப்பு, மதவுவைத்தகுளம், ஈரப்பெரியகுளம், கற்குண்டமடு, அளுத்கம, பூ ஓயா, பஹல அளுத்வத்த, கண்டி வீதி, தவசிக்குளம், குட்செட் வீதி, பண்டாரிக்குளம், நெடுங்குளம், தெற்கிலுப்பைக்குளம், கோவில்குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, வெளிக்குளத்திலிருந்து துட்டுவாகை வரை, கருவேலப்புளியங்குளம் மலையா பருத்திக்குளம், மடுகந்த, அட்டம்பஸ்கட, மாமடுவிலிருந்து பொக ஸ்வேவா வரை, பறயனாலங்குளத்திலிருந்து முகத்தான்குளம் வரை, நெளுக்குளத்திலிருந்து பறயனாலங்குளம் வரை, பூவரசங்குளத்திலிருந்து செட்டிக்குளம் வரை, புளிதறித்த புளியங்குளத்திலிருந்து செக்கட்டிப்புலவு வரை, பிரமனாளங்குளத்திலிருந்து பெரியதம்பனை வரை, பூந்தோட்டம், வைரவபுளியங்குளம், பட்டானிச்சூர், குருமன்காடு, வேப்பங்குளம், குளுமாட்டு சந்தி, கூமாங்குளம், மறக்கறம்பளை, நெளுக்குளம், சாம்பல்தோட்டம், பாரதிபுரம், விநாயகபுரம், இராயேந்திரகுளம், நாகர்இலுப்பைகுளம், அறுகம் புல்வெளி, அவுசதாப்பிட்டிய, நவகம, பழையனூர், உளுக்குளம் சின்னத்தம்பனை, நேரியகுளம், இலுப்பைக்குளம், அழகாபுரி, முதலியார்குளம் சின்னசிப்பிக்குளம், முகத்தான்குளம், செட்டிக்குளம், வவுனியா மருத்துவமனை, பூங்கா வீதி, கூசைப்பிள்ளை யார்குளம், கொக்கெலிய, அக்போபுர, கச்சேரியடி நீர்ப்பாசன சபை, சுகாதார திணைக்களம், இலங்கை தொலைத்தொடர்பு நிலையம்,மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, இலங்கை வங்கி, ஓவியா விடுதி, ராணி அரிசி ஆலை, லங்கா அரிசி ஆலை, கார்கில்ஸ் பூட் சிற்றி, ஆடைத்தொழிற்சாலை, வவுனியா இராணுவ முகாம், மூன்றுமுறிப்பு இராணுவ முகாம், ஈரப்பெரியகுளம் இராணுவ முகாம், ஈரப்பெரியகுளம், கீர்த்தி அரிசி ஆலை, குடாகச்சக்கொடிய கல்லுடைக்கும் ஆலை, பிரசன்னா கல்லுடைக்கும் ஆலை, வவுனியா பல்கலைக்கழகம், பம்பைமடு பல்கலைக்கழகம் , நெளுக்குளம், தொழிநுட்பக்கல்லூரி, விமானப்படை வேளாங்குளம், செட்டிகுளம், ஆகிய இடங்களிலும் மேலும் மன்னார் மாவட்டத்தில் பறயனாலங்குளத்திலிருந்து முருகன் வரை ,நானாட்டான் பிரதேச சபை ஆகியவற்றில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)





# யூலியன் அசாஞ்சேயை உடன் விடுதலை செய்!

யாழ்ப்பாணம்,ஜூலை 12
விக்கிலீக்ஸ் நிறுவுநர் யூலியன் அசாஞ்சேயை அமெக்காவிடம் ஒப்படைப்பதை தடுப்பதற்கான மேலதிக நவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கும் வகையில் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
சோசலிச சமத்துவ கட்சியும் அதன் சமூக சமத்துவத்துக்கான இளைஞர் அமைப்பு மற்றும்மாணவர்அமைப்பும் இணைந்து யாழ்ப்பாணம் முதன்மைப் பேருந்து நிலையத்துக்கு முன்பாக இந்த போராட்டத்தை பிற்பகல் 3 மணியளவில் முன்னெடுத்தனர். (ஐ-7)

## சேமிப்பு தொடர்பில் பெற்றோருக்கு போதிய விழிப்புணர்வு இல்லை

*ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன் தெரிவிப்பு*

சாவகச்சேரி, ஜூலை 12
சிறுவயதில் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டுமென்ற விழிப்புணர்வு கிராமப்புற பெற்றோரிடையே காணப்படாமையால் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் உச்சநிலை சித்தி பெற்ற பல மாணவர்கள் பல ஊக்குவிப்பு பரிசில்களைப் பெறத் தவறிவிடுகின்றனர். வங்கிகள் தமது வங்கியில் இணைந்து நன்மைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள் என பாடசாலைகளில் மாணவர்கள் மத்தியில் உரை யாற்றுகின்றனரே தவிர பெற்றோரிடையே விழிப்பு ணர்வை ஏற்படுத்துவதில்லை.
இவ்வாறு பெற்றோரிடையே போதிய விழிப்புணர்வு இன்மையால் வலயத்தைச் சேர்ந்த பல மாணவர்கள் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் உச்ச புள்ளிகளைப் பெற்றிருந்த போதிலும் பரிசில்களைப் பெறும் வாய்ப்பினை இழந்து விடுகிறார்கள்.
கொமஷல் வங்கியின் சாவகச்சேரி கிளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற அருணலு சிறுவர் சேமிப்புத் திட்டத்தில் இணைந்து கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கி மதிப்பளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன் தெரிவித்தார்.
"சிறுவயது சேமிப்பு என்பது மாணவரின் எதிர்காலத்தை ஊக்குவிக்கும் செயற்பாடாக அமையும் என்பது பல பெற்றோருக்குத் தெரியாது. வலயத்தில் உள்ள 54 பாடசாலைகளில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் 800 மாணவர்கள் கற்கின்ற போதிலும் நகரப் புறப் பாடசாலைகளின் மாணவர்களின் பெற்றோர்களே தமக்குப் பிடித்த வங்கிகளில் தமது பிள்ளைகளுக்கு சிறுவயது சேமிப்பை மேற்கொள்கின்றனர். கிராமப் புறப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கு தரம் ஒன்று வகுப்பிலிருந்து மாதாந்தம் சிறு தொகையை வங்கியில் செலுத்திவந்தால் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையாமல் விட்டாலும் அந்த மாணவன் பல்கலைக்கழகக் கல்வியை பெறும்போது பெருந் தொகையாக மாறி அங்கு ஏற்படும் தேவைகளுக்கு அந்த நிதி பயன்படும் என்பது தெரியாமல் உள்ளனர். வங்கிகள் கிராமங்கள் தோறும் கிளைகளை உருவாக்கினாலும் சிறுவயதுச் சேமிப்புத் தொடர்பான விழிப் பணர்வைப் பெற்றோரிடையே ஏற்படுத்தவேண்டும்." என்றார். (9)





காரைநகர் கிழவன்காடு கலா மன்ற அறநெறிப் பாடசாலையால் மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வு கடந்த சனிக்கிழமை மாலை கலாமன்ற வைத்தீசுவரக்குருக்கள் அரங்கில் இடம்பெற்றது. இதன்போது மாணவர்களின் கலை நிகழ்வுகள் மற்றும் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் விவாத அரங்கு என்பன இடம்பெற்றன. (ஐ-250)

## பிரதேச மலருக்கு ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம்,ஜூலை 12
வலி.மேற்கு சங்கானை பிரதேச செயலகமும், வலி. மேற்கு கலாசாரப் பேரவையும் வருடந்தோரும் பிரதேச மலர் ஒன்றைத் தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்றன.
இவ் வருடமும் "பணுவில். இதழ் - 5" வெளியிடும் நோக்கில் அதற்கான ஆக்கங்களை கோரியுள்ளன.
பிரதேசம் சார் தொல்லியல் வரலாறு,ஆன்மீகம், சமூகவியல், மானிடவியல்,கலைமரவுகள்,வாழ்வியல்,மரபுரிமைகள், வழக்காறுகள் மற்றும் பொது விடயங்கள் சார்ந்த ஆக்கங்கள் ஆய்வுக்கட்டுரைகளாகவும் கட்டுரைகளாகவும், பத்தி எழுத்துக்களாகவும் புனைகதைகளாகவும், கவிதைகளாகவும் அனுப்பிவைக்கமுடியும்.
ஆக்கங்கள் யாவும் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் "தலைவர், பிரதேச கலாசாரப் பேரவை , வலி மேற்கு , சங்கானை" என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அன்றி தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படவேண்டும் என வலி மேற் குப் பிரதேச செயலர் திருமதி பொ.பிரேமினி அறிவித்துள்ளார்.
மேலும் இவ்வாண்டுக்கான பிரதேச கலாசார விழாவில் பிரதேச மட்ட விரதான "கலைவாரிதி" விருது வழங்குவதற்கு ஏதுவாக பிரதேச கலைஞர்கள் பற்றிய சிபார்சு வழங்க விரும்புவோர் மேற்குறித்த திகதிக்கு முன்னர் கலைஞர்களின் விவரங்களை அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார். (ஐ)

# 2025ஆம் ஆண்டு இலங்கை எய்ட்ஸ் அற்ற நாடாக மாறும்

## சமுதாய மருத்துவ நிபுணர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12

2025 ஆம் ஆண்டு எய்ட்ஸ் அற்ற நாடாக இலங்கை மாறும். இவ்வாறு பாலுறவு நோய்த் தடுப்பு சிறப்பு வேலைத் திட்டத்தின் சமுதாய மருத்துவ நிபுணர் சத்யா கெரத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தாயிலிருந்து குழந்தைக்கு கடத்தப்படும் சிபிலிஸ் மற்றும் எச்.ஐ.வி. ஆகியன நாட்டில் தற்போது முற்றாக ஒழிக்கப்பட்டுள்ளது.

2013ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை நாம் இதற்கான வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினோம்.


2018ஆம் ஆண்டளவில் தாயிலிருந்து பிள்ளைக்கு கடத்தப்படும் செயற்பாட்டை ஒழித்துவிட்டோம். கர்ப்ப காலத்தில் கர்பிணிப் பெண்களை குருதி பரிசோதனைக்கு உட்படுத்தி நோய் தொடர்பான சிகிச்சை முறைகளை மேற்கொண்டு வருகிறோம்.

இந்த நடைமுறை தற்போதும் தொடர்ந்துகாணப்படுகிறது. 2018ஆம் ஆண்டு முதல் தற்போது வரை ஒரு குழந்தை கூட இந்தத் தொற்றுக்கு உள்ளாகவில்லை.

எமது நாட்டில் தாயிலிருந்து பிள்ளைக்கு கடத்தப்படும் சிபிலிஸ் மற்றும் எச்.ஐ.வி. நோய் ஒழிக்கப்பட்டு விட்டது என்பதை உலக சுகாதார நிறுவனத்துக்கு விஞ்ஞான ரீதியாக தெரியப்படுத்தி மதிப்பீட்டுச் சான்றிதழைப் பெறுவதற்கு முயற்சி எடுத்து வருகின்றோம்.

உலக நாடுகளில் எய்ட்ஸ் 2030 ஆம் ஆண்டளவில் முழுமையாக ஒழிக்கப்படுவதற்கான வேலைத் திட்டங்கள் நடைபெற்று வருகிறன. நாமும் அதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றோம்.

2025 ஆம் ஆண்டு எய்ட்ஸ் அற்ற நாடாக இலங்கை இருக்கும். நாடு முழுவதும் சுமார் 33 கிளினிக் நிலையங்கள் ஊடாக இதற்கான பரிசோதனைகள், விழிப்புணர்வுகள், சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறன - என்றார். (ஒ.5,7)



## மீன் பிடியில் வன உயிரிகள் திணைக்களம்

தமக்கு மட்டும் தடையா என்று மக்கள் ஆவேசம்

வடமராட்சி, ஜூலை 12

வடமராட்சி கிழக்கு கேவில் பகுதியில் உள்ள குளங்களில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களை வன உயிரிகள் திணைக்களத்தினர் தடுத்து வருகின்றனர் என்று மீனவர்கள் குற்றம் சுமத்துகின்றனர். எனினும் குறித்த பகுதிகளில் வன உயிரிகள் திணைக்களத்தினர் தொடர்ந்தும் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர் என்றும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் மீனவர்கள் தெரிவித்ததாவது:

நாம் பல ஆண்டுகளாக குளங்களில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றோம்.

தற்போது தேசிய பூங்கா எனும் பெயரில் வன உயிரிகள் திணைக்களத்தால் அபகரிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள குளங்களில் மீன்பிடிக்கச் செல்லும் போது வன உயிரிகள் திணைக்கள அதிகாரிகள் எம்மைத் தடுத்து நிறுத்துகின்றனர். இதனால் எமது வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்படுகின்றது. ஆனால் எமக்குத் தடை விதிக்கும் இடங்களில் வன உயிரிகள் திணைக்களத்தினர் தொடர்ந்தும் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்- என்றனர். (ம-160)

## திருப்பழனி பாமாலை இறுவட்டு வெளியீடு

வவுனியா, ஜூலை 12

வவுனியா ஈழத்து திருப்பழன் முருகன் ஆலய "திருப்பழனி பாமாலை" இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு ஆலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

படைப்பாளிகள் உலகத்தின் இலங்கைக்கான ஒருங்கிணைப்பாளர் மாணிக்கம் ஜெகன் இறுவட்டை வெளியிட்டுவைக்க வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன் பெற்றுக்கொண்டார். (ஐ)





## உருத்திரபுரம் கிழக்கு குறுக்கு வீதி ரூ. 7.2 மில்லி. செலவில் சீரமைப்பு

கிளிநொச்சி, ஜூலை 12

கிளிநொச்சி உருத்திரபுரம் கிழக்கு 4 ஆம் குறுக்கு வீதி 40 வருடத்தின் பின் சீரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

உருத்திரபுரம் கிழக்கில் அமைந்துள்ளது கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட 4 ஆம் குறுக்கு வீதி பல வருடங்களாக சீரமைப்பு இன்றி பெரு வெள்ளங்களால் அள்ளுண்ட பள்ளங்களாக காணப்பட்டது. இதனை சீரமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் நீண்ட காலமாக கோரி வந்தனர்.

இவ்வருட முற்பகுதியில் கிளிநொச்சிக்கு வருகை தந்த மீள்குடியேற்ற மற்றும் வடக்கு அபிவிருத்தி அமைச்சின் செயலர் சிவஞானசோதி நேரில் அழைத்து வந்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அப்பகுதி மக்களின் அவல நிலையை விளக்கி இருந்தார். அதன் அடிப்படையில் குறித்த அமைச்சால் ஒதுக்கப்பட்ட 7.2 மில்லியன் ரூபா செலவில் சீரமைப்பு பணிகள் கடந்த 4 ஆம் திகதி கரைச்சி பிரதேச சபையால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் அப்பகுதி மக்களுடன் உருத்திரபுரம் வட்டார உறுப்பினர் கணேசலிங்கம், தவிசாளர் அ. வேழமாலிகிதன் ஆகியோர் ஆரம்ப நிகழ்வில் பங்கு கொண்டு குறித்த சீரமைப்பு பணிகளை ஆரம்பித்து வைத்தனர். (ஐ-6)

வவுனியாவில்

## வர்த்தக நிலையமொன்றில் இளைஞர் குழு அட்டகாசம்

வவுனியா, ஜூலை 12

வவுனியா புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்தினுள் இளைஞர் குழுவென்று புகுந்து தாக்குதல் மேற்கொண்டதில் இருவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

குறித்த வர்த்தக நிலையத்துக்கு முன்பாக பட்டா ரக வாகனத்தில் நபரொருவர் பழங்கள் விற்பனை செய்து வந்துள்ளார். இதனையடுத்து வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் பழங்களை விற்பனை செய்யும் நபரிடம் சென்று இவ்விடத்தில் வாகனத்தில் வியாபாரம் மேற்கொள்ளுவதினால் தமக்கு வியாபாரம் மேற்கொள்ள இடையூறாக உள்ளது என்று தெரிவித்துள்ளார். பல நாள்கள் இது தொடர்ந்துள்ளது. இதையடுத்தே கைகலப்பு இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையில் இரு தரப்பினருக்கிடையே இன்று காலை கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன. (ம)

## மயானத்தையும் விட்டு வைக்காத சிங்களவர்!

### வவுனியாவில் தொடரும் ஆக்கிரமிப்பு

வவுனியா, ஜூலை 12

வவுனியா சிதம்பர புரத்தில் நான்கு கிராம மக்கள் பயன்படுத்தும் மயானத்தை சிங்கள மக்கள் தமக்குரியது என்று உரிமை கோருவதால் சர்ச்சை எழுந்துள்ளது.

வவுனியாவின் எல்லையோர கிராமமான சிதம்பரபுரத்தில் அமைந்துள்ள பொது மயானம் கற்குளம் படிவம் 1, 2, சிதம்பரபுரம், சிதம்பர நகர் கிராம மக்களால் 1992 ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

மயானத்தில் தமது கிராமத்தில் இறந்தவர்களை புதைத்தமைக்கான நினைவுக்கற்களையும் நாட்டியுள்ளனர்.

தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டு வந்த பொது மயானத்துக்கு அண்மையாக, சிங்கள மக்கள் காணிகளை அடாத்தாக பிடித்து குடியேறி வருகின்றனர்.

பொது மயானத்தை அந்தப் பகுதி தமிழ் மக்கள் கடந்த செவ்வாய்க்கிழமை துப்பரவு செய்து கொண்டிருந்தபோது அங்கு வந்த சிங்கள மக்கள் அந்தக் காணி தமக்குரியது எனவும் துப்பரவு செய்ய வேண்டாம் எனவும் தெரிவித்திருந்ததாக கிராம மக்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை மயானப் பகுதிக்கு வருகை தந்த சிங்களப் பிரதேசசபை தலைவர் மற்றும் உறுப்பினர்கள் மயானத்தில் எவ்வித வேலைகளையும் செய்ய வேண்டாம் எனவும் இவ்விடயம் தொடர்பாக பிரதேச சபையில் கலந்துரையாட வேண்டியுள்ளதால் கிராமத்தவர்கள் சார்பில் தமது பிரதேசசபைக்கு வருமாறு தெரிவித்துச் சென்றுள்ளனர். (ஒ.5)

## அரசபேருந்து சேவையை மக்களுக்கு முழுமையாக வழங்க முடியவில்லை


### முல்லை மாவட்ட அரசபேருந்து சாலை அதிகாரி தெரிவிப்பு


முல்லைத்தீவு, ஜூலை 12

அரச பேருந்து சேவையை மக்களுக்கு முழுமையாக வழங்குவதற்கு முல்லைத்தீவு மாவட்டத்தின் சாலைக்கான பேருந்து மற்றும் ஆளணி பற்றாக்குறை காணப்படுவதாக மாவட்ட அரசபேருந்து சாலை அதிகாரி பெ.சிவபாலன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட சாலையில் 23 பேருந்துகள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன. முல்லைத்தீவு மாவட்ட அரசபேருந்து சாலைக்கு பல இடங்களுக்கு புதிய சேவையை மேற்கொள்ள கோரிக்கை கிடைக்கப்பெற்றுள்ளன.

பேருந்து பற்றாக்குறையும், ஆளணிப் பற்றாக்குறையும் காணப்படுவதால் மாவட்டத்தில் மக்களுக்கான முழுமையான சேவையை வழங்கமுடியாது" என்றும் அவர் தெரிவித்தார். (ஐ.ரி)





# தொடருந்துக் கடவைக் காப்பாளர்கள் வவுனியாவில் கவனவீர்ப்பு போராட்டம்

வவுனியா,ஜூலை 12
வடக்கு கிழக்கை சேர்ந்த தொடருந்து கடவைக்காப்பாளர்கள் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை வவுனியா தொடருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்று காலை முன்னெடுத்தனர்.
நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும், பொலிஸாரின் கட்டுப்பாட்டில் இருந்து தமது கடமைகள் தொடருந்து திணைக்களத்தின் கீழ் கொண்டு வரப்படவேண்டும் எனத் தெரிவித்தே கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
தொடருந்துக் கடவைக் காப்பாளர் சங்கத்தின் பிரதிநிதிகள் "250 ரூபா சம்பளத்தை உயர்த்து, பொலிஸாரிடம் இருந்து எம்மை மீட்க வேண்டும், எமது பிள்ளைகளின் எதிர்காலம் என்ன? எம்மை நிரந்தர நியமனத்தில் உள்வாங்கு என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியிருந்தனர். சுமார் ஒரு மணி நேரமாக இவ் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ஐ)

# ரூ.50 லட்சம் இழப்பீடு கேட்டு இரு பொலிஸாருக்கு எதிராக தாயொருவர் மனுத் தாக்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 12
பருத்தித்துறை மணற்காடு பகுதியில் இளைஞர் ஒருவர், பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டமை தொடர்பில் அவரது தாயாரால் 50 லட்சம் ரூபா இழப்பீடு கேட்டு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
சந்தேகநபர்களான பொலிஸ் அலுவலர்கள் இருவரிடமே இந்த இழப்பீட்டுத் தொகையை கொல்லப்பட்ட இளைஞனின் தாயார் கோரியுள்ளார்.
2017ஆம் ஆண்டு ஜூலை 9 ஆம் திகதி பருத்தித்துறை மணற்காடு பகுதியில் மணல் ஏற்றிச் சென்ற பாரவூர்தி ஒன்றின் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் துன்னாலை கரவெட்டி பகுதியைச் சேர்ந்த 25 வயதான யோகராசா தினேஷ் உயிரிழந்தார்.
துப்பாக்கிப் சூட்டுச் சம்பவம் தொடர்பில் உதவிப் பொலிஸ் பரிசோதகர் சிவராசா சஞ்ஜீவ் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் அபுதாலிப் மொகமட் முபாரக் ஆகியோர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.
இந்த நிலையிலேயே குறித்த தாயாரால் மேற்படி வழக்குத் தொடரப்பட்டுள்ளது.
மனுவின் பிரதிவாதிகளாக துப்பாக்கிச் சூட்டை நடத்திய அபுதாலிப் மொகமட் முபாரக், முதலாவது பிரதிவாதியாகவும் துப்பாக்கிச் சூட்டை நடத்த உத்தரவிட்ட உதவிப் பொலிஸ் பரிசோதகர் சிவராசா சஞ்ஜீவ் இரண்டாவது பிரதிவாதி யாகவும் பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மூன்றாவது பிரதிவாதியாகவும் பொலிஸ் மா அதிபர் நான்காவது பிரதிவாதி யாகவும்; சட்ட மா அதிபர் 5ஆவது பிரதிவாதியாகவும் குறிப்பிடப்பட்டுள்ளனர். (ம-37)



புதுக்குடியிருப்பு விவசாயிகள்

# தண்ணீரை சேமித்து நெற்பயிர் செய்கை!

முல்லைத்தீவு,ஜூலை 12
முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு கமநலசேவைகள் திணைக்களத்தின் கீழ் உள்ள விவசாயிகள் தற்போது ஏற்பட்டுள்ள கடும் வறட்சியான நிலையிலும் சிறு குளங்களின் கீழ் உள்ள நீரினைவைத்து சிறப்பான நெற்செய்கையை மேற்கொண்டு வருகின்றனர்.
இடைக்கட்டுக்குளத்தின் கீழ் 110 ஏக்கர் நெற்செய்கையும், அச்சிராகுளத்தின் கீழ் 58 ஏக்கர் நெற்செய்கையும், மருதமடுகுளத்தின் கீழ் 250 ஏக்கர் நெற்செய்கையும், மற்றும் பேராற்றினை நம்பி மல்லிகைத்தீவு 203 ஏக்கர் நெற்செய்கையும் புதுக்குடியிருப்பு கிழக்கில் 184 ஏக்கர் நெற்செய்கையும் செய்கை பண்ணப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு கமநல சேவைகள் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்போது கடும் வறட்சியான காலநிலை ஏற்பட்டுள்ள போதும் தண்ணீரைச் சிக்கனமாக பயன்படுத்தி நெற்பயிர் செய்கை மேற்கொண்டுவருவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (ஐ-ரி3)

# மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

மல்லாவி,ஜூலை 12
உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு முல்லைத்தீவு யோகபுரம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றுவருகிறது.
மல்லாவி கல்வி மேம்பாட்டு அமையத்தால் இந்தக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது. நேற்று வணிக பிரிவு மாணவர்களுக்கான கருத்தரங்கு நடைபெற்றது. இன்று தொடக்கம் 16 ஆம் திகதி வரை கலைப்பிரிவு மாணவர்களுக்கும், நாளை தொடக்கம் 15 ஆம் திகதி வரை கணித. விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கும் கருத்தரங்கு காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (ஐ-74)



# முல்லைத்தீவில் இந்த ஆண்டில் மூன்று யானைகள் உயிரிழப்பு

## வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவிப்பு

முல்லைத்தீவு,ஜூலை 12
முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்த ஆண்டில் இதுவரை மூன்று யானைகள் உயிரிழந்துள்ளதாக மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
வெலிஓயாப்பகுதியில் யானை ஒன்று உயிரிழந்தது., பனிக்கன்குளம் மாங்குளம் பகுதியில் தொடருந்துடன் மோதி யானை ஒன்று உயிரிழந்தது., பழைய கண்டிவீதி கனகராயன் குளப் பகுதியில் யானை ஒன்று குண்டு அடிபட்டு இயலாத நிலையில் உயிரிழந்தது என்று தெரிவிக்கப்பட்டது. இதுவரை முல்லைத்தீவு மாவட்டத்தில் யானைகளின் எண்ணிக்கை தொடர்பில் எந்த தகவல்களும் திரட்டப்படவில்லை என்றும் வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ-ரி3)



# சுயதொழில் உதவி

முல்லைத்தீவு,ஜூலை 12
இரு பெண்கள் இணைந்து சுயதொழில் மேற்கொள்வதற்காக 57 ஆயிரம் ரூபா பெறுமதியான மிக்சர் தயாரிக்கும் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.
முல்லைத்தீவு உடையார்கட்டு, மூங்கிலாற்றில் வசிக்கும் திருமதி செ. தர்மினி மற்றும் திருமதி லெ. ரஞ்சினி ஆகியோருக்கே முல்லைத்தீவு மாவட்ட மக்கள் நலன் காப்பகத்தால் இந்த உதவி வழங்கப்பட்டது. (ஐ-222)

# மக்களின் வாழ்வாதாரம் மேம்படுவது சங்கங்களின் செயல்பாட்டிலேயே

## *மன்னார் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு*

மன்னார், ஜூலை 12
ஒரு கிராம மக்களின் வாழ்வாதார மேம்பாடு என்பது அப்பகுதியில் இயங்கும் சங்கங்களின் செயல்பாட்டிலேயே தங்கியுள்ளது.
இவ்வாறு மன்னார் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திருமதி சீ.ஏ.அமிர்தநாதன் தெரிவித்தார்.
மன்னார் மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கான மாதாந்தக் கூட்டம் செம்மண்தீவில் அமைந்துள்ள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திணைக்கள மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.
இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வேறு மாவட்டங்களை விட மன்னார் மாவட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு 28 மில்லின் ரூபா சுழற்ச்சி முறையிலும், மானிய அடிப்படையிலும் வழங்கப்பட்டுள்ளது.
கடந்த காலங்களில் இயங்காதிருந்த 15 சங்கங்கள் தற்பொழுது சீரமைக்கப்பட்டு தற்பொழுது இயங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
அத்துடன் 7 சங்கங்கள் புதிதாக இணைக்கப்பட்டுள்ளன.
இன்னும் சில கிராமங்களிலிருந்து புதிதாக சங்கங்கள் அரசு சார்பற்ற நிறுவனங்கள் மூலம் இணைவதற்கு விண்ணப்பித்துள்ளன.
சங்கங்கள் புதிதாக இணைய வேண்டுமானால் அரசு சார்பற்ற நிறுவனங்கள் மூலம்தான் வந்து இணைய வேண்டும் என்ற அவசியம் இல்லை. கிராம மக்களாகிய நீங்கள் எங்கள் அலுவலகம் வந்து நேரடியாக இணைந்து கொள்ளலாம். அப்பொழுதுதான் ஒரு கிராமத்தின் வளர்ச்சிக்கு எமது சங்கங்களினூடாக வழங்கும் நிதியை எவ்வாறு கையாளப்பட வேண்டும். உங்கள் செயல்பாடு எவ்வாறு அமைய வேண்டும் என்ற அறிவுரையை வழங்க ஏதுவாகும்.
மன்னார் மாவட்ட கடனுதவி கூட்டுறவு சங்கங்களின் சமாசம் தற்பொழு அரசின் அரவணைப்பு கடன் திட்டத்தின் கீழ் 60 லட்சம் ரூபாவை வழங்கி அவற்றை சுழற்சி மூலம் நடைமுறைப்படுத்தி வருகின்றது.
ஆகவே ஒவ்வொரு சங்கமும் தங்களின் சங்கங்களின் சமாசத்துடன் இணைந்து செயல்படும்போதுதான் அதன் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் வழி சமைக்கும்- என்றார். (ஐ-60)

# அநுராதபுரத்திலிருந்து தெல்லிப்பழைக்கு கொண்டுவரப்பட்ட மருத்துவக் கழிவுகள்

*அவை கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக மருத்துவமனைப் பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜூலை 12

அநுராதபுரத்திலிருந்து தெல்லிப்பழை மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட மருத்துவக் கழிவுகள், கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளதாக, மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் சண்முகராயா தெரிவித்தார்.

புற்றுநோய் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் கியூமோத்துரப்பி எனப்படும் மருந்துகள் காலாவதித் திகதி முடிவடைந்த நிலையில் அவை எரியூட்டுவதற்காக அநுராதபுரத்திலிருந்து தெல்லிப்பழை மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டிருந்தன. அதற்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டது. அதனையடுத்து அவை அங்கு எரியூட்டப்படவில்லை.

'தெல்லிப்பழை மருத்துவமனையில் உள்ள கழிவுகளை எரியூட்டும் இயந்திரம் கொழும்பு அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ளது. ஏனைய மருத்துவமனைகளிலுள்ள எரியூட்டும் இயந்திரம் பழுதடைந்தால், எரியூட்டும் இயந்திரம் உள்ள ஏனைய மருத்துவமனைக்கு மருத்துவக் கழிவுகள் அனுப்பி வைக்கப்பட்டு எரியூட்டப்படும்.

இது தொடர்ச்சியான செயற்பாடு அல்ல' என்று வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் தெல்லிப்பழை மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, ஒரு தொகுதி எடுத்து வரப்பட்டன. அவை அழிக்கப்படவில்லை. களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

அவை 1200 சீ.சீ. வெப்பத்தில் எரிக்க வேண்டும். எமது எரியூட்டும் இயந்திரத்தில் ஆயிரம் சீ.சீ. வெப்பத்திலேயே மருத்துவக் கழிவுகளை எரிக்க முடியும்.

இந்தவிவகாரம்சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து, 1500 சீ.சீ. வெப்பத்தில் எரியூட்டும் கொழும்பை அண்மித்த பகுதியிலுள்ள இடத்துக்கு அவற்றை அனுப்புமாறு சுகாதார அமைச்சு பணித்துள்ளது - என்றார். (ஓ.5.105)



யாழ்ப்பாணம் வடமராட்சி திருநாவலூர் முடிக்கொற்றாவத்தை பிள்ளையார் ஆலய வருடாந்த மணவாளக் கோல உற்சவமும், ஆயிரத்தெட்டு சங்காபிசேகமும் கடந்த திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றன. விநாயகப் பெருமான் வீதி வலம் வந்து பக்தர்களுக்கு காட்சியளித்தார். (ஐ)

## விளையாட்டுப் போட்டிகளில் சென்.ஜேம்ஸ் முன்பள்ளி முதலிடம்

யாழ்ப்பாணம்,ஜூலை 12

முன்பள்ளிகளுக்கிடையே இடம்பெற்ற குடும்ப விளையாட்டுப்போட்டிகளில் பலாலி தெற்கு வசாவிளான் சென் ஜேம்ஸ் முன்பள்ளி முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது.

யாழ்ப்பாணம், குட்டியப்புலம் மகாவித்தியாலயலத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

சென் ஜேம்ஸ் முன்பள்ளி ஒன்பது விளையாட்டு நிகழ்வுகளில் கலந்து கொண்டு ஒன்பது கிண்ணங்களையும் வெற்றிக் கேடயத்தையும் சுவீ கரித்துக்கொண்டது.

கலைவாணி முன்பள்ளி, பாரதி முன்பள்ளி, கலைமகள் முன்பள்ளி, புனித அந்தோனியார் முன்பள்ளி, மழலைகள் முன்பள்ளி, சென் ஜேம்ஸ் முன்பள்ளிகளுக்கிடையே இந்தப் போட்டிகள் இடம்பெற்றன. நிகழ்வில் அதிபர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், கிராம அலுவலகர்கள், பிரதேச செயலக அலுவலர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ஐ)



## தமிழ்ச் சங்க ஏற்பாட்டில் ஆடிப்பிறப்பு நவாலியில்

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் முன்னெடுக்கும் ஆடிப்பிறப்பு விழாவும்நவாலியூர் சோமசுந்தரப் புலவர் நினைவரங்கமும் எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிறபகல் 2.30 மணிக்கு நவாலி மகா வித்தியாலய அரங்கில் நடைபெறவுள்ளது.

தமிழ்ச்சங்க உறுப்பினர் ஜீவா.சஜீவன் தலைமையில் இடம் பெறும் நிகழ்வுகள் புலவரின் சிலைக்கான வழிபாட்டுடன் ஆரம்பமாகும்.

ஆசியுரையைத் தமிழ்ச்சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாசும், வாழ்த்துரைகளை புலவரின் பூட்டனாரும் மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமாகிய சண்.குகவரதன் மற்றும் நவாலி மகா வித்தியாலய அதிபர் கி. கிருஷ்ணானந்தா ஆகியோரும் ஆற்றுவர்.

ஆடிப்பிறப்புக் குறித்த சிறப்புரையை யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத் தலைவர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசனும் நாவாலியூர் சோமசுந்தரப் புலவர் குறித்த நினைவுப் பேருரையை சிவபூமி அறக்கட்டளைத் தலைவரும் தமிழ்ச்சங்க உபதலைவருமாகிய செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகனும் நிகழ்த்துவர்.

யாழ். முன்னணி இசைக்கலைஞர்கள் இணைந்து வழங்கும் சோமசுந்தரப் புலவரின் பாடல்கள் உள்ளிட்ட தமிழிசைப்பாடல்களால் அமைந்த இசைநிகழ்வும் இடம்பெறும். இசைநிகழ்வைத் தமிழ்ச்சங்கச் செயலர் இ.சர்வேஸ்வரா தொகுத்து வழங்குவார். விரிவுரையாளர் வேல். நந்தகுமார் நன்றியுரை வழங்குவார். (ஓ.5)



## கத்தோலிக்க தமிழ் கலவனில் க.பொ.த. உயர்தரம் ஆரம்பிப்பு

மருதங்கேணி,ஜூலை 12

கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் க.பொ.த .உயர்தரம் ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் அதிபர் த.யோகலிங்கம் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வில் பங்குத் தந்தை மைக் றொனால்ட் ,பங்குத் தந்தை ரமேஸ், மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் க.கனகேஸ்வரன், கோட்டக்கல்வி அதிகாரி ச.திரவியராசா, பருத்தித்துறை பிரதேச சபை வட்டார உறுப்பினர் செ. செபஸ்ரியன், சி.பிர சாத் பாடசாலை அதிபர் பழைய மாணவர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (ஐ-160)

## உந்துருளியை மோதிவிட்டு வாகனம் தப்பியோட்டம்

*இளைஞர்கள் மடக்கி பிடித்து பொலிஸிடம் ஒப்படைப்பு*

வவுனியா, ஜூலை 12

வவுனியா மன்னார் பிரதான வீதியில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் பாடசாலை மாணவனும், தாயாரும் காயமடைந்துள்ளனர்.

ஆடைத் தொழிற்சாலைக்கு ஊழியர்களை ஏற்றிச்செல்லும் வாகனம், வவுனியா மன்னார் பிரதான வீதியூடாக சென்று கொண்டிருந்தது. வேப்பங்குளம் பகுதியை அண்மித்து வாகனச் சாரதி திடீரென பிரேக்கைப் பிரயோகித்து வாகனத்தை பின் நோக்கி செலுத்தியுள்ளார். வாகனத்தின் பின்புறமாக நின்ற உந்துருளி மீது மோதிவிபத்துக்குள்ளானது.

உந்துருளியில் பயணத்துக் கொண்டிருந்த தாயாரும், பாடசாலை மாணவனும் காயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

விபத்து இடம்பெற்ற பகுதியிலிருந்து வாகனத்தை சாரதி எடுத்துக்கொண்டு தப்பித்துச்சென்றுள்ளார். இதனை அவதானித்த இளைஞர்கள் வாகனத்தை தொடர்ந்து சென்று மடக்கிப் பிடித்து விபத்து இடம்பெற்ற இடத்துக்கு அழைத்து சென்றதுடன் போக்குவரத்து பொலிஸாருக்கும் தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த போக்குவரத்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வந்ததுடன் வாகனம் மற்றும் உந்துருளியை வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச்சென்றனர். (ஓ.5)

## மக்களுக்கு இடையூறாகத் தரித்து நிற்கும் பேருந்துகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை 12

பொது மக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் பேருந்து தரித்து நின்று பயணிகளை ஏற்றுவது அவதானிக்கப்பட்டால் அவற்றின் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் காரைநகர் சாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட சுழிபுரம் வளைவு சந்தியில் பேருந்துகள் நின்று பயணிகளை ஏற்றி செல்கிறது.

இதனால் பொது மக்களுக்கு சாதாரண வீதிப் போக்குவரத்து இடையூறாக அமைவதுடன் அநேகமான விபத்துக்கள் ஏற்படுகிறது.



இந்த விடயம் தொடர்பில் சபை உறுப்பினர் பிரதேச சபையின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

சந்தி வளைவில் பேருந்து நின்று பயணிகளை ஏற்றுவதால் ஏற்படக் கூடிய விளைவுகள் தொடர்பில் பிரதேச சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டு ,இலங்கை போக்குவரத்து சபையின் காரைநகர் டிப்போக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

பிரதேச சபையின் கோரிக்கை கடிதத்துக்கு காரைநகர் டிப்போ பதில் வழங்கியுள்ளது.

பொது மக்களின் நன்மை கருதி இலங்கை போக்குவரத்துக்கு சொந்தமான பேருந்துகள் சுழிபுரம் வளைவு சந்தி பகுதியில் தரித்து அதில் பயணிகளை ஏற்ற முடியாது.

சந்தியில் இருந்து சுமார் 20 மீற்றர் தூரத்தில் உள்ள பேருந்து தரிப்பிடத்தில் பயணிகளை ஏற்ற வேண்டும். இந்த நடைமுறையை விடுத்து வளைவு சந்திப் பகுதியில் பயணிகளை பேருந்துகள் ஏற்றினால் . சாலை பரிசோதகர் மூலம்அவதானிக்கப்பட்டு போக்குவரத்து சபையின் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்த கடித்ததில் குறிப்பிட பட்டுள்ளது. (ஐ-7)

# வழிப்பறிக் கொள்ளையர்கள் வழுக்கையாற்றில் அட்டகாசம்

## வீதியால் செல்பவர்களை மிரட்டி, துரத்தி பணம், நகை பறிக்கப்படுவதாகக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ்ப்பாணம் வழுக்கையாற்றுப் பகுதியில் வழிப்பறிக் கொள்ளையர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளது என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. அந்த வீதியில் நிலைகொண்டுள்ள கொள்ளையர்கள் வீதியால் செல்பவர்களை வழிமறித்து நிறுத்தி பணம், நகைகளைப் பறிக்க முற்படுகின்றனர்.

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டைச் சந்தியில் இருந்து வட்டுக்கோட்டைச் சந்திவரை செல்லும் வீதியில் உள்ள வழுக்கையாறுப் பகுதியிலே தொடர்ச்சியாக இவ்வாறு வழிப்பறிக்கொள்ளைகள் இடம்பெறுகின்றன. வீதியால் செல்பவர்களை அவதானிக்கும் கொள்ளையர்கள் அவர்கள் தனிமையில் செல்லும் போது அவர்களை வழிமறிக்கின்றனர். நிற்கவில்லை என்றால் துரத்திப் பிடித்து அவர்களிடம் இருக்கும் நகை, பணத்தைக் கொள்ளையடிக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் அந்தப் பகுதியால் சென்ற பெண் ஒருவரிடம் இவ்வாறு வழிப்பறியில் ஈடுபட்டவர்கள் தங்களுடைய கைவரிசையைக் காட்ட முற்பட்டுள்ளனர். அந்தப் பெண்ணை வீதியில் வீழ்த்தி பணத்தைப் பறிக்க முற்பட்டுள்ளனர். வீதியால் மற்றுமொரு வாகனம் வந்ததையிட்டு பெண் தப்பித்தார்.

'வழிப்பறிக்கொள்ளையில் ஈடுபடுவர்கள் மேலங்கி, கையுறை, முகத்தை மூடிய தலைக்கவசம் என்பவற்றை அணிந்து கொண்டு அந்த வீதியால் அங்கும் இங்கும் செல்கின்றனர். தனிமையில், உதவியின்றி வருபவர்களை அவதானித்தால் அவர்கள் தங்களுடைய கைவரிசைக் காட்ட முற்படுகின்றனர். இது தொடர்பில் பொலிஸாருக்கு தெரிவித்தும் பொலிஸார் எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இந்த இடத்தை பொலிஸார் கண்காணித்து குற்றவாளிகளைக் கைது செய்யவேண்டும்' என்று பாதிக்கப்பட்டவர்கள் கேட்டுக்கொண்டனர். (ஒ.5.21)



யாழ்ப்பாணம் வடமராட்சி அல்வாய் வெள்ளிருவை ஞானவைரவர் ஆலய வருடாந்த வேள்வி பொங்கல் கடந்த சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் சிறப்பாக நடைபெற்றது. (ஐ-124)

## வீதி அமைக்கின்ற எமது கனவு மாநகர சபையால் நனவாகியது

### மணல்தறை மக்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12

30 ஆண்டுகளாக குடியிருக்கும் எமக்குஒருவீதிஅமைத்து தாருங்கள் என நாம் சகல கட்சித் தலைவர்கள், அமைச்சர்கள் என அலைந்தபோதும் தேர்தல் வாக்குறுதிகள் மட்டும்வழங்கப்பட்டதேஅன்றி எதுவும் நடக்கவில்லை. இன்றுதான் மாநகரசபை மூலம் எமது கோரிக்கை நிறைவேறியது என்று மணல்தறை ஒழுங்கையில் உள்ள மக்கள் தெரிவித்தனர்.

மணல்தறைஒழுங்கையின் உப ஒழுங்கையில் மணல்தறை குளம் அமைந்துள்ள பிரதேசத்துக்கு அருகில் வாழும் 60க்கும் மேற்பட்ட குடும்பங்களின் முதன்மைப் போக்குவரத்து மார்க்கமான பாதையினை சீரமைத்து தருமாறு நாம் 1997ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக பல நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் எனக் கட்சி பேதமின்றி கோரிக்கை விடுத்து வந்தோம். எனினும் எவருமே சீரமைத்துத் தரவில்லை. இந்த நிலையில் தற்போது எமது பகுதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகர சபை உறுப்பினர் லோகதயாளனிடம் கோரிக்கை முன் வைத் தோம். இவ்வாறு வைக்கப்பட்ட கோரிக்கையினை மாநகர சபை உறுப்பினர் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் கவனத்திற்கு எடுத்துச் சென்று துரித கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் 2 மில்லியன் ரூபாவில் வீதி சீரமைப்புச் செய்யப்பட்டுள்ளது - என்றனர். (ம-105)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை 12

நெல்லியடி குழந்தை இயேசு முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு நிகழ்வு நாளை சனிக்கிழமை வடமராட்சி ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மைவிருந்தினராக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை செயலர் அருணகிரிவினோராஜ். சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை ஏ.ஜே.ஜாவிஸ் , வடமராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்வி பணிப்பாளர் எஸ். தில்லைநாதன், யாழ்ப்பாணம் ஹாட்லிக் கல்லூரி அதிபர் ஆர். ராகவன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-422)

## பாசையூர் கரையாற்றில் வட்டமிட்ட டொல்பின்

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ்ப்பாணம் பாசையூர் கடலில் சுமார் 300 மீற்றர் தூரத்தில் உள்ள கரையாற்றுப் பகுதியில் நேற்று பெரிய இன டொல்பின் ஒன்றைக் கண்டதாக அந்தப் பகுதி மீனவர்கள் தெரிவித்தனர்.

கரையாற்றின் இருபுறம் டொல்பின் மாறிமாறி ஓடித்திரிந்ததாகவும், அரியவகை மீன் என்பதாலும், பிடித்தால் சட்டப்படி குற்றம் என்பதாலும் மீனை பார்த்துவிட்டுவந்ததாக பாசையூரைச் சேர்ந்த மீனவர் சில்பேட் உதயனுக்குத் தெரிவித்தார். டொல்பின் நீண்ட நேரமாக அங்கேயே உலாவுவதால் அது இரவு நேரங்களில் வேட்டையாடப்படலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. கடற்படையினருடைய படகுகளும் அந்தப் பகுதியில் நோட்டமிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு மாகாணத்தின் கடற்பரப்பில் அண்மைக் காலமாக அரியவகை மீன்களின் வருகை அவதானிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு, கிளிநொச்சி, நாச்சிக்குடா போன்ற கடற்பரப்புகளில் அண்மையில் பெரிய இன அரியவகை மீன்கள் பிடிக்கப்பட்டிருந்தன. (ஒ.5.21)

## மாணவர்கள் 50 பேருக்கு ஈருருளிகள் கையளிப்பு

முல்லைத்தீவு,ஜூலை 12

இந்த நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முள்ளிவாய்க்கால் மேற்கு ஜூனியர் உயர் பாடசாலையில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

முள்ளிவாய்க்கால், வள்ளிபுனம், உடையார்கட்டு, கைவேலி, தேவிபுரம், புதுக்குடியிருப்பு மற்றும் விசுவமடு போன்ற பிரதேசங்களில் உள்ள மாணவர்களுக்கே இந்த ஈருருளிகள் வழங்கப்படவுள்ளன.

கிளிநொச்சி மக்கள் அமைப்பின் ஆயிரத்து ஒரு ஈருருளிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 9 ஆவது கட்டமாக இது வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதுவரை இந்த அமைப்பினாள் கிளிநொச்சி மாவட்டத்தில் 651மாணவ்களுக்கும்,மன்னார் மாவட்டத்தில் 50 மாணவர்களுக்கும் ஈருருளிகள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-222)

## முல்லையில் 3 இடங்களில் அலைவரிசை கோபுரங்கள்

முல்லைத்தீவு, ஜூலை 12

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேசங்களில் மூன்று இடங்களில் புதிய அலைவரிசை கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் மக்கள் 5ஜி அலைவரிசை கோபுரங்களாக இருக்குமோ என்ற அச்சத்தில் உள்ளனர்.

வடக்கில் யாழ்ப்பாணத்தில் 5ஜி அலைவரிசைக் கோபுரம் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடைபெற்றுவரும் வேளையில் அதே அலைவரிசை கோபுரங்களை ஒத்தவகையில் புதுக்குடியிருப்பு பிரதே சத்தில் இரண்டு கோபுரங்களுகம் கரைதுறைப்பற்று பிரதேசத்தில் ஒரு கோபுரமும் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. இவை அனைத்தும் தனியார் காணிகளிலும் ஆலய வளாகத்திலும் அமைக்கப்பட்டு அதற்கான ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டுள்ளதாக தெரியவந்துள் ளது.

உடையார் கட்டு பாடசாலைக்கு அருகில் ஒரு கோபுரமும், புதுக்குடியிருப்பு புதிய குடியிருப்பு பகுதியில் ஒரு கோபுரமும், வற்றாப்பளை அம்மன் ஆலய முன்றலில் ஒரு கோபுரமும் காணப்படுகின்றன. இவைஆறுமாதங்களுக்கு மேலாக இயங்கி வருகின்றன. குறித்த கோபுரங்களில் மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இது தொடர்பில் உரிய பிரதேச சபையினரும் மக்களுக்கு தெளிவான விளக்கத்தினை கொடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். (ம-ரி3)



## கற்றல் செயற்பாட்டுக்கு மாணவிக்கு உதவி

யாழ்ப்பாணம்,ஜூலை 12

போரின்போது உறவுகளை இழந்து அம்மம்மாவுடன் வசித்துவரும் மாணவிக்கு கற்றல் உபகரணங்கள்,உணவுப் பொருள்கள் மற்றும் சிறு தொகைப் பணம் என்பன வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் நாகர்கோவில் மகாவித்தியாலயத்தில் தரம் 7 இல் கல்வி கற்கும் ஜெயக்குமார்வெண்ணிலா என்ற மாணவிக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

பதுளையைச் சேர்ந்த மா. ராதிகா தனது பிறந்ததினத்தை முன்னிட்டு இந்த உதவியை வழங்கியுள்ளார். (ஐ-222)

## வர்த்தகர்கள் இருவருக்கு தலா ரூ. 10 ஆயிரம் தண்டம்

வலி.தென்மேற்கு,ஜூலை 12

எச்சரிக்கைப் படம் பொறிக்கப்படாத சிகரெட் பைக்கற்றுகளை விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகர் ஒருவருக்கும், சுட்டுத் துண்டில்லாத உற்பத்திப் பொருள்களை விற்பனைக்குக் கொண்டு சென்ற பேக்கறி உரிமையாளருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா தண்டம்விதிக்கப்பட்டது.

காரைநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.ஜெயபிரதீப் காரைநகர் மீன் சந்தைக்கு முன்பாகவுள்ள வர்த்தக நிலையத்தைச் சோதனைக்குட்படுத்தினார்.

இதன்போது 80 வீதம் எச்சரிக்கைப்படம் பொறிக்கப்படாதசிகரெட் பைக்கற்றுக்களை வைத்திருந்தமையை அவதானித்துள்ளார்.

இதையடுத்து சிகரெட் பைக்கற்றுக்களைக் கைப்பற்றி ஊர்காவற்றுறை நீதிமன்ற த்தில் ஒப்படைத்த சுகாதாரப் பரிசோதகர், வர்த்தகருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தார்.

குறித்த வழக்கு கடந்த 5 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது வர்த்தகர் குற்றத்தை ஏற்றுக் கொண்டதையடுத்து நீதிவான் இவருக்கு 10ஆயிரம் ரூபா தண்டம் விதித்த துடன் சிகரெட்டுகளை அழிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, சுட்டுத் துண்டின்றி உற்பத்திப் பொருள்களை விற்பனைக்குக் கொண்டு சென்ற சங்கானை பேக்கறி உரிமையாளருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கும் அன்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது பேக்கறி உரிமையாளர் குற்றத்தை ஏற்றுக் கொண்டதையடுத்து நீதிவான் இவருக்கு 10ஆயிரம் ரூபா தண்டம் விதித் துள்ளதுடன் கைப்பற்றப்பட்ட பொருள்களை அழிக்கமாறும் உத்தரவிட்டுள்ளார். (ஐ-115)

## தொழில் வழிகாட்டல் வழங்கும் ஸ்மார்ட் சிறிலங்கா திட்டத்துக்கு யாழ்ப்பாணத்தில் அடிக்கல் நடுகை

யாழ்ப்பாணம், ஜூலை 12

நாடு முழுவதும் உள்ள இளையோருக்கு தொழில் தொடர்பான வழிகாட்டல்களை வழங்கும் முகமாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் எண்ணக்கருவுக்கு அமைய அரச தலைவர் அலுவலகத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் ஸ்மார்ட் சிறிலங்கா திட்டத்தின் யாழ்ப்பாண மாவட்ட பயிற்சி நிலையத்தின் அடிக்கல் நடும் நிகழ்வு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலைமையில் யாழ்ப்பாண பிரதேச செயலக வளாகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

25 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இந்த இரு மாடி கட்டடத்தொகுதி எதிர்காலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள இளையோர் சரியான தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்வதற்கான ஒரு தளமாகவும், வழிகாட்டுவதற்கான ஒரு மத்திய நிலையமாகவும் அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை முழுவதிலும் இதுவரை 6 மாவட்டங்களில் ஸ்மார்ட் சிறிலங்கா செயற்திட்டத்தின் பயிற்சி நிலையங்கள் அரச தலைவரால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. இதன் பணிப்பாளர் நாயகமாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எரிக் வீரவர்த்தன பணியாற்றி வருகின்றார். (ஒ.5,7,106)

# ஒத்துவராத முன்னணியை விலக்கி மாற்று அணியை உருவாக்க வேண்டும்!

## கூறுகிறார் சுரேஸ் பிரேமசந்திரன்

யாழ்ப்பாணம், ஜூலை 12

ஒரு மாற்று அணி தமிழ் மக்களுக்குத் தேவை. அந்த அணி ஓரிரு கட்சிகள் அல்லாது தமிழ் மக்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றக்கூடிய பலமான அணியாக உருவாக்கப்பட வேண்டும். கொள்கை வழியில், இதனுடன் இணையக் கூடிய சகல தரப்புக்களும், தமிழ் மக்களின் கோரிக்கைகளை வென்றெடுக்கக் கூடியவாறு ஒன்றிணைய வேண்டும். மிக நீண்ட கலந்துரையாடல்களை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் பல தரப்புக்களும் நடத்தியிருக்கின்றன. எனினும், பேச்சுக்களின் மூலம் ஒத்துவராதவர்களை விடுத்து, ஏனைய அனைத்து தரப்பினரும் இணைந்து பலமான மாற்று அணியை உருவாக்க வேண்டும். இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஸ் பிரேமசந்திரன் தெரிவித்தார்.

அவரது இல்லத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார். வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழ் மக்கள் கூட்டணியை, கடந்த ஆண்டு உருவாக்கியிருந்தார். அவரது கூட்டணியுடன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை இணைப்பதற்கான பேச்சு முறிவடைந்திருந்தது. புதிய கூட்டணியில் ஈ.பி.ஆர்.எல்.எவ். இடம்பெறக் கூடாது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்திருந்த நிலையில், இந்தப் பேச்சு ஆரம்பிக்கப்படாமலே முறிவுக்கு வந்தது.

இது தொடர்பில் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஸ் பிரேமசந்திரன் தெரிவித்ததாவது:

இன்றிருக்க கூடிய ஒரே இளையவர்கள் என்று சொல்லக்கூடிய தமிழ் தேசிய மக்கள் முன்னணியை சேர்ந்தவர்கள் கடந்த கால தமிழர் அரசியல் பாடங்களை புரிந்து கொள்ள வேண்டும். கட்சி நலனை முன்னிறுத்தி பேசுவதோ அல்லது செயற்படுவதோ ஆரோக்கியமானதாக இருக்காது.

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான மாற்றுத் தலைமை தேவை என்பது தமிழ் மக்களால் உணரப்பட்டு வந்தது. கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஆணையை மீறி மக்களின் அடிப்படை விடயங்களை மறந்து செயற்பட்டு வருகின்றது. மாற்றுத் தலைமை தொடர்பான பல்வேறு பேச்சுக்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நடைபெற்று வருகின்றன. வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் ஒரு புதிய அணியை உருவாக்குவது என்பது தொடர்பில் கூட பல பேச்சுக்கள் நடந்துள்ளன.

தமிழ் மக்கள் பேரவையில் அங்கம் வகிக்கும் கட்சிகளையும், அமைப்புக்களையும் அடிப்படையாக கொண்டு பரந்துபட்ட கூட்டணி ஒன்று அமைய வேண்டும் என்றும், அவ்வாறான ஒரு கூட்டணி உருவானால் மட்டுமே உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கக் கூடியதாக இருக்கும் என்ற கருத்தும் இருந்து வருகின்றது. தமிழ் மக்கள் பேரவையில் அங்கம் வகிக்கும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈபிஆர்எல்எப்), தமிழ் தேசிய மக்கள் முன்னணி மற்றும் சிவில் அமைப்புக்களை உள்ளடக்கியதாக புதிய அணி உருவாக்கப்பட வேண்டும் என்ற கோணத்தில் பல சுற்றுப் பேச்சுக்களும் நடந்துள்ளன. இந்தப்புதியகூட்டணிக்கான ஆதரவை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தெரிவித்திருந்தது. ஆனால் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் இப்பேச்சுக்களில் நாட்டம் செலுத்தவில்லை.

தமிழ்தேசிய மக்கள் முன்னணியும், விக்னேஸ்வரனுடைய கட்சியுடன் இணைய முடியுமே தவிர வேறு யாரும் அதில் சேர்த்துக் கொள்ள முடியாது என்ற விடயத்தில் உறுதியான கருத்தை வெளிப்படுத்தி வருகின்றார்கள். இருப்பினும் விக்னேஸ்வரன் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரை புதிய பரந்த கூட்டில் இணைத்துக் கொள்வதற்கான பேச்சுக்களை நடத்திய போதும், முன்னணியினர் தமது நிலைப்பாட்டில் எந்த மாற்றத்தையும் அல்லது சமரசத்தையும் ஏற்படுத்திக் கொள்ளாமல் மாற்றுக் கூட்டணியில் இணைந்து கொள்ளப் போவதில்லை என்ற போக்கில் உள்ளார்கள் என்பது தற்போது வெளிப்படையாக தெரிகின்ற விடயமாக உள்ளது.

தமிழ் மக்களுக்குத் தேவையாக மாற்று தலைமை ஓரிரு கட்சியை உள்ளடக்கியதாக இல்லாமல், கொள்கையின் வழியில் நின்று தமிழ் மக்களுடைய நீண்ட கால கோரிக்கையை வெல்லும் பலமான அணியாக இருக்க வேண்டும் என்பதுவே எமது விருப்பம். கொள்கை வழியில் தமிழ் மக்களின் நலன்களின் அக்கறை கொண்டு இணைய கூடிய சகல தரப்புக்களையும் உள்ளடக்கிதாக இந்த மாற்றுத் தலைமை அல்லது மாற்று அணி இருக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் பல தரப்புக்கள் மிக நீண்ட பேச்சுக்களை நடத்தியுள்ளார்கள். இவ்வாறான பேச்சுக்களின் பின்னரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் இணங்கிவராத நிலையில், புதிய மாற்று அணியில் இணையக் கூடிய அனைவரும் இணைந்து பலமான ஒரு அணியை உருவாக்க வேண்டும். மக்கள் நலனை புறம் தள்ளி குறுகிய கட்சி நலன்களை முதன்மைப்படுத்து வது இந்த கால கட்டத்துக்குப் பொருத்தமானதாக இருக்காது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனித்து நின்று அரசியல் செய்வதற்கு எந்த காலத்திலும் விரும்பியது கிடையாது. தமிழீழ விடுதலைப் புலிகள் முரண்பாடுகளைக் கருத்தில் கொள்ளாது ஒரு கூட்டு அணியின் தேவையை புரிந்து கொண்டு அனைத்து கட்சிகளையும் அழைத்துப்பேசி தமிழ்தேசியக்கூட்டமைப்பினை உருவாக்கினார்கள். இதே போன்றுதான் தந்தை செல்வா மற்றும் ஜீ.ஜீ.பொன்னம்பலம் போன்றவர்களும் முரண்பாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு கூட்டமைப்பை உருவாக்குவதில் முன்னின்று செயற்பட்டார்கள். ஆனால் இன்றிருக்க கூடிய இளையவர்கள் என்று செல்லக்கூடிய தமிழ் தேசிய மக்கள் முன்னணியை சேர்ந்தவர்கள் இந்த பாடங்களை புரிந்து கொள்ள வேண்டும். கட்சி நலனை முன்னிறுத்தி பேசுவதோ அல்லது செயற்படுவதோ ஆரோக்கியமானதாக இருக்காது - என்றார். (ஒ.5)

## குண்டுதாரியின் வங்கி விவரங்களை வழங்க உத்தரவு!

கொழும்பு, ஜூலை 12

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று சினமன் கிரேண்ட் ஹோட்டலில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்திய மொஹம்மட் இப்ராஹிம் இன்சாப் அஹமட் மற்றும் அவரது மனைவி உள்ளிட்டோரின் வங்கிக் கணக்கு விவரங்களைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு வழங்க அரச மற்றும் தனியார் வங்கிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கோட்டை நீதிவான் ரங்க திசாநாயக்க குற்றப் புலனாய்வுப் பிரிவு முன்வைத்த கோரிக்கைக்கு அமைய இதற்கான உத்தரவுகளைப் பிறப்பித்தார். (ஒ.5)

## இனிப்புக்கள் விற்பனை; வர்த்தக்ருக்குத் தண்டம்

வலி.தென்மேற்கு,ஜூலை 12

அனுமதியின்றி சீனாவில் தயாரிக்கப்பட்ட இனிப்புப் பொருள்களைவிற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்த நீதிவான், கைப்பற்றப்பட்ட பொருள்களை அழிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

காரைநகர் பொது சுகாதாரப் பரிசோதகர் எஸ்.ஜெயபிரதீப் அப்பகுதியிலுள்ள வர்த்தக நிலையமொன்றைச் சோதனைக்கு உட்படுத்தியபோது அங்கு சீன நாட்டில் தயாரிக்கப்பட்ட இனிப்பு வகைகளை அனுமதியின்றி விற்பனைக்கு வைத்திருந்தமையை அவதானித்துள்ளார்.

இதையடுத்து இவற்றைக் கைப்பற்றி ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஒப்படைத்த சுகாதாரப் பரிசோதகர், வர்த்தகருக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இவ் வழக்கு கடந்த 5 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது உரிமையாளர் குற்றத்தை ஏற்றுக் கொண்டதையடுத்து நீதிவான் இவருக்கு ரூபா 5 ஆயிரம் தண்டம் விதித்ததுடன் கைப்பற்றப்பட்ட இனிப்பு வகைகளையும் அழிக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (ஜ-115)

### ரணிலைச் சந்தித்து

# 9/11 அனுபவங்களை பகிர்ந்தது அமெரிக்கா

கொழும்பு, ஜூலை 12

21/4 தாக்குதலுக்குப் பின்னர் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில், 9/11 தாக்குதல் அனுபவங்களை தலைமைஅமைச்சர்ரணில் விக்கிரமசிங்கவுடன்பகிர்ந்து கொண்டனர் அமெரிக்காவின் பயங்கரவாத எதிர்ப்பு நிபுணர்கள்.

அமெரிக்க பயங்கரவாத எதிர்ப்பு நிபுணர்கள் குழு செவ்வாய்க்கிழமை மாலை அமெரிக்கத் தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸ் தலைமையில், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தது.

21/4 தாக்குதலுக்குப் பின்னர் பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து, இதன்போது, அவர்கள் தலைமை அமைச்சருக்கு விளக்கியுள்ளனர்.

கடுமையான எல்லைக் கட்டுப்பாடு மற்றும் கடலோர பொலிஸ்படை இருக்கும், ஒரு நாட்டுக்குள் ஊடுருவ முயற்சிக்கும் போது, எந்தவொரு பயங்கரவாதியும் அஞ்சுவர் என்றும் அவர்கள் கூறினர்.

புலனாய்வு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து, பயங்கரவாத எதிர்ப்பு மையத்தை நிறுவி, நடவடிக்கை எடுப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளதாக, இந்தச் சந்திப்பின் போது, தலைமை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

9/11 தாக்குதலுக்குப் பின்னர் கைது செய்யப்பட்ட பயங்கரவாத சந்தேக நபர்களை, குடியியல் நீதிமன்றங்களில் விசாரிப்பதில் தாங்கள் நடைமுறை சிக்கல்களை எதிர்கொண்டதாக, அமெரிக்க நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

பயங்கரவாதம் என்பது, சாதாரண குடியியல் நீதிமன்ற முறை மூலம் விசாரிக்கப்படவேண்டியசாதாரண குற்றம் அல்ல என்றும், அத்தகைய சந்தேக நபர்களைத் தண்டிக்க அவர்களுக்குச் சிறப்பு ஏற்பாடுகள் தேவைப்பட்டதாகவும், அவர்கள் கூறினர்.

அடையாளம் காணப்பட்ட பயங்கரவாத சந்தேக நபர்கள் தொடர்பாக எல்லை கட்டுப்பாட்டு தரவு அமைப்புகளை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்களையும் அமெரிக்க நிபுணர்கள் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

தேசிய தௌஹீத் ஜமாத் தலைவர் மொஹமட் ஸஹ்ரான் இஸ்லாமிய அரசின் (ஐஎஸ்) இலங்கைக்கான முகவராக தன்னை ஏற்றுக் கொள்ளுமாறு கோரியிருந்தார் என்பதை, அமெரிக்க குழு கண்டுபிடித்திருப்பதாகவும் இதன்போது தெரிவித்துள்ளது. (ஒ.5)

# இலங்கையுடன் அமெரிக்கா இணைந்து நிற்கும்

### ட்ரம்ப் உறுதி

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல்களுக்கு பின்னர் இலங்கையுடன் அமெரிக்கா இணைந்து நிற்கும் என்றும், பயங்கரவாத எதிர்ப்பு, கடல் மற்றும் எல்லை பாதுகாப்பு ஒத்துழைப்பை விரிவுபடுத்தும் என்றும் அமெரிக்க அரச தலைவர் டொனால்ட் டிரம்ப் உறுதியளித்துள்ளார்.

அமெரிக்காவுக்கான இலங்கையின் புதிய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள றொட்னி பெரேரா கடந்த திங்கட்கிழமை அமெரிக்க அரச தலைவரைச் சந்தித்து நியமன ஆவணங்களை கையளித்த போதே, இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்தி, ஒன்றிணைந்து செயற்படுவதன் முக்கியத்துவத்தையும் டிரம்ப் வலியுறுத்தினார். உள்நாட்டுப் போரைத் தொடர்ந்து, நிலையான அமைதியை அடைவதற்கான நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை உறுதி செய்வதில் இலங்கையின் உறுதிப்பாட்டை அவர் வரவேற்றார் எனவும் அயலுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (ஒ.5)

# தாஜ் சமுத்ராவில் தங்கியிருந்தோர் பட்டியலைக் கோரும் தெரிவுக்குழு

இலங்கையில் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்ற ஏப்ரல் 21ஆம் திகதி, தாஜ் சமுத்ரா விடுதியில் தங்கியிருந்தவர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியலையும், அங்கு காலையுணவு சாப்பிட்டவர்களின் பட்டியலையும் சமர்ப்பிக்குமாறு, நாடாளுமன்றத் தெரிவுக்குழு கோரியுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து விசாரிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் நேற்றுமுன்தின அமர்வின் போது, தெரிவுக்குழுவின் தலைவர் ஆனந்தா குமாரசிறி இதனை தெரிவித்தார்.

ஏப்ரல் 21ஆம் திகதி தாக்குதலை நடத்திய தீவிரவாதிகள், தாஜ் சமுத்ரா விடுதியில் குண்டை வெடிக்க வைக்கும் திட்டத்தை ஏன் கைவிட்டனர் என்ற கேள்விக்கான விசாரணைகளை முன்னெடுக்க இந்தப் பட்டியல் உதவும் என்றும் அவர் கூறினார். (ஒ.5)

## மனோவின் காரியாலயம் வவுனியாவில் விரைவில்

வவுனியா, ஜூலை 12
மனோகணேசனின் இணைப்புக் காரியாலயம் வவுனியாவில் மிக விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது என்று அமைச்சர் மனேகணேசனின் வடமாகாண இணைப்பாளர் ச. விமலேந்திரன் தெரிவித்தார்.
வவுனியாவில் அமைச்சர் மனோகணேசனின் இணைப்புக்காரியாலயம் ஒன்று மிக விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது. அதனூடாக மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது - என்று இணைப்பாளர் மேலும் தெரிவித்தார். (ம)

# பாதுகாப்புக் காரணமாகப் பரீட்சைக்கு ஒரு மணி நேரத்துக்கு முன்னர் வருக

### பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 12
பாதுகாப்புக் காரணங்களைக் கருத்தில் கொண்டு பரீட்சை மண்டபங்களுக்கு பரீட்சார்த்திகள் பரீட்சை ஆரம்பிக்கும் நேரத்தில் இருந்து ஒரு மணித்தியாலத்துக்கு முன்னர் வருகை தரவேண்டும் என்று சிறப்பு அறிவித்தல் ஒன்றை பரீட்சை ஆணையாளர் நாயகம் விடுத்துள்ளார்.

அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
நாட்டின் பாதுகாப்பு நிலமையை கருத்தில் கொண்டு பாடசாலைகளுக்கு பல்வேறு பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.
அதேபோன்று தற்போது பரீட்சைக் காலம் ஆரம்பிக்கவுள்ளது.
பாடசாலை மட்டத்தில் இரண்டாம் தவணை பரீட்சை, க.பொ.த உயர் தரப் பரீட்சை மற்றும் ஏனைய பரீட்சைகள் நடைபெறவுள்ளன. அதே போன்று பதவிஉயர்வு, வேலைக்கு ஆள் சேர்ப்பிக்கான திறந்த போட்டி பரீட்சை போன்ற பல்வேறு பரீட்சைகள் நடைபெறவுள்ளன.
ஆகவே சகல பரீட்சைகளின் போதும் பரீட்சார்த்திகள் பரீட்சை நிலையங்களுக்கு பொதிகளை எடுத்து செல்லுதலைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். முகத்தினை மறைக்க கூடிய வகையில் ஆடை அணிவதை தவிர்த்தல் வேண்டும்.
அதேபோன்று பரீட்சை நடைபெறும் நிலையங்களுக்கு பரீட்சை ஆரம்பிக்கும் நேரத்தில் இருந்து ஒரு மணித்தியாலத்துக்கு முன்பாக வர வேண்டும். அப்போதுதான் பாதுகாப்புப் பரிசோதனை வேலைகள் நடைபெற்று குறித்த நேரத்தில் பரீட்சை எழுதமுடியும். இந்த விடயங்களை மீறும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை சட்ட மூலத்தின் ஒழுங்கு விதிகளின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றுள்ளது. (ம-7)

# அமெரிக்காவுடனான உடன்பாடு பின்வாங்குகின்றது இலங்கை

கொழும்பு, ஜூலை 12
இலங்கையின் கருத்துக்களுக்கு அமெரிக்கா ஒப்புக் கொண்டால் மட்டுமே, 'சோபா' மற்றும் கையகப்படுத்தல் மற்றும் குறுக்கு சேவைகள் (அக்சா) உடன்பாடுகளில் கையெழுத்திடப்படும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் அநுர குமார திசநாயக்க, பந்துல குணவர்த்தன ஆகியோர் நேற்றுமுன்தினம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கையின் இறைமையையும் பிராந்திய ஒருமைப்பாட்டையும் மீறுகின்ற எதையும் அரசு ஏற்றுக்கொள்ளாது. ஊடகங்களில் கூறப்படுவதைப் போன்று தற்போது சோபா உடன்பாடு எதுவும் செய்து கொள்ளப்படவில்லை.
1995 ஆம் ஆண்டு அயலுறவுத்துறை அமைச்சுக்கும், இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகத்துக்கும் இடையில் பரிமாறிக் கொள்ளப்பட்ட கடிதங்களைத் தவிர, அமெரிக்காவுடன் எந்தவொரு சோபா உடன்பாட்டிலும் அரசு கையெழுத்திடவில்லை.
சில ஊடகங்கள் 2017இல் 'சோபா' உடன்பாடு கையெழுத்திடப்பட்டதாக தவறாக வழிநடத்துகின்றன. அவ்வாறு 2017இல் 'சோபா' உடன்பாடு கையெழுத்திடப்பட்டிருந்தால் அது சட்டவிரோதமான போலியானதாகும். அத்தகைய ஆவணம் இருந்தால், அதன் பிரதியை என்னிடம் ஒப்படைக்குமாறு ஊடகங்களை நான் கேட்டுக்கொள்கிறேன். இது குறித்து பொலிஸாரை விசாரிக்க நான் கோருவேன்.
அமெரிக்க அரசு பல முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளது. ஆனால் அவற்றை அரசு இன்னும் ஒப்புக் கொள்ளவில்லை, அந்த முன்மொழிவுகள் பரிசீலிக்கப்பட உள்ளன.
இலங்கையில் அமெரிக்கா இராணுவ முகாம்களை அமைப்பது குறித்து எந்த கேள்விக்கும் இடமில்லை.
அமெரிக்காவிடம் உள்ள இராணுவத் தளபாடங்களை கருத்தில் கொள்ளும் போது, இங்கு தளம் அமைப்பது சாத்தியமில்லை.
வானூர்தி தாங்கி கப்பலான 'றொனால்ட் றீகன்' 90 வானூர்திகளை ஏற்றிச் செல்லக் கூடியது. அவ்வாறு 90 வானூர்திகளைக் கையாளக் கூடிய இடம் இலங்கையில் இல்லை. தவிர படைகள் நவீன உலங்குவானூர்திகள் மூலமே கொண்டு செல்லப்படுகின்றனர்.
கடந்த காலங்களில் போர்த்துகேயர்கள் குழுக்களை இலங்கைக்கு கொண்டு வந்ததைப் போல அவர்கள் துருப்புக்களைக் கொண்டு வரவில்லை.
ஜப்பான், தென்கொரியா மற்றும் டியேகோ கார்சியா ஆகிய இடங்களில் ஏற்கனவே தளங்களைக் கொண்டிருப்பதால், இலங்கையில் தளம் அமைக்க வேண்டிய தேவை அமெரிக்காவுக்கு இல்லை.
புதிதாக முன்மொழியப்பட்ட 'அக்சா' உடன்பாட்டு வரைவில், அமெரிக்கா தொடர்பு புள்ளிகளை அதிகரித்துள்ளது.
இராணுவம், கடற்படை மற்றும் வான்படைத் தலைமையகங்கள் இதில் உள்ளடங்கியுள்ளன. பாதுகாப்பு அமைச்சுடன் தான் அமெரிக்கா இதுபற்றி இணக்கம் காணவேண்டும்.
அமெரிக்கா பல்வேறு நாடுகளுடன் கையெழுத்திட்டுள்ள 'சோபா' உடன்பாடுகள் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை.
1995 இல் கையெழுத்திடப்பட்ட உடன்பாடு, பரஸ்பர பாதுகாப்பு உடன்பாடு அல்ல. ஆனால் அது, பொதுவாக அமெரிக்க இராணுவத்தினர், வெளிநாடு ஒன்றில் செயற்படும் கட்டமைப்பை நிறுவும் வகையிலானது.
அயலுறவுத்துறை அமைச்சர் அமெரிக்காவுக்குச் சென்றது அமெரிக்க அரசுடன் சோபா உடன்பாடு குறித்து பேசுவதற்காக அல்ல.
இரு நாடுகளுக்கும் இடையிலான அனைத்து உடன்பாடுகள் குறித்தும் விவாதிக்கவே அவர் அங்கு சென்றிருந்தார். இது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழும், வழக்கமான செயல்முறையாகும்.
மகிந்த ராஜபக்ச ஆட்சியின் போது, கையகப்படுத்தல் மற்றும் குறுக்கு சேவை உடன்பாடு அமெரிக்காவுடன் கையெழுத்திடப்பட்டது.
இந்த உடன்பாட்டின் கீழ், இலங்கையில் பணியாற்றும் அமெரிக்கப் படையினரும், அமெரிக்க பாதுகாப்பு அமைச்சின் சிவில் பணியாளர்களும் இராஜதந்திர சலுகைகளை அனுபவிக்கிறார்கள்.
திருகோணமலை துறைமுகத்தை அல்லது வேறெந்த துறைமுகத்தையும், இந்தியாவுக்கு பாதகமான வகையில், இராணுவ பயன்பாட்டுக்காக எந்தவொரு நாட்டு இராணுவத்துக்கும் வழங்குவதில்லை என்று, இந்தியாவின் முன்னாள் தலைமை அமைச்சர் ரஜீவுடன் செய்து கொண்ட உடன்பாட்டில் முன்னாள் அதிபர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன உறுதியளித்துள்ளார்.
அமெரிக்காவுக்கோ, சீனாவுக்கோ, பிரிட்டனுக்கோ அல்லது வேறெந்த நாட்டுக்கோ, துறைமுகங்கள் கிடையாது, ஆனால், அவர்கள் வந்துபோகலாம், என்றும் அவர் தெரிவித்தார். (ஒ.5)

*18 வயதுக்குட்பட்ட*

# போதைக்கு அடிமையானோரை பராமரிப்பதற்கு சிறப்புத்திட்டம்

### *அரசதலைவர் பணிப்புரை*

கொழும்பு, ஜூலை 12
நாடு முழுவதும் 18 வயதுக்குக் குறைந்த சுமார் ஒரு இலட்சத்து பதினைந்தாயிரம் சிறுவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையாகி உள்ளனர். அவர்களுக்கு மறுவாழ்வளிப்பதற்காக தேசிய அளவிலான வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்குமாறு அரசதலைவர் பணிப்புரை விடுத்துள்ளார்.



போதைப்பொருள் தொடர்பிலான அரசதலைவர் செயலணி, தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை மற்றும் பொலிசார் ஒன்றிணைந்து மேற்கொண்ட இந்த ஆராய்ச்சி அறிக்கை அண்மையில் அரச தலைவரிடம் கையளித்ததுடன், அவ்வறிக்கையில் 18 வயதிற்கு குறைந்த சுமார் 6 ஆயிரத்து 100 சிறுவர்கள் ஹெரோய்ன் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.
மேலும் நாளொன்றுக்கு சுமார் ஒரு இலட்சம் அளவிலானோர் ஹெரோய்ன் போதைப்பொருளை தேடி அலைவதாகவும் இந்த அறிக்கையில் கண்டறியப்பட்டுள்ளது. அதில் ஆயிரத்து 500 பெண்களும் 85 ஆயிரம் ஆண்களும் உள்ளடங்குவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மூன்று இலட்சம் வரையானோர் கஞ்சா பயன்படுத்துவது இந்த ஆராய்ச்சியின் மூலம் கண்டறியப்பட்டுள்ளதுடன், அதில் ஆயிரத்து 500 பேர் பெண்களாவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.
நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்படும் போதைப்பொருள் ஒழிப்பு தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட அதிரடி தேடல்களில் போதைப்பொருள் தொடர்பிலான சந்தேகத்தின்பேரில் 40 ஆயிரத்து 846 பேர் கடந்த ஆறு மாத காலத்திற்குள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் 3 ஆயிரத்து 500 கிலோகிராம் சட்டவிரோத போதைப்பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
இந்தக் கைது செய்யும் நடவடிக்கைகள் மேலும் விரிவுபடுத்தப்பட்டு நாளாந்த போதைப்பொருள் விநியோகத்தை தடை செய்து, போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு மறுவாழ்வளிப்பதற்கான சிறப்பு வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
அதிகளவில் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் மேல் மாகாணத்தில் உள்ளதை அவதானிக்க முடிந்ததுடன், தென் மாகாணம், வடமேல் மாகாணம், மத்திய மாகாணம் மற்றும் வட மாகாணத்திலும் அதிகளவில் போதைப்பொருள் பயன்படுத்தும் நபர்கள் உள்ளதும் தெரியவந்துள்ளது. அந்த மாகாணங்களில் மறுவாழ்வு வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கும் நாட்டின் அனைத்து பிரதேசங்களும் உள்ளடங்கும் வகையில் போதைப்பொருள் பாவனையின் தீங்குகளை தெளிவூட்டும் நிகழ்வுகளை பாடசாலைகள், அறநெறிப் பாடசாலைகள், தொழில்புரியும் இடங்கள், தன்னார்வு அமைப்புகளில் நடத்துவதற்கும் அரச தலைவரின் பணிப்புரைகளுக்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம)

## கல்வியற் கல்லூரி நேர்முகப் பரீட்சைகள் இறுதிக் கட்டத்தில்!

கொழும்பு, ஜூலை 12
தேசிய கல்வியற் கல்லூரிகளில் நடத்தப்படும் மூன்றாண்டுகாலப் போதனா கல்வி பாடநெறியை பயில்வதற்காக 2016 மற்றும் 2017ஆம் ஆண்டு உயர்தர பெறுபேறுகளின் பிரகாரம் மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை தற்போது இறுதி கட்டத்தில் உள்ளது.
இதன்பிரகாரம் நாடளாவியரீதியில் உள்ள 19 கல்வியற் கல்லூரிகளுக்கு 4ஆயிரம் மாணவர்கள் வீதம் இரு குழுக்கள் (8000 மாணவர்கள்) சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளின் ஊடாக நடத்தப்படும் பாடநெறிகளுக்காக செப்ரெம்பர் மாதம் முதல் வாரத்தில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.
இதன்படி 2019.01.25 இலக்கம் 2108 சுற்றுநிருபத்தின் பிரகாரம் கல்வியற் கல்லூரிபாடநெறிகளுக்காக 68 ஆயிரம் பேர் விண்ணப்பம் செய்துள்ளதுடன், அவர்களில் 28 ஆயிரம் பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.
அத்துடன் 19 கல்வியற் கல்லூரிகளில் பாடநெறிகளை நிறைவு செய்த 4 ஆயிரம் பேருக்கு ஒக்டோபர் மாதமளவில் ஆசிரிய நியமனம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் கல்வி அமைச்சரின் ஆலோசனையின் பேரில் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளுக்கு நான்கு ஆண்டுகளில் 20 ஆயிரத்து 64 பேர் ஆசிரிய சேவைக்கு இணைக்கப்பட்டுள்ளனர்.
இதன்படி 2015ஆம் ஆண்டு 866 பேரும், 2016ஆம் ஆண்டு 5 ஆயிரத்து 18 பேரும், 2017ஆம் ஆண்டு 5 ஆயிரத்து 162 பேரும், 2018ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 186 பேரும் 2019 ஆம் ஆண்டில் இதுவரை 715 பேரும் ஆசிரிய சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். (ம)

# பனம்பொருள் அபிவிருத்திக்கு 100மில்லியன் ரூபா வடக்குக்கு

## சிவஞானசோதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 12

பதநீர் அடிப்படையிலான தயாரிப்புக்களான பனை வெல்லம், பதநீர், கல்லாக்காரம் மற்றும் போத்தலில் அடைக்கப்பட்ட கள் போன்றவற்றை புதிய தொழில் நுட்பத்தின் மூலம் தயாரிப்பதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் 100 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரம், மீள்குடியேற்றம் மற்றும் மறுவாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் செயலர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடமாகாணத்தில் 11 மில்லியன் பனை மரங்கள் இருந்தபோதும் முழுப்பொருளாதார நன்மைகளையும் பனைசார் உற்பத்திப் பொருள்களிலிருந்து அடைய முடியாதிருப்பது துரதிஷ்டவசமாகும். பெப்ரவரி மாதம் முதல் ஆவணி வரையான பருவகாலப் பகுதியில் பதநீர் உற்பத்தி மிக அதிகளவாக காணப்படுகின்றது. பனைசார் உற்பத்திகளில் தங்கி வாழும் குடும்பங்கள் வறுமையின் தாக்கத்தினை அதிகமாகக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றன. பதநீரின் பருவகால தன்மை காரணமாகவும், அதனை பருவகாலம் தவிர்ந்த ஏனைய காலங்களில் பாதுகாக்கும் வசதியின்மை காரணமாகவும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி பொருள்களாக மாற்றுதல் தொடர்பான அவதானமின்மையும் பனைத் துறையில் வளங்களையும் பதநீரையும் உச்சமட்டத்தில் பயன் படுத்தாமைக்கு காரணமாகும். சீவல் தொழிலாளர்களுக்கு போதிய வருமானமின்மையும் பருவகாலத்தன்மை கொண்ட இவ்வுற்பத்தி பொருள்களிலிருந்து நிரந்தர வருமானத்தைத் பெற முடியாதிருப்பதும் சீவல் தொழில் தொடர்பாக சமூக அங்கீகாரமற்ற தன்மை காரணமாகவும் கடந்த காலங்களில் சீவல் தொழிலில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை ஒரு வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

அண்மையில் வடமாகாணத்துக்கு வந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் பனை மேம்பாட்டுச் சங்கங்களின் உறுப்பினர்கள் தங்களின் பொருளாதார மற்றும் வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளிக்க வேண்டிய அவசியத்தையும் தங்களது ஆதங்கங்களையும் வெளிப்படுத்தினர். இதுதொடர்பில் ரணில் விக்கிரமசிங்க பனையை அடிப்படையாகக் கொண்ட பனங்கட்டி, பனம் வெல்லம், பதநீரினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளை விருத்தி செய்யவும் அந்த உற்பத்தி பொருள்களுக்கு இலங்கை மற்றும் புலம்பெயர்ந்த மற்றும் உலகளாவிய சமூகத்தினரிடம் அதிக தேவை இருப்பதனால் அவற்றை விருத்தி செய்ய வேண்டுமெனவும் அமைச்சுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

பனை மேம்பாட்டு கூட்டுறவுச் சங்கங்களை அடையாளம் கண்டு அவற்றிற்கு பனங்கட்டி, பனம்வெல்லம், போத்தலில் அடைத்த பதநீர், போத்தலில் அடைத்த கள்ளு மற்றும் பனைசார் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி பொருள்களின் தரத்தினையும் உற்பத்தியினையும் மேம்படுத்துவதற்கு தேவையான தொழினுட்ப உபகரணங்களை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது. இதனால் மிகையான பதநீர் மற்றும் கள்ளினை பழுதடையாது பேணிப்பாது காத்து பருவமற்ற காலங்களில் சந்தைப்படுத்த முடியும்.

பதநீர் அடிப்படையிலான தயாரிப்புக்களான பனை வெல்லம், பதநீர், கல்லாக்காரம் மற்றும் போத்தலில் அடைக்கப்பட்ட கள் போன்றவற்றை புதிய தொழில் நுட்பத்தின் மூலம் தயாரிப்பதற்காக விசேடமாக ரூபா 100 மில்லியன் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எமது அமைச்சு மாவட்டமற்றும் பிரதேச நிர்வாகங்கள், பனைமேம்பாட்டு கூட்டுறவுச் சங்கங்கள், பனை அபிவிருத்தி சபை ஆகியவற்றுடன் இணைந்து வெல்லம், பதநீர், கல்லாக்காரம் மற்றும் போத்தல்களில் கள் அடைத்தல் போன்றவற்றிற்குத் தேவையான தொழில்நுட்ப வசதிகளை இவ்விசேட ஒதுக்கீட்டின் மூலம் வழங்கவுள்ளது. இது பனைசார் துறையில் அபிவிருத்திக்கு கணிசமான பங்களிப்பினை வழங்குவதுடன் பனையை வாழ்வாதாரமாகக் கொண்ட சமூகம், பனையை நம்பி வாழ்கின்ற குடும்பங்கள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு சந்தைகள் போன்றவற்றில் கணிசமான பங்களிப்பினை செய்யும். இத்திட்டத்தின் கீழ் நவீன பனை வெல்லம் உற்பத்திகள் மற்றும் பதநீர் போத்தலில் அடைத்தல், கல்லாக்காரம் உற்பத்தி செய்வதற்கான தொழினுட்ப வசதிகளை வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் ஏனைய மற்ற மாவட்டங்களிலும் நடைமுறைப் படுத்துவதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன - என்றுள்ளது.

(ம-21)

---

### பயங்கரவாதச் சட்டத்தின் கீழ்

# ஷாபியைத் தடுத்துவைக்கின்ற உத்தரவு திரும்பப்பெறப்பட்டது

கொழும்பு, ஜூலை 12

மருத்துவர் ஷாபியை பயங்கரவாத தடுப்புச்சட்டத்தில் தடுத்து வைக்கும் உத்தரவு திரும்பப் பெறப்பட்டுள்ளது.

குருநாகல் போதனா மருத்துவமனையில் மருத்துவர் ஷாபி குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் நேற்றுக் காலை 10.30 மணியளவில் குருநாகல் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் பட்டார். பயங்கரவாத அமைப்புக்களின் முன்னேற்றத்துக்கு நிதி உதவி செய்துள்ளார் என்று மருத்துவர் ஷாபி மீதான குற்றச்சாட்டை உறுதிப்படுத்துவதற்கு போதுமான சாட்சிகள் இல்லை என்று பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல் தெரிவித்தார்.

வைத்தியர் ஷாபிக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்துவதற்கு போதுமான சாட்சிகள் இல்லை என்று தெரிவித்து பாதுகாப்பு அமைச்சுக்கு நேற்று அறிக்கை சமர்பிக்கப்பட்டதையடுத்து அவரை தடுத்து வைப்பதற்கான அனுமதி கைவிடப்பட்டது என்று பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல் துசித் முதலிகே நீதிமன்றில் தெரிவித்தார். அதேநேரம் அவருக்கு எதிரான நிதி மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் அசாதாரண நிதி உழைப்பு சம்பந்தமான குற்றச்சாட்டை நியாயப்படுத்துவதற்கு போதுமான ஆதாரங்கள் இதுவரை கிடைக்கவில்லை என்றும், எனினும் அது தொடர்பில் தொடர்ந்து விசாரிக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ம)

---

# வவு. பெண்பிள்ளைகளின் முழு விபரமும் வீதியில்!!

## பதற்றத்தில் பெற்றோர்கள்



வவுனியா, ஜூலை 12

வவுனியாவில் தனியார் கல்வி நிலையமொன்றில் கற்கும் மாணவிகளின் புகைப்படங்கள் தாங்கிய விண்ணப்பப் படிவங்களை வீதியில் எறியப்பட்டுள்ளமை தொடர்பாக பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் உள்ள தனியார் கல்வி நிலையமொன்றுதமதுநிலையத்தில் கற்கும் மாணவர்களின் விபரங்களைச்சேகரிப்பதற்காக விண்ணப்பபடிவங்களை பயன்படுத்தியுள்ளது. இதில் மாணவிகள் மற்றும் மாணவர்களது புகைப்படங்களும் அவர்கள் தொடர்பான விபரங்கள் மற்றும் பெற்றோரது அலைபேசி இலக்கங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலையில் குறித்த விபரங்கள் அடங்கிய விண்ணப்படிவங்கள் நெளுக்குளம் கனரா ஒழுங்கையின் குளப்பகுதியில் வீசப்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பாக குறித்த தனியார் கல்வி நிலையத்தின் உரிமையாளரிடம் தொடர்புகொண்டு கேட்டபோது, தமது கல்வி நிலையம் இடம் மாற்றப்பட்டபோது பழைய விண்ணப்பப்படிவங்களை அழிப்பதற்காக வைத்திருந்தபோது அவை களவாடப்பட்டு வீதியோரங்களில் வீசப்பட்டுள்ளன - என்று தெரிவிக்கப்பட்டது.

(ம)

---

# விபத்தில் முதியவர் காயம்

சாவகச்சேரி, ஜூலை 12

எழுதுமட்டுவாழ் ஏ9 முதன்மைச் சாலையில் சென்ற ஈருருளியை பட்டா ரக வாகனம் மோதியதில் ஈருருளியில் பயணித்த 71 வயதுடைய முதியவர் காயமடைந்தார்.

சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட முதியவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது.

எழுதுமட்டுவாழ் கரம்பகத்தைச் சேர்ந்த வினாசித்தம்பி மகாலிங்கம் (வயது - 71) என்பவரே காயமடைந்தவராவார்.

(ம-9)

---

# வீட்டுத்திட்ட வீடுகளில் எவருமில்லா நிலை இதனால் சமூகச் சீர்கேடு அதிகரிக்கின்றது

## புதுக்குடியிருப்புப் பிரதேசசபை உறுப்பினர் முகுந்தகஜன் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 12

முல்லைத்தீவு மாங்குளம், பனிக்கன் குளம் பகுதியில் கடந்த 2012ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட, அரச அலுவலர்களுக்கான வீட்டுத்திட்ட வீடுகளில் யாரும் இல்லாத நிலை காணப்படுகின்றது. இதனால் குறித்த வீட்டுத்திட்டப் பகுதிகளினுள் சமூக சீர்கேட்டுச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன என்று புதுக்குடியிருப்புப் பிரதேசசபை உறுப்பினர் மு.முகுந்தகஜன் கருத்துத் தெரிவித்தார்.

சபை அமர்வு நேற்று இடம்பெற்றது. பொதுச் சுகாதாரத்துக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் அமைந்துள்ள வீடுகளை அகற்ற வேண்டும் என்பது தொடர்பான பிரேரணை ஒன்றினை தவிசாளர் முன்மொழிந்திருந்தார். இதற்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஏ9 வீதியில் வீட்டுத் திட்டம் ஒன்றினை பெற்றுவிடவேண்டும் என்ற ஆசையாலேயே, அரச அலுவலர்கள் வீட்டுத்திட்டங்களைப் பெற்றனர். அங்கு வீட்டுத்திட்டம் பெற்றவர்கள் பெரும்பாலும் வேறு இடப் பதிவுகளுடனும், வீட்டு வசதிகளுடனும் வாழ்கின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-246)

---

# புலிகளின் புதையலைத் தேடிய பொலிஸாருக்கு ஏமாற்றம்

புதுக்குடியிருப்பு, ஜூலை12

புதுக்குடியிருப்பு சிவநகர் பகுதியில் விடுதலைப்புலிகளின் தங்கப் புதையலைத் தேடிய பொலிஸாருக்கு நேற்று ஏமாற்றமே கிட்டியது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு சிவநகர் பகுதியில் விடுதலைப்புலிகளால் புதைக்கப்பட்டதாக நம்பப்படும் தனியார் வீடு ஒன்றில் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அகழ்வு நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பகுதியில் கடந்த 27ஆம் திகதிமுதல் பொலிசாரின் பாதுகாப்பு போடப்பட்டு வந்த நிலையில் இந்த அகழ்வு நடவடிக்கை நேற்று இடம் பெற்றது.

எனினும் எந்தப் பொருளும் கிடைக்காமல் அகழ்வு கைவிடப்பட்டது.

(மரி3)



## இந்த...

நாடாளுமன்றத்தில் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
'இந்த அரசு கடந்த அரசைவிடக் கொஞ்சம் பரவாயில்லை. கடந்த ஆட்சியின்போது இருந்ததைவிட இந்த அரசு மனித உரிமைகள் விடயத்தில் பரவாயில்லை. இந்த அரசைக் கவிழ்த்துவிட்டு நாம் என்ன என்ன செய்யப்போகிறோம். எனவே, நாங்கள் கவனமாகச் செயற்பட வேண்டும்.
அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு கோரி இன்று திருகோணமலையில் என் வீட்டுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடந்தது. எமது மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பில்லை. இந்த அரசுக்கு நாங்கள் ஆதரவளிப்பதை எமது மக்கள் விரும்பவில்லை. அரசு இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.
பொது எதிரணியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி வடக்கு மக்கள் பிரச்சினைக்குத் தீர்வு என்ன என்பதை முதலில் முன்வைக்க வேண்டும்.
அரசுக்கு எதிரான இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து நாங்கள் சரியான தீர்மானம் எடுப்போம்' என்றார்.
(ம-22)

## தப்பியது...

உயிர்த்த ஞாயிறு தினமன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களுக்குப் பொறுப்பேற்று தலைமை அமைச்சர் மற்றும் அமைச்சரவை உள்ளிட்ட ஒட்டுமொத்த அரசும் பதவி விலக வேண்டும் எனக் கோரி மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது நேற்றுமுன்தினமும் நேற்றும் விவாதங்கள் நடைபெற்றன. விவாதங்களையடுத்து நேற்று மாலை 6.30 மணியளவில் பிரேரணை மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதன்போது ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் அதன் பங்காளிக் கட்சிகள் ஆகியவற்றின் உறுப்பினர்கள் பிரேரணையை எதிர்த்து வாக்களித்தனர்.
மகிந்த ராஜபக்ச தலைமையிலான பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர். வாக்களிக்கும்போது 13 உறுப்பினர்கள் சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை. அத்துடன், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் பலரும் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர். ஆனால், துமிந்த திஸாநாயக்க உள்ளிட்ட சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் வாக்களிப்பின்போது சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை.
அதேவேளை, எதிர்க்கட்சி வரிசையிலுள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் பொதுச்செயலர் சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும் வாக்களிப்பின்போது சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை.
ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து எதிரணிப்பக்கம் தாவிய விஜயதாச ராஜபக்ச உள்ளிட்ட நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் வாக்களிப்பின்போது சபையில் பிரசன்னமாயி ருக்கவில்லை.
ஐக்கிய தேசியக் கட்சியின் பங்காளிக் கட்சியான தமிழ் முற்போக்குக் கூட்டணியைச் சேர்ந்த அமைச்சர் வே.இராதாகிருஷ்ணனும் வாக்களிப்பின்போது சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை.
ஆனால், எதிர்க்கட்சி வரிசையிலுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசை எதிர்த்து பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.
கடந்த வருடம் ஒக்டோபர் 26 அரசியல் சதிப் புரட்சியின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து மைத்திரி - மகிந்த அணிப் பக்கம் தாவிய மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரனும் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தார்.
இந்தநிலையில், பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டிராத அரசு கவிழுமா அல்லது காப்பாற்றப்படுமா என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கைகளிலே இருந்தது.
நேற்றுக் காலையும் மாலையும் இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் மற்றும் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் ஆகியவற்றில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் கூட்டமைப்பின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசு மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்த்து வாக்களித்தனர்.
குறித்த பிரேரணைக்கு எதிராக அதிக வாக்குகள் அளிக்கப்பட்ட நிலையில் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரரணை தோல்வியடைந்துள்ளது எனச் சபாநாயகர் கருஜயசூரிய சபையில் அறிவித்தார். இதையடுத்து இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிவரை நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது. (ம-22)

## தொடருந்து...

மோதுண்டார். புதூர் ஆலயப்பகுதியிலிருந்து முதன்மை வீதியைக் கடக்க முறபட்டபோது அவர் இந்த விபத்தில் சிக்கினார் என்று தெரிவிக்கப்பட்டது.
வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இந்த நிலையில் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்தார். பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவையே விபத்துக்குக் காரணம் என்று அந்தப் பகுதி மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர். (ம)

## கன்னியாவில்...

தெரிவித்ததாவது:
திருகோணமலை கன்னியா வென்னீரூற்றுப் பகுதியில் மீண்டும் புத்தவிகாரை அமைக்கும் பணியில் தொல்பொருள் திணைக்களம் ஈடுபட்டுள்ளது. கடந்த திங்கள்கிழமை முதல் கன்னியா பிள்ளையார் ஆலயம் அமைந்திருந்த பிரதேசத்தில் அதனை அகற்றி அங்கு புத்த விகாரை அமைக்கும் பணி முன்னெடுக்கப்படுகிறது. இவ்வாறு ஏன் செய்கின்றீர்கள் என்று கேட்டால், திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையிலேயேவிகாரைஅமைக்கும்பணியைமுன்னெடுக்கின்றோம் என்று தெரிவிக்கின்றனர். ஆனால் அவ்வாறு விகாரை அமைப்பதற்கு எவராலும் எந்த அனுமதியும் வழங்கப்படவில்லை. இதனால் அவர்களின் இந்த அத்துமீறலைத் தடுக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றார். (ம160)

## கூட்டமைப்புக்கு..

தோல்வியடைந்தது' இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க நேற்றிரவு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
'எம்முடன் எதிரணி வரிசையில் அமர்ந்திருக்கும் மகிந்த ராஜபக்சவும், இரா.சம்பந்தனும் முறையாகச் செயற்பட்டிருந்தால் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றி பெற்றிருக்கும். ஆனால், இறுதிநேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அரசால் இலஞ்சம் வழங்கப்பட்டது. கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரத்துக்குத் தீர்வு வழங்கப்படும் என தலைமை அமைச்சர் ரணில் எழுத்துமூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உறுதியளித்தார். இதையடுத்து பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க இருந்த கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இறுதியில் பிரேரணையை எதிர்த்து அரசுக்கு ஆதரவாக வாக்களித்தனர்' என்றார். (ம22)

## சம்பந்தனின்...

உறுப்பினர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளனர்.
நாடாளுமன்றத்தில் அரசுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் ஆதரவு வழங்குமாறு வலியுறுத்தி ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளனர்.
சுமார் 2 மணித்தியாலங்கள் வரை ஆர்ப்பாட்டம் நீடித்துள்ளது.
ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனின் வீட்டுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (ஒ.5)

## தொண்டமான்...

தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் புதிய தேசிய கூட்டணி அமைப்பதற்கான ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.
இதில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலர் அனுஷா சிவாராஜ், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் பொதுச்செயலாளர் இ.கதிர் மற்றும் ஜனநாயக மக்கள் காங்கிரஸின் பொதுச்செயலர் நடேசன் நித்தியானந்தா ஆகியோர் கையொப்பமிட்டனர்.
பின்னர் இந்த ஒப்பந்தம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமானுக்கும், ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தலைவர் பிரபா கணேசனுக்கும் இடையில் பரிமாற்றிக் கொள்ளப்பட்டது.
கொட்டகலை தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் முத்துசிவலிங்கம், ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராஜதுரை, மத்தி மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான கணபதி கனகராஜ், சக்திவேல், எஸ்.பிலிப், மத்திய மாகாண முன்னாள் அமைச்சர் மருதபாண்டி இராமேஸ்வரன் ஆகியோருடன், உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் கூட்டணிக் கட்சிகளின் ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

**ஆறுமுகன் தொண்டமான்**

இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான்,
'எம்மால் உருவாக்கப்பட்டுள்ள இந்தக் கூட்டணியானது ஏனைய கூட்டணிகளை விட முற்றிலும் மாறுபட்ட அமைப்பாகும். தமிழ் மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுவது தான் இதன் முதன்மை நோக்கமாகும். எடுத்த எடுப்பிலேயே தலைவர்யார், பொதுச்செயலர் யார் எனப் பதவி நிலையை முன்னிலைப்படுத்தி செயற்பட நாம் விரும்பவில்லை. உரிய நேரத்தில் உரிய வகையில் அது தொடர்பான அறிவிப்பு வெளியிடப்படும். ஏன் தற்போது கூட்டணி உருவாக்கப்பட்டது எனச் சிலர் கேள்வி எழுப்பலாம். இவ்வளவு காலமும் கூட்டணி உருவாக்கினார்கள். நடந்தது என்ன? மக்களின் தேவைகள் நிறைவேற்றப்பட்டனவா? எனவேதான், மக்களின் நலன்கருதி அவர்களுக்கான கூட்டணியை அமைத்துள்ளோம்.
தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு நடத்தப்படும். எம்முடன் இணைந்து செயற்பட முன்வருபவர்கள் இருப்பின் அவர்களையும் சேர்த்துக்கொள்வோம். விரும்பினால் தமிழ் முற்போக்குக் கூட்டணிகூட இணையலாம். தமிழ் மக்களின் நலனைக் கருதிச் செயற்படும் கட்சிகளுடன் இணைந்து செயற்படுவதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம்' என்றார்.

**பிரபா கணேசன்**

ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் கருத்துத் தெரிவிக்கையில்,
'தமிழ் முற்போக்குக் கூட்டணிபோல் விளம்பர அரசியல் நடத்தமாட்டோம். மக்கள் நலன்களை முன்னிலைப்படுத்தியே செயற்படுவோம். தேர்தலை இலக்காகக் கொண்டு இந்தக் கூட்டணி அமைக்கவில்லை. தமிழ் முற்போக்குக் கூட்டணிக்குள் இன்று மோதல் ஏற்பட்டுள்ளது. அமைச்சர் திகாம்பரமும், கண்டி மாவட்ட எம்.பியொருவரும் வெளிப்படையாகவே மோதிக்கொள்கின்றனர்.
50 ரூபாவைக்கூட பெற்றுக்கொடுக்க முடியாத நிலையிலேயே அவர்கள் இருக்கின்றனர். தோட்டத் தொழிலாளர்களுக்கு நிலுவைத் தொகையுடன் 50 ரூபா கொடுப்பனவு வழங்கப்படவேண்டும். வடக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் இந்தக் கூட்டணியில் இணையவுள்ளார்' என்றார்.

**கதிர்**

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் பொதுச் செயலாளர் இ.கதிர் கருத்துத் தெரிவிக்கும்போது,'நாடு பூராவும் உள்ள தமிழர்களின் வேணவாக்களை நிவர்த்திக்கவே 'இந்தப் புதிய கூட்டணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு மலையகம் என்ற வேறுபாடு இருக்கக் கூடாது. அதை நாம் விரும்பவில்லை. மலையகத்தில் உள்ளவர்களும் எமது தாய், தந்தையர்கள்தான். வடக்கு, கிழக்கு மலையக உறவுகளைப் பிரித்து வேறுபாடாகப் பார்ப்பது முற்றிலும் தவறு' என்பதை நாம் சுட்டிக்காட்டுகின்றோம். இந்தப் புதிய கூட்டணியானது திடீரென ஆரம்பிக்கப்பட்ட ஒன்றல்ல. நீண்ட காலமாக கலந்தாலோசித்து திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ஒன்றாகும். தற்போது மூன்று கட்சிகள் இக்கூட்டணியில் இணைந்துள்ளன. எதிர்வரும் காலத்தில் இக்கூட்டணியோடு இணைவதற்காகக் கட்சிகள் பலவும் வருவார்கள் என்பது நம்பிக்கையைத் தருகின்றது.
தமிழ் மக்களுக்கு இந்தக் கூட்டணி ஊடாக நல்லதொரு செய்தியை வெளிப்படுத்துவோம். நமது சமூகத்துக்கு வித்தியாசமான கூட்டணியாக இந்தப் புதிய கூட்டணி அமையும் என்பதைத் தெளிவுடன் தெரிவிக்கின்றோம்.
அதேவேளையில், வடக்கு, கிழக்கில் இருக்கும் பல கட்சிகள் இந்தக் கூட்டணியில் இணைவதற்கு உத்தியோகபூர்வமான அறிவிப்புகளை இதுவரை விடுக்கவில்லை. இருப்பினும் விரைவில் அவர்களும் எமது கூட்டணியோடு இணைவார்கள் என்ற உறுதியும் உள்ளது' என்றார்.

**விக்கியின் நிலைப்பாடு**

இது தொடர்பில் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனை கொழும்பு ஊடகம் ஒன்று தொடர்பு கொண்டு கேட்டபோது, 'இந்தப் புதிய கூட்டணியில் நான் பங்கேற்கவில்லை. இதில் அமைச்சர் மனோ கணேசனும் இருந்திருந்தால் நானும் இணைந்திருப்பேன். எனினும், மஹிந்த ராஜபக்சவுக்கு ஆதரவான இந்தக் கூட்டணியில் இணையமாட்டேன். ஆறுமுகன் தொண்டமான என்னை யாழ்ப்பாணத்தில் வைத்து சந்தித்தது நட்பு ரீதியானது. அதன்போது அரசியல் விடயங்கள் எதுவும் கலந்துரையாடப் படவில்லை' என்றார். (ம-22)

## அரச...

நிலையில் அதற்கான ஏற்பாட்டுக் கூட்டம் நேற்றுமுன்தினம் தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகத்தில் இடம்பெற்றது.
இதற்காகவே முதல் கட்டமாக மூன்று தினங்கள் தேர்வு செய்யப்பட்டதோடு அந்த மூன்று தினங்களுக்கான பணிகளுக்குரிய அட்டவணையும் தயார் செய்யப்பட்டது.
இவ்வாறு தயார் செய்யப்பட்ட மூன்று அட்டவணைகளும் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் இறுதி செய்யப்பட்டு தேர்தலுக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கும் சமயம் இதில் ஒரு திகதி உறுதி செய்யப்பட்டு அவ்வாறு உறுதி செய்யப்பட்ட திகதிக்கான அட்டவணைக்குரிய பட்டியல் நடைமுறைப் படுத்தப்படும். இதற்காக தேர்தல்கள் ஆணைக்குழுவானது நவம்பர் மாதம் 16, 23, 30 ஆகிய திகதிகளை இனம் கண்டுள்ளது. இந்தத் திகதிகளில் ஓர் தினத்திலேயே அரசதலைவர் தேர்தல் இடம்பெறுவது உறுதியாகிய நிலையில் இறுதி முடிவினை எடுக்கும் நோக்கிலேயே குறித்த கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.
இதன்போது பரீட்சை தொடர்பில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு பரீட்சைகள் பாதிக்கப்படாமல் 3 தினங்களில் ஒரு திகதி தேர்வு செய்யப்படும் எனத் தெரிவித்தார். (ம-105)

பிரான்ஸ், பிரிட்டன்

## சிரியாவுக்குச் சிப்பாய்களை அனுப்புவதற்கு உத்தேசம்

லண்டன், ஜூலை 12

தத்தமது இராணுவச் சிப்பாய்களைச் சிரியாவுக்கு அனுப்புவதற்குப் பிரிட்டனும், பிரான்ஸும் சம்மதம் தெரிவித்துள்ளன. பிரான்ஸ், பிரிட்டனிலிருந்து சுமார் 10சதவீதம் முதல் 15சதவீதம் வரையான சிப்பாய்களைச் சிரியாவுக்கு அனுப்புவதற்கு அந்த நாடுகள் சம்மதித்துள்ளன என்று அமெரிக்கச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால், பிரான்ஸ், பிரிட்டனிலிருந்து எவ்வளவு சிப்பாய்கள் சிரியாவுக்கு அனுப்பட உள்ளனர் என்பது இரகசியமாக உள்ளது. சிரியாவில் போரிடுவதற்குச் சிப்பாய்களைத் தந்துதவுமாறு கடந்த வாரம் அமெரிக்கா விடுத்த கோரிக்கையை ஜேர்மனி நிராக்கரித்த நிலையில், பிரிட்டனும் பிரான்ஸும் இதற்கு முன்வந்துள்ளன. அத்தோடு இதில் இணைவதற்கு இத்தாலி ஆலோசித்து வருவதாகவும் செய்திகள் வெளியாகி உள்ளன.

**பின்னணி**

சிரியாவில் உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் உட்பட்ட ஆயுதக் குழுகளுக்கு எதிராக அமெரிக்கா இராணுவம் சில ஆண்டுகளாகப் போரிட்டு வருகின்றது. இதில் ஓராளவு வெற்றி அடைந்ததன் விளைவாக அமெரிக்கப் படைகள் சிரியாவிலிருந்து வெளியேறும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்தார். ஆனால், முழுமையாக ஆயுத அமைப்புகளை ஒடுக்கவில்லை என்று பன்னாட்டளவில் விமர்சனங்கள் உழுந்தன. ஆகையால் தொடர்ந்து அங்கு போர் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது அமெரிக்கப் படை. இந்த நிலையிலேயே தற்போது பிரிட்டனும், பிரான்ஸும் சிரியாவுக்குச் சிப்பாய்களை அனுப்புவதற்குச் சம்மதித்துள்ளன.

## ட்ரம்பை விமர்சித்ததை அடுத்து பதவி விலகினார் பிரிட்டன் தூதர்

### கவலை தெரிவித்தார் தெரேசா மே



லண்டன்,ஜூலை 12

அமெரிக்க அதிபர் ட்ரம்பைக் கடுமையாக விமர்சித்திருந்த மின்னஞ்சல்கள் வெளியில் கசிந்த விவகாரத்தைத் தொடர்ந்து அமெரிக்காவுக்கான பிரிட்டன் தூதர் சர் கிம் டாரக் பதவி விலகினார்.

'அமெரிக்கா அதிபரின் ஆட்சி, குழப்பம் மிக்கதாகவும் திறமை யற்றதாகவும் இருக்கிறது' எனச் சர் கிம் டாரக் குறிப்பிட்டிரு ந்த மின்னஞ்சல் வெளியானதைத் தொடர்ந்து, சர் கிம் டாரக்கை 'அறிவில்லாதவர்' என ட்ரம்ப் குறிப்பிட்டார்.

சர் கிம்முடன் தொடர்ந்து பணிபுரிய விருப்பம் இல்லை என்றும் ட்ரம்ப் தெரிவித்தார். பிரிட்டன் தூதருடன் ஒரு நாட்டின் அதிபர் பணிபுரிய மறுத்தது இதுவே முதல் முறை. இந்த நிலையிலேயே சர் கிம் டராக் பதவி துறந்தார்.

'என்னுடைய பதவிக்காலம் இந்த வருடத்தின் இறுதி வரை இருந்தாலும் இப்போது இருக்கும் தருணத்தில் புதிய தூதரை நியமிக்க அனுமதிப்பதே சிறந்தது என நான் நம்புகிறேன்' என அவர் தனது பதவி விலகல் கடிதத்தில் குறிப்பிட்டார். கிம்மின் பதவி விலகல் வருத்தம் அளிப்பதாகப் பிரிட்டனின் தலைமை அமைச்சர் தெரேசா மே தெரிவித்தார்.

பப்புவா நியூகினியில் பதற்றம்

# பழங்குடியினரிடையே மோதல் 3 நாள்களில் 24 பேர் சாவு

போர்ட் மொறெஸ்பே, ஜூலை 12

ஆஸ்திரேலியாவை அண்மித்திருக்கின்ற தீவு நாடான பப்புவா நியூகினியில் மலைவாழ் பழங்குடி இன மக்களிடையே நிகழ்ந்த மோதலில் 24 பேர் சாவடைந்தனர். இந்தச் சம்பவம் அங்கு பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியது.



ஆஸ்திரேலியாவின் வடக்கே பசுபிக் சமுத்திரத்தில் அமைந்துள்ள பப்புவா நியூகினியில் வாழ்கின்ற மலைவாழ் பழங்குடி இன மக்களிடையே அடிக்கடி மோதல்கள் நடந்து வருகின்றன.

வலுவான ஆட்சியை அங்கு நிலை நிறுத்த முடியாமல் அந்த நாட்டு அரசு திணறுகிறது. இந்த நிலையில், அங்கு இருவேறுபட்ட பழங்குடி இனத்தவர்களிடேயே நேற்று முன்தினம் மோதல் ஏற்பட்டது. அந்த மோதல் வெறித்தனமானதாக மாறியது. ஒருவரை ஒருவர் தானியங்கி ஆயுதங்களைக் கொண்டு தாக்கிக் கொண்டனர். 3 நாள்களாகத் தொடர்ந்து நடந்த இந்த மோதலில் 24 பேர் சாவடைந்தனர். சாவடைந்தவர்களில் இருவர் கர்ப்பவதிகள் என்று கண்டறியப்பட்டுள்ளது. இந்த மோதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கண்டிப்பாக நீதி வழங்கப்படும் என அந்த நாட்டின் தலைமை அமைச்சர் ஜேம்ஸ் மாரபி உறுதி அளித்தார். பப்புவா நியூகினி யாவின் வலுவற்ற அரசால் இவ்வாறான அசம்பாவிதங்களைத் தடுக்க முடியாதுள்ளது என்றும், இதற்கு நீதியளிப்பதும் அந்த அரசால் இயலாது என்றும் பன்னாட்டு அரசியலவதானிகள் கவலை வெளியிடுகின்றனர்.

## சீனாவில் கடும் மழை 10லட்சம் மக்கள் பாதிப்பு



பீஜிங், ஜூலை 12

சீனாவில் கடும் மழை பெய்கிறது. இதனால் சுமார் 10 லட்சத்துக்கு அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டனர். சீனாவில் கடந்த மாதத்திலிருந்து பெய்து வரும் இந்த மழையால் அந்த நாட்டின் தென்பகுதியிலே இந்தப் பாதிப்புப் பதிவாகியது. அங்குள்ள ஹூனான், குவான்சி ஆகிய மாகாணங்கள் இந்த மழையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. ஆயிரத்துக்கும் அதிகமான வீடுகள் நீரில் மூழ்கின.

இந்த மழை காரணமாக 390 மில்லியன் டொலர் சீன அரசுக்கு இழப்பீடு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. தொடர்ந்து நிலைமை கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் மீட்புப் பணிகள் துரிதமாக நடந்து வருவதாகவும் சீன அரச செய்திகள் தெரிவிக்கின்றன.

## வெனிசுலாவின் மக்களால் நிறைகிறது கொலம்பியா

பொகோட்டா, ஜூலை 12

வெனிசுலாவில் நீடிக்கின்ற அரசியல் குழப்ப நிலை காரணாமக அங்கிருந்து இடம்பெயர்ந்த அண்ணளவாக 1.3 மில்லியன் மக்கள் வெனிசுலாவின் அயல்நாடான கொலம்பியாவுக்குள் புகலிடம் கோரி நுழைந்துள்ளதாகக் கொலம்பியா தெரிவிக்கிறது.

குறித்த புகலிடக் கோரிக்கையாளர்கள் கொலம்பியாவில் தொழில் புரிவதற்கான தற்கால அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் கொலம்பியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

"வெனிசுலாவிலிருந்து குடிபெயர்ந்து எங்கள் நாட்டில் தஞ்சம் புகுந்துள்ளவர்கள் குறைந்த ஊதியத்துக்குத் தொழில்புரிகிறார்கள். இந்த குறைந்த வேதனம் காரணமாகக் கொலம்பியாத் தொழிலாளர்களின் தொழில் வாய்ப்புக்கள் பறிபோகின்றன.

முதலாளிமார் இலாபமீட்டுவதற்காக வெனிசுலாவாசிகளையே தொழிலுக்கு அமர்த்த விரும்புகின்றனர்" என்று கொலம்பியாவின் பிரதித் தொழில் அமைச்சர் அன்ரஸ் பெனலப் உருபி கூறினார். இந்தத் தற்கால அனுமதிப் பத்திரமுறையூடாக வெனிசுலாத் தொழிலாளர்களின் சம்பளம் சரியாக நிர்ண யிக்கப்படும்.

அதுமட்டுமல்லாது அவர்களுக்கு மருத்துவ வசதிகள், ஓய்வூதியம் என்பனவும் வழங்கப் படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெனிசுலாவைச் சேர்ந்த ஆயிரத்து 400 பேர், கொலம்பியா, பிறேசில் ஆகிய நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர் எனக் கொலம்பியாவின் குடிவரவுத் திணைக்களமும், கொலம்பியாவில் தஞ்சமடைந்துள்ள வெனிசுலாவின் முன்னாள் இராணுவ அதிகாரியான எடியர் ரொட்ரிகஸின் தலைமையில் 'ஒபரேசன் வெனிசுலா' என்ற பெயரில் போராட்டக்குழுவொன்று கொலம்பியாவில் உருவாக்கப்பட்டுள்ளதாகக் கொலம்பியாவின் புலனாய்வுப் பிரிவினரும் அண்மையில் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

*30 ஆண்டுகளின் பின்*

# கென்யாவிலிருந்து இந்தியா சென்று 200ரூபா கடனை அடைத்த அமைச்சர்

### நெகிழ்ச்சிச் சம்பவம்

கென்யாவின் யாரிபாரி தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராகவுள்ள கென்யாவைச் சேர்ந்த ரிஸ்சார்ட் டாங்கி என்பவர் 30ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவில் தான் கல்வி கற்ற காலத்தில் கடைக்காரர் ஒருவரிடம் பெற்ற 200ரூபா(இந்திய மதிப்பில்) கடனை இந்தியாவுக்குச் சென்று, அந்தக் கடைக்காரரைத் தேடிக் கண்டறிந்து வழங்கினார். இந்தச் சம்பவம் அங்கு பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது:



1985ஆம் ஆண்டிலிருந்து 1989ஆம் ஆண்டு வரை இந்தியாவின் மஹாராஷ்டிரா மாநிலத்திலுள்ள ஔரங்காபாத்தில் உள்ள கல்லூரி ஒன்றில் கல்வி பயின்று வந்துள்ளார் டாங்கி. கல்வி பயின்ற காலத்தில் அவர் தங்கியிருந்த விடுதிக்கு அருகில் உள்ள சிறிய கடை ஒன்றில் தனக்குத் தேவையான அத்தியவசியப் பொருள்களை வாங்குவதை வழக்கமாக கொண்டிருந்தார். சில சமயங்களில் போதிய பணம் இல்லாதபோதும் அந்தக் கடையில் கடன் வாங்கித் தனது பெற்றொரிடமிருந்து பணம் வந்த பின்னர் கடனை அடைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். 200ரூபா கொடுக்குமதி இருந்த தருணத்தில் தனது படிப்பை நிறைவு செய்து அவர் கென்யா திரும்பினார். தற்போது அவர் நாடாளுமன்ற உறுப்பினராகவுள்ளார். கடந்த திங்கள் கிழமை இந்தியாவுக்குப் பயணமான அவர், தனக்குக் கடன் வழங்கி உதவிய கடைக்காரரான காசிநாத் ஹவ்லியை கடும் தேடலுக்கு பின் கண்டுபிடித்துத் தனது கடனை அடைத்தார்.

வயோதிபம் காரணமாகத் தனது வீட்டில் இருந்த காசிநாத் ஹவ்லி, இது தனது வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்வு எனத் தெரிவித்தார்.

# ஈரான் - பிரிட்டன் முறுகல் வளைகுடாக் கடலில் பதற்றம்

## வளைகுடாப் பாதுகாப்புக்குப் புதிய படைக்குத் திட்டம்

வோஷிங்டன், ஜூலை 12

ஈரானுக்குச் சொந்தமான 5 போர்ப் படகுகள், வளைகுடாக்கடலில் பயணித்த பிரிட்டனுக்குச் சொந்தமான எண்ணெய்க் கப்பல் ஒன்றை நெருங்கின. அதன்போதுபிரிட்டனின்போர்க்கப்பல் தனது பீரங்கிகளை அந்தப் போர்ப் படகுகளை நோக்கித் திருப்பியதுடன், ஒலிபெருக்கியூடாக அந்தப் படகுகளை எச்சரித்தது.

அதன்பின்னர் அந்த ஐந்து படகுகளும் அங்கிருந்து பின்வாங்கின. இவ்வாறு பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

அத்தோடு, வளைகுடாக் கடலில் நிகழும் இத்தகைய சம்பவங்கள் காரணமாக, வளைகுடாவில் ஈரான், ஏமன் ஆகிய நாடுகளை அண்மித்துள்ள கடற்பரப்பில்கப்பல்களின்பாதுகாப்பை உறுதிப்படுத்த அமெரிக்கா ஒரு கூட்டுப் ப் டையை உருவாக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சமீப காலங்களில் வளைகுடாக் கடலில் பயணிக்கும் எண்ணெய்க் கப்பல்கள் தாக்குதல்களுக்கு உள்ளாகின்றன.




அதைத் தடுக்க அமெரிக்கா தனது போர்க்கப்பல்ஒன்றைவளைகுடாவில் நிறுத்தியுள்ளது. ஆயினும்மிகப்பெரிய கடல்பகுதியானபெர்சியன்கடல்பகுதி, அரோபியாவுக்கும் ஆபிரிக்காவுக்கும் இடையிலான கடல்பகுதி போன்றவற்றைத் தனித்துப் பாதுகாப்பது அமெரிக்காவால் இயலாத காரியம் என்பதாலேயே இந்தக் கூட்டுப்படை முயற்சித் திட்டம் முன்வைக் கப்பட்டுள்ளது என இந்த நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளகூட்டமைப்பின்தலைமை அதிகாரியானஜோசப்டன்போர்ட்தெரிவித்தார்.

உலகஎண்ணெய்உற்பத்தியின்5இல் ஒரு பகுதி குறிப்பிட்ட இந்தக் கடற்பரப்பின்ஊடாகக்கொண்டுசெல்லப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## சிரியாவில் கடும் தாக்குதல் ஆயுததாரிகள் 56பேர் சாவு

டமஸ்காஸ்,ஜூலை12

சிரியாவின் வடக்குப் பகுதியில் நடந்த மோதலில் ஆயுதாரிகளில் 56 பேர் கொல்லப்பட்டதாகச் சிரியாவுக்கான ஐ.நா. கண்காணிப்புக் குழு தெரிவித்தது. சிரியாவில் வடகிழக்குப் பகுதியில் ஆயுதாரிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலிலேயே இவர்கள் கொல்லப்பட்டனர். ரஷ்யா மற்றும் சிரியப் படைகள் அந்தப் பகுதியில் ஆபத்தான பல குண்டுகளை விசித் தாக்குதல் நடத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### செர்னோபில் அணு உலை

# பேரழிவு நடந்த இடம் சுற்றுலாத் தலமாகிறது

உலகத்தின் மிக மோசமான அணு விபத்து ஏற்பட்ட செர்னோபில் மற்றும் அதன் சுற்றுவட்டா ரத்தைச் சுற்றுலாத் தளமாக மாற்றப் போவதாக உக்ரைனின் அதிபர் தெரிவித்தார். கடந்தபுதன்கிழமையன்று இதுகுறித்துத் தெரிவித்த அவர், செர்னோபிலைச் சுற்றுலாத் தளமாகமாற்றுவதற்குரியசெயற்றிட்டத்திலும் கையெழுத்திட்டார். உலகின் துயரம் என்று அழைக்கப்பட்டு வருகின்ற செர்னோபில் குறித்தஎதிர்மறையானஎண்ணத்தைமாற்றுவதற்கான நேரம் வந்துவிட்டது என்று அப்போது அவர் மேலும் தெரிவித்தார்.

**செர்னேபில் அணு உலை விபத்து**

1986ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் செர்னோபிலில் அணு உலை விபத்து ஏற்பட்டது. இந்த விபத்து ஐரோப்பா முழுவதும் கதிர்வீச்சைப் பரப்பியது. ஐ.நாவின் கூற்றுபடி, 50ஆயிரம் சதுர கிலோமீற்றர் நிலம் இதனால் பாதிக்கப்பட்டது. இந்த விபத்தில் 31 பேர் உயிரிழந்தனர். அதுமட்டுமல்லாமல்அதனுடையபாதிப்புஇன்றுவரை அங்கு இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த விபத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை ரச்சினைக்குரியதாக இருக்கிறது.

இதுவரை 5ஆயிரம் பேருக்கு தைரொய்ட் புற்றுநோய் வந்து அதற்கு சிகிச்சை அளித்துச் சரி செய்யப்பட்டுள்ளது. வேறு விதமான புற்றுநோய்களுக்கானசாத்தியம்இருப்பதாகப்பலர் சந்தேகிக்கின்றனர்.

அதுமட்டுமல்லாமல் வேறு சில உடற் பிரச்சினைகள் மற்றும் பிறக்கும் போது ஏற்படும் குறைகள் எனப் பலவற்றுக்கான வாய்ப்புகள் உள்ளதாக அறிக்கைகள் இருக்கின்றன.

விபத்து ஏற்பட்ட அணு உலையை மூடு வதற்காகப் பிரமாண்டமான இரும்புக் கூரையைச் செய்வித்தார்உக்ரைனின் அதிபர். அந்தக்கவசம்1.7 பில்லியன் டொலர் செலவில், கதிர்வீச்சு மேலும் பரவாமல் தடுக்கும் நோக்கில் தயாரிக்கப்பட்டு, 2016ஆம் ஆண்டில் பொருத்தப்பட்டது. 275 மீற்றர் அகலமும் 108 மீற்றர் உயரமும் கொண்டது அது.

# ரயில்கள் நேருக்கு நேர் மோதல் பாகிஸ்தானில் 1 1 பேர் சாவு

லாகூர், ஜூலை 12

தொடருந்து நிலையத்தில் தரித்துநின்ற தொடருந்துடன் எதிர்த்திசையில் வந்த பயணிகள் தொடருந்து மோதியதில் 11 பயணிகள் சாவடைந்தனர். இந்தச் சம்பவம்பாகிஸ்தானின்கிழக்குமாகாணத்துக்கு உட்பட்ட சாதிக்கபாத் தேசில் பகுதியில் உள்ள வால்கர் தொடருந்து நிலையத்தில் நடந்தது.

இதில் பயணிகள் தொடருந்தின் இயந்திரப் பகுதியும் 3 பெட்டிகளும் நொருங்குண்டன. சாவடைந்தவர்களைத்தவிர 60க்கும் மேற்பட்ட பயணிகள் காயமடைந்தனர்.



அவர்கள் அனைவரும் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். இந்த விபத்தில் உயிரிழந்தவர்களுக்குப் பாகிஸ்தானின் தலைமை அமைச்சர் இம்ரான்கான், அதிபர்ஆரிப்அல்விஆகியோர் இரங்கல் தெரிவித்தனர். பயணிகள் தெடாருந்து தடம் மாறியதே விபத்துக்கான காரணம் என்றும், அது குறித்து விசாரணை நடந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



# இன்றைய நாள்

**மேடம்:** புதியவர்களின் நட்பு கிடைக்கும். பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபா ரத்தில் வளர்ச்சி இலக்கு திட்டமிட்டபடி நிறைவேறும். வருமானத்தில் கொஞ்சம் சேமிப்பீர்கள்.

**இடபம்:** செயலில் நேர்த்தியும், கலைத்திறனும் வெளிப்படும். தொழில் வியாபார வளர்ச்சியால் முன்னேற்றம் காண்பீர்கள். பெண்கள் குடும்பத்துடன் விருந்து விழாவில் பங்கேற்பர்.

**மிதுனம்:** வாக்குறுதியை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் கிடைக்கிற வாய்ப்பை தவறாமல் பயன்படுத்தவும். பெண்கள் வீட்டுச்செலவில்சிக்கனம்பின்பற்றவும்.

**கடகம்:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்யலாம். தொழில், வியாபாரத்தில் சராசரி அளவில் பணவரவு கிடைக்கும். வீடு, வாகன வகையில் பராமரிப்புச் செலவு ஏற்படும்.

**சிம்மம்:** மனதில் இரக்கக் குணம் அதிகரிக்கும். பிறருக்கு உதவுவதில் முதன்மை பெறுவீர்கள். ஆதாயம் பன்மடங்காக கிடைக்கும். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர்.

**கன்னி:** எதிர்வருகிற சூழல் சங்கடம் தரலாம். மனச்சாட்சிப்படி நடந்து குடும்ப பெருமையை பாதுகாப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் நேரும் குளறுபடியை சரிசெய்வது நல்லது. சேமிப்பு பணம் முக்கிய செலவால் கரையும்.

**துலாம்:** உதவி கேட்டவருக்கு மறுக்காமல் செய்வீர்கள். தொழில், வியாபார நடைமுறை செழிக்க தேவையான மாற்றம் செய்வீர்கள். பணவரவு அதிகரிக்கும். பணியாளர்களுக்கு நிர்வாகத்தினரின் பரிசு, பாராட்டு கிடைக்கும்.

**விருச்சிகம்:** பேச்சு, செயலில் தயக்கம் ஏற்படலாம். .தொழிலில் உற்பத்தி விற்பனை சுமாராக இருக்கும். அவசியமற்ற வகையில் கடன் வாங்க வேண்டாம்.

**தனுசு:** பணிகளில் நம்பிக்கையுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிநிலைஅதிகரிக்கும். வருமானம் சேமிக்கும் விதத்தில் இருக்கும். குடும்பத்தில்ஒற்றுமைமகிழ்ச்சிவளரும்.

**மகரம்:** மதிநுட்பத்துடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து வளர்ந்து சமூக அந்தஸ்தில் உயர்வு காண்பீர்கள். பணம் கொடுக்கல், வாங்கல் சீராக இருக்கும்.

**கும்பம்:** எதிர்பார்த்த நன்மை தெய்வ அனுகூலத்தால் நிறைவேறும். தொழில், வியாபாரம் நல்ல வளர்ச்சி பெறும். ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை பெற்று மகிழ்வர்.

**மீனம்:** நண்பர்களால் பிரச்னை ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். பணவரவை விட செலவு அதிகரிக்கும். பணியாளர்கள் பணிச்சுமையை திறம்பட சமாளிப்பர்.

பூநகரி

## கால்பந்தாட்ட சம்மேளனத்தின் அங்குரார்ப்பணநிகழ்வு

பூநகரி கால்பந்தாட்ட சம்மேளனத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த ஞாயிற் றுக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. பூநகரி உதைபந்தாட்ட சம்மேளனம் கடந்த 9 ஆண்டுகளாக கிளிநொச்சி லீக் கின் ஆளுகையின் கீழ் இயங்கி வந்தது. இந்த நிலையில் குறித்த பிரதேசத்தில் உள்ள வீரர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தி வந்தபோதிலும் தமக்கான ஓர் அடையாளத்தை நிலைநாட்ட முடி யாத நிலை காணப்பட்டதாக தெரிவித்து வந்தனர். இதன் காரணமாக பூநகரி கால்பந்தாட்ட சம்மேளனம் ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சிகள் இடம் பெற்று வந்தன.

கடந்த வாரம் இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தில் தலைவர், செயலர் மற் றும் லீக் இணைப்பாளர் ஆகியோரின் சந்திப்பின்போது தமது லீக் போட்டிகளை தனித்து நடத்துவதற்கு அனுமதி வழங் குமாறு கோரியிருந்தனர். குறித்த கோரிக்கைக்கு அமைவாக அவர்கள் வழங்கிய அனுமதியின் பிரகாரம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது. இதில் இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் பிரதித் தலைவர் திரு.அ. டெவில்சன் கலந்து சிறப்பித்தார்.

குறித்த நிகழ்வில் முழங்காவில் ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரி செல்வம், அருட்பணி சுமன் பங்குத் தந்தை மற்றும் பூநகரி லீக்கில் அங்கத் துவம் வகிக்கும் கழகங்களின் தலைவர் கள், செயலர்கள் லீக் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கால்பந்தாட்ட போட்டியில் பூநகரி பிரதே சத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அணி கள் பலம் வாய்ந்த அணிகளாக கடந்த காலங்களில் பிரசித்தி பெற்றிருந்த நிலை யில் தமக்கான ஓர் அடையாளத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு பூநகரி உதை பந்தாட்ட சம்மேளனம் உருவாக்கப்பட் டமை பெரும் வரவேற்பை பெற்றுள் ளது. (6)



# நெல்லியடி மத்திய கல்லூரி கிண்ணத்தை சுவீகரித்தது





சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 125ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அழைக்கப்பட்ட பாடசாலை களுக்கு இடையிலான 19 வய துப் பிரிவு கால்பந்தாட்ட அணி களுக்கு இடையிலான அமரர். முருகையா வெற்றிக் கிண்ணத் துக்கான கால்பந்தாட்டத் தொட ரில் நெல்லியடி மத்திய கல் லூரி அணி கிண்ணம் வென் றது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதா னத்தில் நேற்று வியாழக்கிழமை இடம் பெற்ற இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல் லூரி அணி மோதியது.

முதல் பாதி ஆட்ட முடிவில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி சார்பில் சுபாஸ்காந் ஒரு கோலைப் பதிவு செய்தார். இரண்டாம் பாதி ஆட்ட முடிவில் யாழ்.மத்தியகல்லூரி அணி சார்பில் றொக்சன் ஓர் கோலைப் பதிவு செய்தார். ஆட்ட நேர முடிவில் இரண்டு அணியினரும் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதால் ஆட்டம் சமநிலையில் முடி வடைந்தது. வெற்றி தோல்வியை தீர்மானிப்ப தற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டன. இதில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண் ணத்தை சுவீகரித்தது. ஆட்ட நாயகன் விருதை யாழ். மத்திய கல்லூரி அணி வீரர் றொக்சன் பெற்றார். தொடர் ஆட்ட நாயகன் விருதை நெல் லியடி மத்திய கல்லூரி அணி வீரர் வினித் பெற் றார். (23)



### இன்றைய ஆட்டங்கள்

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் 60ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கரப்பந்தாட் டத் தொடரின் ஆட்டங்கள் இன்று புதன்கிழமை கழக மைதானத்தில் மின்ஒளியில் ஆரம்பமாகின்றன.

இந்தத் தொடரில் இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத் திய விளையாட்டுக்கழக அணி மோத வுள்ளது. (23)

# போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 12

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் 60ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கரப்பந் தாட்டத் தொடரில் மட்டுவில் மோக னதாஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

நேற்று முன்தினம் புதன்கிழமை கழக மைதானத்தில் மின்னொளியில் இரவு 7.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் சென்ரல் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதி யது. மூன்று சுற்றுக்களைக் கொண்டதாக ஆட்டம் இடம் பெற் றது. முதல் சுற்று ஆட்டத்தில் சென் றல் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 25:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. இரண்டாவது, மூன்றாவது சுற்று ஆட்டத்தில் மோகன தாஸ் விளை யாட்டுக் கழக அணி சிறப்பாக விளையாடி 25:20, 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (23)

*** *** ***

யாழ்ப்பாணம், ஜூலை 12

உரும்பிராய் திருக்குமரன் விளை யாட்டுக்கழகம் நடத்தும் சோபநாத் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக் கான கால்பந்தாட்டத் தொடரில் இளவாலை சென். லூட்ஸ் விளை யாட்டுக்கழக அணி வெற்றி பெற் றது.

திருக்குமரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை சென். லூட்ஸ் விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து கொட்டடி முத்தமிழ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் 4:1 என்ற கோல் கணக்கில் இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. (23)

*** *** ***

யாழ்ப்பாணம், ஜூலை 12

சுடர்ஒளி விளையாட்டுக்கழகமும் பன்னங்கண்டி மக்களும் இணைந்து நடத்தும் பசுந்தளிர் வெற்றிக்கிண்ணத்துக்கான அணி 9 பேர் பங்கு பற்றும் விலகல் முறை யிலான கால்பந்தாட்டத் தொடரில் இளந்தளிர் விளையாட்டுக்கழக அணி காலிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

நேற்றுமுன்தினம் சுடர்ஒளி விளை யாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் இளந்தளிர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென். ஆன்ஸ் விளையாட் டுக்கழக அணி மோதியது. இதில் இளந்தளிர் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன் னேறியது. (23)

*** *** ***

யாழ்ப்பாணம், ஜூலை 12

மற்றுமொரு போட்டியில் வேரவில் கலைமகள் விளையாட்டுக்கழக அணி காலிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. நேற்றுமுன்தினம் சுடர்ஒளி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத் தில் வேரவில் கலைமகள் விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து முரசுமோட்டை வினைபூமி விளை யாட்டுக்கழக அணி மோதியது. இதில் 5:4 என்ற கோல் கணக்கில் வேரவில் கலைமகள் விளையாட் டுக்கழக அணி வெற்றி பெற்று காலி றுதிக்கு முன்னேறியது. (23)

# அன்னை வி.க. அசத்தல் வெற்றி



யாழ்ப்பாணம், ஜூலை 12

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழகம் நடத் தும் சோபநாத் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நாவற்குழி அன்னை விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

திருக்குமரன்விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று வியாழக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் நாவற் குழி அன்னை விளையாட் டுக்கழக அணியை எதிர்த்து அராலி பாரதி விளையாட் டுக்கழக அணி மோதியது. இதில் 7:1 என்ற கோல் கணக்கில் நாவற்குழி அன்னை விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. (23)

கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின்

# இறுதிப் போட்டியும், பரிசளிப்பு நிகழ்வும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை

யாழ்ப்பாணம், ஜூலை 12


யாழ்ப்பாண மாவட்ட கரப்பந்தாட்ட சங் கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக் கிடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியும், பரிச ளிப்பு விழாவும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

நிகழ்வுகள் யாழ்ப்பாண மாவட்ட கரப் பந்தாட்டச் சங்கத்தின் தலைவர் கி. மனோகரன் தலைமையில் வல்வை உள்ளக விளையாட்டரங்கில் மாலை 5மணிக்கு ஆரம்பமாகும் என்று அறி விக்கப்பட்டுள்ளது.


இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தி னராக தியாகி அறக்கொடை நிறுவனத் தின் நிறுவுனர் வாமதேவா தியாகேஸ் வரனும், சிறப்பு விருந்தினராக கிளி நொச்சி மாவட்ட கரப்பந்தாட்ட பயிற்று விப்பாளர் எல். லக்சுமிகாந்தனும், மதிப்புறு விருந்தினர்களாக வல்வெட்டித் துறை முன்னாள் கரப்பந்தாட்ட வீரர் கே.தேவசிகாமணி, வல்வெட்டித்துறை உள்ளக விளையாட்டரங்கின் முகாமை யாளர் எஸ்.ராஜ்குமார் ஆகியோர் கலந் துகொள்ளவுள்ளனர் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

இறுதிப்போட்டியின் 'ஏ' அணிகளில் மட் டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழ கத்தை எதிர்த்து புத்தூர் மத்தி ஸ்ரார் விளையாட்டுக்கழகமும், 'பி' அணியில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழ கத்தை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளை யாட்டுக்கழகமும் மோதவுள்ளன. பரிச ளிப்பு விழாவின்போது மூத்த வீரர்களுக் கும் மதிப்பளிக்கப்படவுள்ளது என்று ஏற் பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (21)

# நடையைக் கட்டியது நடப்புச் சம்பியன்



நடப்புச் சம்பியனை வீழ்த்தி 27 வருடங்களின் பின்னர் இறுதிக்குள் நுழைந்து வரலாற்றை மாற்றியது இங்கிலாந்து அணி.
நடப்பு உலகக் கிண்ணத்தில் நேற்று இடம்பெற்ற 2ஆவது அரையிறுதியாட்டத்தில் இங்கிலாந்து - ஆஸ்திரேலியா அணிகள் மோதின. இதில் இங்கிலாந்து அணி 8 இலக்குகளால் நடப்புச் சம்பியனான ஆஸ்திரேலியாவை வீழ்த்தி இறுதிக்குள் நுழைந்தது.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியா அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிறங்கியது. ஆஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்களுக்கு ஆரம்பத்திலேயே இங்கிலாந்து




பந்து வீச்சாளர்கள் தாக்கத்தை ஏற்படுத்தினர். அணி 15 ஓட்டங்களைப் பெறுவதற்குள்ளேயே 3 இலக்குகள் சரிக்கப்பட்டன. இந்த உலகக் கிண்ணத்தில் எல்லாப் போட்டிகளிலும் கலக்கி வந்த வோர்னர் ஏமாற்றமளித்தார். சிமித், கேரி இணை அணிக்கு ஓரளவு நம்பிக்கையான ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். கேரி தனது அரைச் சதத்தை தவற விட்டு ரசிட்டின் சுழலில் சிக்கி பவிலியன் திரும்பினார். அதிரடி ஆட்டக்காரர் மக்ஸ்வெல் 22 ஓட்டங்களுடன் பிவிலியன் திரும்பினார். மறுமுனையில் சிமித் தனியொருவராக ஓட்டங்களைக் குவிப்பதில் குறிக்கோளாய் இருந்தார். அவர் எதிர்பாராத விதமாக 'ரன்அவுட்' முறையில் 85 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அவரது ஆட்டமிழப்புடன் ஆஸ்திரேலியா அணியின் ஓட்ட எண்ணிக்கை மேலும் குறைவடைந்தது. அணி ஒரு பந்துப்பரிமாற்றம் மீதமிருக்க சகல இலக்குகளையும் இழந்து 223 ஓட்டங்களைப் பெற்றது.
பந்து வீச்சில் ரசிட், வோக்ஸ், ஆர்ச்சர் என இங்கிலாந்தின் பந்து வீச்சாளர்கள் கூட்டாக ஆஸ்திரேலியா அணியை நிலை குலைய வைத்தனர்.
பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து அணி எந்தவித பதற்றமுமின்றி இலகுவாகத் துடுப்பெடுத்தாடியது. ஆரம்ப இணையைப் பிரிப்பதற்கு ஆஸ்திரேலிய பந்து வீச்சாளர்கள் திக்குமுக்காடினர். ரோய் ஒரு பக்கம் அதிர காட்டி நாலாபுறமும் ஆஸ்திரேலிய பந்து வீச்சாளர்களின் பந்தை துவம்சம் செய்தார். ஆஸ்திரேலியா அணியின் முதுகெலும்பென கூறப்பட்ட பந்து வீச்சாளர் மிச்சல் ஸ்ராக்கின் பந்து வீச்சு இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்களின் முன்னால் எடுபடவில்லை. அணி 124 ஓட்டங்களைப் பெற்ற போதே முதலாவது இலக்கு எல்.பி.டபிள்யு முறையில் சரிக்கப்பட்டது. ஜேசன் ரோயின் ஆட்டமிழப்பு குழப்பத்தில் வழங்கப்பட்டது. அவருக்கு நடுவர் ஆட்டமிழப்பு கொடுத்தார். எனினும் ஆட்டமிழப்பு இல்லை என அவர் மைதானத்தில் நடுவரிடம் முரண்பட்டார். பின்னர் அவரை சமாதானப்படுத்தி வெளியேற்றினார். எனினும் அவரது ஆட்டமிழப்பு மீள பரிசீலிக்கப்பட்டபோது அது ஆட்டமிழப்பு இல்லை என்பது தெளிவாகியது. களத்தில் இணைந்த ரூட், மோர்கன் இணை அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றது. இருவரும் ஆட்டமிழக்காது களத்திலிருக்க அணி 32.1பந்துப்பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து நடப்புச் சம்பியனை இலகுவாக வீழ்த்தி வெற்றி இலக்கை அடைந்தது. ஆட்டநாயகனாக இங்கிலாந்து வீரர் வோக்ஸ் தெரிவு செய்யப்பட்டார்.
இந்த வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி 1992ஆம் ஆண்டுக்குப் பின்னர் இறுதிப் போட்டிக்கு முன்னேறியமை குறிப்பிடத்தக்கது. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் இறுதிப் போட்டியில் இங்கிலாந்து அணி நியூசிலாந்து அணியை எதிர் கொள்கின்றது. இரண்டு அணிகளும் இதுவரை உலகக் கிண்ணத்தை வென்ற வரலாறு இல்லை. எனவே எந்த அணி வெற்றி பெற்றாலும் அந்த அணி தனது உலகக் கிண்ண கனவை நனவாக்கும். எனினும் இங்கிலாந்து அணி போட்டியை நடத்துவதால் அந்த அணிக்கே கூடுதல் வாய்ப்பு காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. நியூசிலாந்து அணியையும் குறைத்து எடை போட முடியாது.

## டோனியை 7ஆவது வீரராக களமிறக்கியது பெரும் தவறு

### கங்குலி, லட்சுமன் பாய்ச்சல்

நடப்பு உலகக் கிண்ணப் போட்டியில் இந்தியா ,- நியூசிலாந்து அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் இந்திய அணி தோல்வியடைந்தது. இந்தப் போட்டியில் டோனி களமிறங்க வேண்டிய இடத்தில் பாண்டியா களமிறங்கியிருந்தார். டோனியை 7ஆவது வீரராக களம் இறக்கியது தொடர்பாக விமர்சனம் எழுந்துள்ளது.
அவரை ரிஷப்பந்த், தினேஷ் கார்த்திக், ஹார்திக் பாண்டியா ஆகியோருக்கு முன்னதாக 4ஆவது வீரராக களம் இறக்கி இருக்க வேண்டும் என்ற கருத்து எழுந்துள்ளது. டோனியை முன்னதாக ஆடியிருந்தால் இலக்குச் சரிவை கட்டுப்படுத்தியிருக்கலாம் என்று கிரிக்கெட் வல்லுனர்கள் கருத்து தெரிவித்தனர்.
இந்த நிலையில் டோனியை 7ஆவது வீரராக தாமதமாக களம் இறக்கியது தவறான முடிவு என்று முன்னாள் வீரர்கள் கங்குலி, லட்சுமன் கண்டனம் தெரிவித்துள்ளனர்.
டோனியை மிகவும் பின் வரிசையில் களம் இறக்கியது மிகவும் தவறான முடிவு ஆகும். தினேஷ் கார்த்திக் ஆட்டம் இழந்த பிறகு ஹார்திக் பாண்டியாவுக்கு முன்னதாக அவரை களம் இறக்கி இருக்க வேண்டும்.
டோனி, ரிஷப்பந்த் இணைந்து இருந்தால் ஆட்டத்தின் தன்மை மாறி இருக்கும். இளம் வீரரான ரிஷப்பந்த்துக்கு அவர் சரியான ஆலோசனை வழங்கி இருப்பார் என்று லட்சுமன் தெரிவித்தார்.
இது தொடர்பாக கங்குலி தெரிவிக்கையில்:
டோனியை 7ஆவது வீரராக அனுப்பிய முடிவு தவறானது. அவரை முன்னதாக களம் இறக்கி இருக்க வேண்டும். அவர் முன்னதாக ஆடியிருந்தால் இலக்குச் சரிவை தடுத்து இருப்பார். பாண்டியா, தினேஷ் கார்த்திக் போன்றோருக்கு இறுதிக் கட்ட பந்துப்பரிமாற்றங்கள் தான் சரியாக இருந்து இருக்கும் - என்றார்.

## கேரியை தாக்கிய ஆர்ச்சரின் பவுன்சர் பந்து

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் நேற்று இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் இங்கிலாந்து - ஆஸ்திரேலியா அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலியா அணி இலக்குகளை இழந்து தடுமாறியது. இந்த நிலையில் 4ஆவது இலக்குக்காக ஸ்டீவ் ஸ்மித் உடன் அலெக்ஸ் கேரி ஜோடி சேர்ந்தார்.
இதில் ஆர்ச்சர் வீசிய 8ஆவது பந்துப்பரிமாற்றத்தின் இறுதிப் பந்து அலெக்ஸ் கேரியை தாக்கியது. இதில் தலைக்கவசம் கழன்றது. பந்து தாடையை பலமாக தாக்கியது. இதனால் அலெக்ஸ் ஹேரிக்கு குருதி காயம் ஏற்பட்டது. அவர் தொடர்ந்து முதலுதவியுடன் ஆட ஆரம்பித்திருந்தார்.



## அணியின் தோல்வி ஏமாற்றமளிக்கின்றது

### கோக்லி கவலை தெரிவிப்பு

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இந்தியா - நியூசிலாந்து அணிகள் மோதின. இதில் நியூசிலாந்து அணி இந்திய அணியை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது. இந்த தோல்வியால் நாங்கள் அனைவரும் ஏமாற்றம் அடைந்து உள்ளோம் என்று இந்திய அணித் தலைவர் விராட்கோக்லி தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;
அனைத்து ரசிகர்களுக்கும் நான் முதலில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் போட்டித் தொடர் எங்கள் நினைவுகளில் மறக்க முடியாத ஒன்றாகும். இந்த உலகக் கிண்ணத் தொடரை நான் மிகவும் நேசிக்கிறேன். ஆனால் அரை இறுதியில் ஏற்பட்ட தோல்வியால் நாங்கள் அனைவரும் மிகுந்த ஏமாற்றத்துக்கு உள்ளாகி இருக்கிறோம் - என்றார்.

## வாடகைக்கு

நல்லூரில் வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் தங்குவதற்கு ஏற்ற வீடு. Kitchen, Microwave, Ac, Fridge, Washing Machine வசதிகளுடன் வாடகைக்குண்டு.

**071 513 0100**

## சிங்களம்

வாய் மூலம் மற்றும் செவிமடுத்தல் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள் (ORAL & Listening)

அரச ஊழியர்களுக்கானது. ஆரம்பம் 13.07.2019 சனி மாலை 4.00 மணி தொடக்கம் 5.00 மணிவரை. சனி மற்றும் ஞாயிறு தினங்களில் நடைபெறும்.

ஸ்ரீ மாஸ்டர்
ஸ்ரீ இரண்டாம் மொழி கல்வி நிறுவகம்.
இல 164.இராமநாதன் வீதி.யாழ்ப்பாணம்.
(Science Faculty Gate முன்பாக)

விபரம்:- **077 703 3729**

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள NEWUTHAYAN.COM

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
P. உமாசங்கர் & வளவாளர்கள்
SLAS, SLFS, SLEAS, MA, புள்ளி விபர அலுவலர், நீதிமன்ற பதிவாளர்.
- நுண்ணறிவு
- உளச்சார்பு
- பொது அறிவு
- முகா.உளச்சார்பு
P. உமாசங்கர்
- ஆங்கிலம்
- சட்டம்

14.07.2019 ஞாயிறு
மு.ப 9.00 - பி.ப 4.00
முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களுடன் தொடர்ந்து பிரதி ஞாயிறு
நாவலர் கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
076 166 1986, 077 741 7143.

# சிமோனா ஹாலெப் இறுதிக்கு முன்னேற்றம்



விம்பிள்டன் ரென்னிஸ் போட்டியில் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டங்கள் நேற்று நடைபெற்றன. முதல் அரையிறுதி ஆட்டத்தில் ருமேனியா நாட்டு வீராங்கனை சிமோனா ஹாலெப் 8ஆம் நிலை வீராங்கனையான எலினா ஸ்விட்டோலினாவை எதிர்கொண்டார்.

ஆட்டம் தொடங்கியதில் இருந்தே சிமோனா ஹாலெப் அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவரது ஆட்டத்துக்கு ஸ்விட்டோலினாவால் ஈடுகொடுக்க முடியவில்லை. ஹாலெப் 6:1,6:3 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

## VACANCIES FOR SECRETARY & RECEPTIONIST



We are one of the leading Institute in Jaffna. We are looking for a committed and enthusiastic individual with the ability to work independently to join our team.

### Secretary

- Minimum 1 year experience in similar position
- An excellent command of written and spoken English
- Good knowledge of MS Windows/Excel & e-mails
- The Willingness & eagerness to learn and pursue a career in the future
- Retired secretary also will be considered

### Receptionist

- Minimum 1 year experience in similar position
- An excellent command of spoken English
- Ability to work under pressure

Those who are interested, Send your CV along with details of two non-related refrees within 7 days to:

jaffnavacancy@gmail.com

## யாழ்நகரில் இயங்கும் அச்சகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை

- சாரதி
- பணவசூலிப்பாளர்கள்
- பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
- சுத்திகரிப்பாளர்கள்

ஆர்வம் உள்ளவர்கள் உங்கள் சுயவிபரக்கோவையுடன் **15.07.2019** திங்கட்கிழமை கீழ் உள்ள முகவரிக்கு காலை - 9.30 - பி.ப 2.00 வரை நேரில் சமூகம் தரவும்.

**ES Printers**
இல.359, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

O/L மற்றும் தரம் 6 - 10 வரை
பிரத்தியேக **தமிழ்** வகுப்புக்கள்
**076 030 5208**
N.K.KAJAROOBAN B.A

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 666
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.07.11
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 69,021,325/-
வெற்றி இலக்கங்கள்: 14 15 33 36 K
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## அதி விஷேட வைத்தியம்

ஹோமியோபதி வைத்திய சேவை ஊடாக IAS வைத்திய சேவை நிலையத்தில் நீரிழிவு (சலரோகம்), மூட்டு வாதம், ஆஸ்துமா உட்பட 19 நோய்களை முற்றாக குணப்படுத்திக்கொள்ள 37 வருட அனுபவம் வாய்ந்த அதிவிஷேட வைத்தியசேவை

நாளை (13.07.2019) சனிக்கிழமை
A9, வீதி, பரந்தன் கூட்டுறவுச் சங்க வளாகத்தில் நடைபெறும்

அடுத்த சேவை
20.07.2019 (சனிக்கிழமை) இல.125, பிரதான வீதி, 2 ஆம் குறுக்குத்தெரு சந்திக்கு அருகில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

பதிவுகளுக்கும் முற்பதிவுகளுக்கும்
**077 444 1082**

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 1585
சீட்டிழுப்பு திகதி: 11.07.2019
வெற்றி இலக்கங்கள்: 45 51 66 69 F
அடுத்த திங்கட் கிழமைக்கான ஜக்பொட் ரூ.33, 962, 952/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
| --- | --- | --- |
| 11.07.2019 | 2558 | கபிலம் |

இடபம்
வெற்றி இலக்கங்கள்: 22 26 39 60
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,408,350/=
12.07.2019 ம் திகதி வெள்ளிக் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

## விசேட கருத்தரங்கு

27ம் திகதி நடைபெறவுள்ள வட.மாகாண முகாமைத்துவ உதவியாளர் பரீட்சை
13/07/2019 சனி
16/07/2019 செவ்வாய
9Am - 2Pm
P.கமல்தாசன்
நாவலர் கல்வி நிறுவனம்,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
**077 111 6739**
**076 166 1986**

## கருத்தரங்கு

SLAS (OP/Ltd)
நீதி. பதிவாளர்
புள்ளி விபரவியலாளர்
பரீட்சைகளுக்கானது
13/07/2019 சனி
9Am-3Pm
P. கமல்தாசன்
மற்றும்
A.K. கீர்த்தி-MA
S. பரணிதரன்-SLPS,LLB
K.குமணன் SLPS
நாவலர் கல்வி நிறுவனம்,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
**077 111 6739**
**076 166 1986**

## போட்டிப்பரீட்சை விசேட வகுப்புக்கள்

வடமாகாண முகாமைத்துவ உதவியாளர்
சனி , ஞாயிறு 9.00 - 2.00
பதிவாளர்
சனி , ஞாயிறு 9.00 - 4.00
புள்ளி விபரவியலாளர்
சனி , ஞாயிறு 9.00 - 3.00
SLAS,SLEAS
பிரதி ஞாயிறு 9.00 - 4.00
அபிவிருத்தி உத்தியோகத்தர் தடைதாண்டல்(EB)
பிரதி ஞாயிறு 11.00 மணி
தொடர்புகளுக்கு
**076 688 3394**
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ் ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையத்திலிருந்து 100m தூரத்தில்)

## MASSIVE VEHICLES AUCTION SALE



**18th of July**

LOLC VEHICLE FACILITY CENTRE
NO.363, MANNAR ROAD, VEPPANKULAM
**VAVUNIYA**
Thimothi - 0766 58 23 29
Nelum - 0245 11 81 81

On View – 15th, 16th & 17th July
(Please refer the Udayan On 15th of July 2019 For the Full List Of Vehicles)

LOLC FINANCE

SCHOKMAN & SAMERAWICKREME
One Country. One Auctioneer. Celebrating 127 Years of Service Excellence.

## வடஇந்தியா, காசி, சீரடி, திருப்பதி யாத்திரை

ஆரம்பம்:05.09.2019 நாட்கள்: 16 யாத்திரிகர்: 15

**செல்லுமிமிடங்கள் சுருக்கமாக:** **டெல்லி:** நாராயணர்கோவில் மற்றைய இடங்கள் சுற்றிப்பார்த்தல். **ஆக்ரா**, தாஜ்மகால், **மதுரா**, கிருஷ்ணஜென்மபூமி, பிரேம்மந்திர்தரிசித்தல், **அலகாபாத்**, கங்கா, ஜமுனா, சரஸ்வதி, திருவேணிசங்கமம் வேறுஇடங்களும் காணலாம். **கயா** காலமானவர்களுக்கும் சிராத்தம் செய்யுமிடம், அகால மரணமானவர்களுக்கும் சேர்த்து செய்யலாம்.புத்தகயா, பலநாடுகள் கட்டிய புத்தாலயங்கள், **சீத்தாமடி**, சீதைதாயாருடன்பூமிக்குள்புதையுண்ட இடம். **காசி** விஸ்வநாதர் உட்பட 15 இடங்கள் காசியில் தரிசிக்கலாம் அத்துடன் **கங்கா பூசையும்** காணலாம். 3 நாட்கள் காசியில் தங்கல் பின்பு **மும்பாய்**, சீரடிபாபா, தரிசனம், சனிசிங்கனாப்பூர், சனிபகவான்கோவில், திரியம்பகேஸ்வரர்ஜோதிலிங்க தரிசனம் வேறு இடங்களும் காணலாம். பின்னர் **இராமேஸ்வரம்** தீர்த்தமாடி காசி யாத்திரை நிறைவு பின்னர் நவபாஷாணம் உத்திரகோசமங்கை, சிவன் ஆலயம், திருப்புலானி தரிசித்து மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர், தரிசனம் முடித்து **திருப்பதி** காளகஸ்திரி, அலமேலுமங்கா, திருத்தணி, தரிசனம் முடித்து **சென்னை** வருகை 1நாள் சென்னையில் சொப்பிங் முடித்து 21.09.2019 நாடுதிரும்பல்

**பெற்றுக்கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை:** 5 விமானப்பயணச்சீட்டு, மூன்றுவேளை மடப்பள்ளி ஆட்கள் சமைத்த சுத்தமான சைவ உணவு, 2பேருக்கு கட்டில் மெத்தை, வெஸ்ரன் கொமட் குளியலறை இணைந்த அறைகள், காப்பி, ரீ, குடிநீர், (மினரல் வாட்டர்), யாத்திரிகை முழுவதும் AC வாகன வசதி வீட்டிலிருந்து விமானநிலையம் செல்லவும் திரும்ப வீட்டிற்கு வரவும் வாகன வசதி (யாழ் கொழும்பு யாழ்) வாகன வசதி செய்து தரப்படும். விபரங்களை கேட்டறிந்து பதிவு செய்யவும்.

குறைந்த கட்டணம் நிறைவான தரிசனம்
"வந்தவரை கேளுங்கள் சென்றுவரலாம் வாருங்கள்"
"பூரண பாதுகாப்பான யாத்திரைப் பயணம்"

**கலாநிதி T. ஸ்ரீ ரெங்கநாதன் மகன் :ராஜன்**
Office: City Center Shoping Complex 3rd Floor, No.59, 3/6, Sea Street, Colombo - 11
Email: sriranganathan2601@gmail.com Facebook: sridevisriranganathan thuraiappa
Tel: 0777680102, 0777362154

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12 .07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.